பெரிய எழுத்து

மயிராவணன் கதை

தக்கப்படங்களுடன்

B.R.N. & SONS
MADRAS.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

பெரிய எழுத்து

மயிலிராவணன் கதை

[படங்களுடன்]

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள் விலாச அச்சகம்,

சென்னை—1.

இதன் விலை] — . [ரூபா. 1—00.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

மயிலிராவணன் கதை

காப்பு

விநாயகர் தோத்திரம்

கலி விருத்தம்

அயிலும்வில்லும்வில் லாகுமந்திரமும்
பயிலுமாபலம் பாரிற்படைத்தவன்
மயிலிராவணன் மாகதைவழுத்த
கயிலைமேவுங் கணபதிகாப்பதே.

பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கொங்கணங்கன்னட மீழமராடம்குருதங்கலியாணம்
குருநாடக்கையுரோமம் சகலமிடுகுச்சரிமச்சரியம்
வங்கமமாளவகவாரணமாதக மசரங்காம்பீலி
மலையாளங்கோவைத் துரைடில்லிவழங்கும்பைங்கோவை
சிங்களமெங்குந்துதிசெய்யும் ஸ்ரீராமன்கதையைச்
ஜெகதலமதில்வாழ் மானிடரெல்லாஞ்சிந்தைகளித்தன்பாய்
சங்கப்புலவோர்கூறியவாறே தமிழிற்கதைசெய்தேன்
மணிபாரதவெழுதிய வேங்கடராயன்றுள்சரணே.

அறுசீரடி யாசிரிய விருத்தம்

நாடியபொருள்கைகூடும் ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன் றேருள்வலிகூறுவோர்க்கே.

கலி விருத்தம்

வடகலைதென்கலை வடுகுகன்னட
மிடமிளபாஷைக ளியாவராயினும்
திடமுளரகுபதி ஸ்ரீராமன்றன்கதை
அடைவுடன்கூறிட வமரராவரே.

இதுவுமது

நன்மையுஞ்செல்வமு நாளுநல்குமே
துன்மையும்பாவமுந் துலைந்துதேயுமே
வன்மையுஜென்மமு மரணந்தீருமே
இம்மையில்ராமாவென் றெழுத்திரண்டினால்.

முகவுரை

கடல் புடைசூழ்ந்த நெடிய உலகத்திலே இராமாயணமென்று கூறத்தக்க இந்த வசன காவியமானது மானிடருக்கு சித்தி-முத்தி-பத்தி வைராக்கியங்களைத் தருதலாலும், ஆணவம்-மாயை-காமிய மென்னும் மும்மலங்களை நீக்கலானும், மெய்-வாய்-கண்-மூக்கு - செவி என்னும் ஐம்புலன்களைப் பரிசுத்தமாக்கலாலும், சுவை ஒளி - ஊறு-ஓசை-நாற்றம் என்னும் ஐம்பொருட்களைக் கொடுக்கலானும், பிறவிப்பிணிகள் தீர்க்கலானும், அதிக சிறப்புடையதால் நீடு புகழோங்கி நின்றது.

கதையின் வரலாறு

இந்த மயிலிராவண னென்கிற இராக்ஷதனுடைய சரித்திரத்தைச் சிற்றறி வீனனாகிய யான் கதைசொல் லப்போகிறேனென்று நாரத மகாமுனிவர் கௌதம ரிஷிக்குத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். கேளுமையா கௌதம ரிஷியே! ஆதிகாலத்தில் ஸ்ரீ ராமரானவர் தென்னிலங்கை யென்கிற பட்டணத் துக்கு அரசனாகிய இராவணனைச் சம்மாரஞ் செய்யும் பொருட்டாய் எழுபது வெள்ளம் சேனையுடனே தண்டு திரள்களோடு சுவாமியானவர் சமுத்திரக் கரையிலே போய் இறங்கிச் சேதுவையணைக்கட்டி தென்னிலங்கை கரையிற்சென்று இராவணனுடனே போர்புரிந்து கொண்டிருக்கிற காலத்தில் * அதிகாயன், மகாமாயன் திரும்பன், அகம்பன், கும்பகர்னன், சம்புமாலி, இந்திரஜித்து, முதலான பற்பல அரக்கர் சேனைகளும் இரணக்களத்திலே கால்வேறு, கைவேறு; மெய்வேறு, தொடைவேறு, இடைவேறு, முழங்கால்வேறு, கணுக் கால்வேறு இப்படி நானாவிதமாக வீராதி வீரனாகிய இராவணனுடைய பிள்ளைகளும், இராட்சத சேனை களும் பலவாறாகச் சிதைந்து மாண்டு போனார்கள்.

இந்த விசேஷமெல்லாம் இராவணன்கேட்டு கையி லிருந்த ஆயுதங்களைக் கீழேபோட்டு திடீலென்று சிங் காதனத்தின்மீ திருந்தபடியே பூமியில் விழுந்து அதிக விசாரத்தோடு மூர்ச்சை அடைந்தான். சற்றுநேரஞ் சென்றபின் மறுபடியும் இராவணன் மூர்ச்சை தெளிந் தெழுந்து அழுது, கடவுளைத் தொழுது, மனமென்கிற வில்லைக் குழைத்து மந்திரிமார்களை யழைத்து வாருங் கள் மந்திரிமார்களே! இராமலட்சுமணை ளென்கிற இரண்டுமனிதரும், அநேக வானரச்சேனையோடு கூடி ஓடிவந்து யுத்தங்களானவிடத்திலே அதிகாயன், மகா

* அதிகாயன் - இராவணன் மக்களிலொருவன்.

மாயன், நிகும்பன், அகம்பன், கும்பகர்ணன், சம்பு மாலி இந்திரஜித்து, மயேந்திரஜித்து முதலிய தம்பி மாரும், அநேக புத்திரர்களும் இரதகஜதுரகபதாதி களும், யானையும் சேனையும் இழந்ததுமாத்திரம் என்ன புதுமையுடையது? இந்தப் பொல்லாத காயமானது நில்லாமலும், ஒருத்தரோடும் சொல்லாமலும் போகு மென்றெல்லோரு மறிவதுபோல் நாமுமறிந்திருந்தும் தம்பிமார்களை யிழந்து தனியாயிருந்து அரசாட்சி செய் வதெப்படி என்று விசனப்படுகிறபோது மந்திரிகள் இராவணேஸ்வரனைப் பார்த்து, ஓகோ! வாருமையா சுவாமி! நீரே இப்படி விசாரப்பட்டால் அடியேங்கள் எப்படி பிழைப்போம்; இனிமே லாகிறதென்ன? இப் போது இலங்கையிலுண்டான யானை சேனை, ஒட்டகம் முதல் படைகளையுங் கூட்டி, இந்த ராமலட்சுமணு ளுக்கு எதிராகக் காட்டி, நம்முடைய சௌரியங்களைத் தீட்டி, வானரச் சேனைகளை யோட்டி, மிதமாக எண்ணி அதம்பண்ணி வருவோம் அஞ்சாதே சுவாமியென்று, தைரியங் கூறினர். இதுகளை யெல்லாங் கேட்ட ராவ ணன் மகிழ்ந்து புகழ்ந்து மந்திரிகளைப்பார்த்து கர்வங் கொண்டு நல்லது சரிசரி ஆமென்று பலவாருய்க் கூறி ஆணவமீறி தன்னுடைய இராணுவங்களாகிய யானை குதிரை ஒட்டகம் முதலிய சதுரங்க சேனைகளையும் வரும்படி ஆக்யாபித்து, இராவணனுனவன் வெளியில் வந்து தன்னுடைய தேரின்பேரிலேறி ஜயஜய வென்று கூறிச் சகல ஆடம்பரத்துடனே யுத்தகளத் தில் வந்து நின்று கொண்டு இராமசுவாமியைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லத் தொடங்கினன்.

ஓ ஓ மானிடர்களே! மரித்துப்போன பிணங் களே நற்குணமில்லாக் குணங்களே! ஈக்கள் மொய்க் கும் நிணங்களே! என் தம்பிமார்களை நீங்கள் இருவரு மல்லவோ கொன்றீர்கள்; நல்லதாகட்டும். இதோ ஓர் நொடியிலே உங்களைக் கொல்லுகிறேன்; அம்புக ளாலே வெல்லுகிறேன்; எமனுக்கிரை கொடுக்கும் படி செய்கிறேன்; உங்கள் சரீரத்தை சல்லடைக் கண் கள்போல் துளைக்கிறேன் என்றுர்ப்பரித்து பற்களை



நறநறவென்று கடித்து மீசை துடித்து வில் வளைத்து நாணியேற்றி அண்டகடாகமெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கும்படி உறுத்தினன். இராமசுவாமிக்கு கோபம் வந்து தண்டத்தை வளைத்து பாணப்பிரயோகஞ் செய்கிறபோது அநேகமாயிரஞ் சேனைகளும். காலாட்களும் யுத்த கூட்டத்திலே இறந்து போய் இராவணனைவன் ஒருவனுய் நின்று யுத்தம் பண்ணுகிறபோது இன்னுமனேகஞ் சேனைகளும் இராமசுவாமி பாணத்தினு லடிபட்டு மூறிந்தது, இலங்கை தீவுக்கரையிலே தன்னுடைய அரண்மனையிலே போய் அந்தரங்கத்திலே படுத்துக்கொண்டு அதிக விசாரத்துட னிருந்தான். அப்படி யிருக்கிற காலத்தில் பிரகஸ்தனென்கிற மந்திரி இராவணனண்டையில் வந்து விசாரமா யிருக்கிறவனைப் பார்த்து, வாருமையா சுவாமி! நீர் மகா பராக்கிரமசாலியா யிருந்தும் இப்படித் துயரப்பட்டிருந்தால் ஆகிற தென்னவென்று சொல்லுகிறபோது இராவணன் சொல்லுகிருன்.

வாரும் பிள்ளாய் மந்திரி பிரதானி! தண்டத் தலைவனே! நான் சீதையைக் கொண்டுவந்த நிமித்தமாக இலங்கையில் இல்லாத அனுஷ்டம் வந்து தம்பிமார்களாகிய கும்பகர்ணன், இந்திரஜித்து முதலானவர் போய் நாஞெருவனுமே னின்றேன் ; இனிமேலிருந்து துயரம் பொறுக்கப்போகிற தில்லையென வெகு விசனமாக அழுகிறபோது மந்திரி சொல்லுகிருன். அந்த இராம லட்சுமணனை ஒருவராலும் வெல்லப்போகாது; அந்த சீதையைக் கொண்டுபோய் இராமசுவாமி முன்னே விட்டு சரணுகதி யென்று சொன்ஞல் தயவு செய்வானென்று சொன்ன மாத்திரத்தில் இராவணன் சொல்லுகிருன்; வாரும் பிள்ளாய் பிரகஸ்தனே! எனது தம்பியாகிய விபீஷணனங்கே யிருந்துக் கொண்டு இத்தனைபேரையுங் கொல்லச் சொல்லுகிறதிஞல் சீதையைவிடுகிறதுமில்லை; அப்படிப்பட்ட தம்பிமார் போன பிற்பாடு இப்படிப்பட்ட காரியம் நடவாது; அவர்களுக்கு எந்த வழிபாச்சுதோ அந்த வழி நமக்குமாகட்டும், வேறே யோசனையில்லை யென்று தன்னு

டைய துயரமெல்லா மகன்று திடஞ்சொல்லி யழுது மூர்ச்சை தெளிந்தெழுந்து சற்றுநேரஞ் சும்மா விருந்தான். பின்னர் இராவணனைப் பார்த்து மந்திரி சொல்லுகிறான்: வாருமையா சுவாமி! ஓர் உபாயமிருக்கிறது அவர்களை ஜெயிக்கமுபாய மெப்படியென்றால், பாதாள இலங்கையிலே உம்முடைய தாயாதி வர்க்கத்திலே தம்பியாகிய மயிலிராவணனிருக்கிறான். அவனோ மகாமாயா விநோதி; கபடநாடக சூஸ்திராவதாரி; சதுர்வித உபாயி; அவனை மூவராலுந் தேவராலும் யாவராலும் ஜெயிக்கப் போகாது; மகா சுத்தவீரன்; சத்துருசங்காரன்; அப்பேர்ப்பட்டவனிருக்க, உமக்கு யோசனை யென்ன? அவன் இந்த எழுபதுவெள்ளஞ் சேனையையும் ஜெயிக்க வேண்டுமென்றாலும் ஜெயிப்பான்; அல்லது ராமலக்ஷ்மணனை யிருவரையும் பாதாள இலங்கையிலே காளிக்குப் பலியிடச் சொன்னாலும் பலியிடுவான். அப்பேர்ப்பட்ட பராக்கிரம சாலியாகிய தம்பி யிருக்கும் போது ஏன் துயரப்படுகின்றீர்; சீக்கிரத்திலே மயிலிராவணனை யழைத்து எவ்விதத்திலேயும் இராமலக்ஷ்மணனை ஜெயிக்க வேண்டுமென்று பிரகஸ்தனென்கிற மந்திரி கூற, இராவணன் செவியிலே மாமரத்திலே வயிரவாணி கடாவினாற்போலு மேறிற்று.

இராவணன் இது மெய்தான் நல்ல யோசனை செய்தீரென்று பிரகஸ்தனுக்கு வேண்டிய வெகுமதி கொடுத்து கனகாபிஷேகஞ் செய்து பின்பு இராவணன் சீக்கிரத்திலே மயிலிராவணன் வரத்தக்கதாக மனதிலே நினைத்தான். அப்போது பாதாள இலங்கையிலே தேவேந்திரன்போல் கொலுவிருக்கிற மயிலிராவணன் யோசனை செய்து நம்முடைய தமையனாகிய இலங்காபுரியை யாள்கின்ற இராவணேஸ்வரனுக்கு என்ன ஆபத்து வந்ததோ தெரியாது: அவன் வெகு நாளாக நம்மை நினைத்ததில்லை; ஆதலால் என்ன வேலையிருந்த போதிலும் இப்போதே போய் உதவி செய்ய வேண்டுமென்று மனதிலே யெண்ணி, யோசனை செய்து மந்திரிகளை யழைத்து, அப்பா நான் இலங்கைக்குப் போய்வருகிறேன்; நான் வருமளவும் நீங்கள்

சாவதானமாகப் பார்த்திருங்களென்று சொல்லி விட்டு, மயிலிராவணன் இலங்காபுரி பட்டணத்துக்கு வந்து விட்டான். அந்த இலங்கையி னதிசயமெல்லாம் பார்த்தான்; எல்லாம் பாழாயிருப்பதைப் பார்த்துக் கொண்டு அந்தப்புரத்திலே போனான். இராவணனொருவனு யிருக்கிறதைக் கண்டு மயிலிராவணன் தமையனாகிய இராவணேஸ்வரனுக்குச் சாஷ்டாங்க தெண்டனிட்டு ஒரு வார்த்தை சொல்லுகிறான்: வாருமையா சுவாமி! பட்டணமெல்லாம் பாழா யிருக்கிறதென்ன? இதுவெல்லாம் உண்மையாகச் சொல்ல வேண்டுமென்று அஞ்சலிசெய்து கேட்க, இராவணன் சொல்லுகிறான்.

வாரும் பிள்ளாய் தம்பி! முன்னாலே தசரத மகாராஜாவினுடைய பிள்ளை இராமலக்ஷ்மண ளிருவருந் தண்டகாரணிய வனத்தில் வந்திருந்தார்கள். அப்போது நமது தங்கை சூர்ப்பநகையை மானபங்கஞ் செய்தார்கள். அவளிங்கே வந்து முறையிட்டாள். அப்போது நான் போய் அந்த இராமனிட தேவியாகிய சீதையை யெடுத்துக்கொண்டு வந்தேன் அன்று முதல் இலங்கையிலே அனுஷ்டம் வந்தது. பின்னை அநுமானென்ற குரங்கு சீதையைப் பார்க்கவந்த விடத்திலே பட்டணமெல்லாம் சுட்டுக் கோட்டைப் பரப்பி அட்சய குமாரனேயுங் கொன்று அநேக இராக்ஷதரையுங் கொன்று விட்டுப் போயிற்று, பின்பு இராமசுவாமி அவர், தம்பி இலட்சுமணன், இன்னுஞ் சுக்ரீவன், அங்கதன், நீலன், குமுதன், சாம்புவன, அநுமார் எழுபது வெள்ளஞ் சேனேயுங் கூட்டி வந்து சேதுவை அணைக்கட்டி இலங்கையிலே வந்து யுத்தங்கள் செய்து அதிகாயன், மகாமாயன், இந்திரஜித்து, கும்பகர்ணன் அநேக இராட்சதர்களும் மாண்டு போனார்களென்று சொன்ன மாத்திரத்திலேயே இந்த வசனங்களை மயிலிராவணன் கேட்கவே மிகவும் துயரப்பட்டு, ஒரு பெரிய விருட்சமாய் சகோரபட்சியாய் கிளைகள் இலைகள் பழங்களுடனே யிருக்கப்பட்ட விருட்சமானது அடியோடே அறுத்துவிட்டா லெவ்வாறு விழுமோ, அவ்வாறு போலக் கீழே விழுந்தழுது கடவுளைத் தொழுது

அணிந்து பணிந்து கோரந்தணிந்து ஒருவாறு மனந் துணிந்து சொல்லுகிருன்.

வாருமையா சுவாமி! நீர் சகலரையுங் கொன்று வென்று சுவர்க்கத்துக்கு அனுப்பின பின்பு எம்மை யழைத்தீர்; முன்னதாகவே எனக்கு இவ்விதமென்று தெரியாமற் போயிற்றே? இப்போது நான் செய்ய வேண்டியதென்ன வென்றுகேட்க, இராவணேஸ்வரன் கூறுகிருன். கேளும் பிள்ளாய் தம்பி! இராம லக்ஷமணுள் இரண்டுபேரும் மகா பராக்கிரமசாலிகள், அவர்கள் வானரசேனைகளுடனே நம்முடைய தம்பி விபீஷணனையு மழைத்துக்கொண்டு இலங்கை யெல்லாஞ் சுட்டு அனர்த்தஞ் செய்துவிட்டார்கள். இந்த இராம லக்ஷமணுளை ஒருவராலேயுஞ் ஜெயிக்க முடியாது. அனேகமான யுத்தங்கள் செய்து இராமபாணத்தின் முன்பாக நிற்கக் கூடாமல் முறிந்தோடி வந்தேன். அவர்கள் மனிதரூபமா யிருக்கவில்லை. அவர்களைச் சம்மாரஞ் செய்ய எவ்வித உபாயமுண்டோ அவ்வித உபாயஞ் செய்யும் பிள்ளாயென்று இராவணன் சொல்ல மயிலிராவணன் சொல்லுகிருன்: கேளுமையா சுவாமி! அந்த எழுபது வெள்ளஞ் சேனையையும், இராம லக்ஷமணு ளிரண்டு பேரையும் ஆகாய மார்க்கம் அதிக விநோதத்துடனே கொண்டு போய் பாதாள லங்கையிலே என்னுடைய காளிதேவிக்கு பலி கொடுக்கிறேனென்று சொலலி உறுதிப்பாடு செய்துக்கொண்டு தன்னரண்மனை வந்து சேர்ந்து மந்திரிகளோடு இலங்கைக்குப் போனதும், அவ்விடத்தில் நடந்த விவரமும், நான் இராவணனுக்குச் சபதம் செய்து வந்ததும் இதுகளெல்லாம் சவிஸ்தாரமாகச் சொல்லி இனிமேல எப்படி ஜெயிப்போமென்று மந்திரிமார்களோடு ஆலோசனை செய்துக்கொண்டிருந்தான்.

இங்கே இப்படி யிருக்கும்போது சீதாதேவி யம்மனருகில் காத்துக்கொண்டிருக்கிற விபீஷணருடைய பெண் திருச்சடையம்மன் மனதிற் கவலைகொண்டு மயிலிராவணன் வந்து இராவணனுடனே பிரதிக்

கினை செய்துக்கொண்டு போன விசேஷமெல்லாங் கேட்டு; இனி என்ன செய்யப் போகிறோமென் றெண்ணி, நம்முடைய பிதாவாகிய விபீஷணருஞ் சுவாமியைச் சரணாகதி என்றடைந்திருக்கிறாரே அவருடன் இந்த விசேஷமெல்லாம் யார் அறிவிக்கப் போகிறார்களென்று மனங்கசிந்து நசிந்து அதிக துக்கத்துடனே அழுதுக்கொண்டே அவன் மாயா விநோதி, கபட நாடக சூஸ்திராவதாரி யென்று யோசனை செய்துக்கொண் டிருக்கிறபோது வாயு பகவானவர் அவ்விடத்திற்கு வந்தார். அப்போது திரிச்சடையானவள் பார்த்து, வாருமையா சுவாமி! வாயுபகவானே! நானொரு விசேஷஞ் சொல்லு கிறேன். அதைக் குறித்துச் சாவதானமாகக் கேளும், அதென்னவெனில்: இந்த அதிசயமான விசேஷத் தை யாதாமொருவரு மறியக்கூடாதாகையாலும், நீர் இராமசுவாமிக்கு உயிர்த்துணைவ ராகையாலும் நான் உம்முடனே சொல்லுகிறேன். நீர் தவிர மற்றொருவரு மறியக் கூடாது: அது விபீஷணருக்கு மாத்திரந் தெரியுமாகையால் இந்த மயிலிராவணன் ராவண னுடன் பிரதிக்கினை செய்துக்கொண்டு போன விஷய மென்னவென்றால், இன்றைய இரவில் பதினைந்து நாழிகைக்குமேல் அந்த இராமலக்ஷ்மண ளிருவரையும் கொண்டுபோய் பாதாள இலங்கையிலிருக்கும் தன்னு டைய காளிகாதேவிக்கு பலியிடுகிறேனென்று பிரதிக் கினை செய்துகொண்டு போனான்: அவன் மாயா விநோதி. ஒருவராலேயுஞ் ஜெயிக்கக்கூடாதவன் ; அவன் எந்த ரூபமெடுத்து மோசம் பண்ணுவானோ தெரியாது அவனுடைய கபடமெல்லாம் விபீஷண ருக்குத் தெரியவரும். அதெல்லாம் அவருக்குச் சொல்லி எவ்வித ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமோ அவ்விதமாக யிருக்கச் சொல்லி வரவேண்டுமென்று சொன்ன மாத்திரத்தில் வாயுபகவானும் அப்படியே சம்மதித்து போய் வருகிறேனென்று திருச்சடையா ளிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வாயுபகவான் விபீஷணரிடம் போயினர். விபீஷணர் வாயுபகவா னைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாருமையா சுவாமி வாயுபகவானே! நீர் எங்கே வந்தீர்; நாம் உம்மைக் கண்டு வெகு நாளாச்சுது; நீர் வந்த சங்கதியைத் தெரியப்படுத்துவீ ரையா வென்று கேட்க, வாயுபகவானனவர் சொல்லுகிறார் : கேளும் விபீஷணரே? மயிலிராவணனை யழைப்பித்து, தன்னுடைய துயரங்களை யெல்லாஞ் சொன்னபோது, மயிலிராவணன் சொல்லிய தென்னவென்றால், யுத்தஞ் செய்வதற்கு முன்னே சொல்லாமல் இப்போது காரியம் முடிந்தபிறகு என்னை யழைப்பித்தீர். ஆகிலும் பெரிதல்ல; உன் பிள்ளையாகிய அட்சயகுமாரன், அதிகாயன், மகாமாயன், இந்திரஜித்து, கும்பகர்ணன் இவர்கள் முதலான சேனைப் படைத்தலைவர்களைக் கொன்றவர்கள் இராம லட்சுமணள் தானே? அப்படிப்பட்ட பராக்கிரமசாலிகளான அவ்விருவரையும் இன்றையத்தினம் இரவில் பதினைந்து நாழிகைக்குள் எனது பாதாள இலங்கைக்குக் கொண்டுபோய் என்னுடைய காளிகாதேவிக்குப் பலிகொடுக்கிறேனென்று கோபதீப்தனுகி சபதங்கூறி தனக்கு வேண்டிய திரவியங்களும் பெற்றுக்கொண்டு போனனும்; இந்த சமாச்சாரங்களை உனது குமாரத்தி திரிச்சடை கேட்டுக் கொண்டிருந்து இவ்விடத்தில் ஒருவரு மில்லையே யென்று துயரப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் நான் அவ்விடத்திற்குப் போனேன். அப்போது திரிச்சடையானவள் என்னை அருகினி லழைத்து, சுவாமி! உம்மாலே ஒரு காரியமாக வேண்டுமென்று • இந்த விசேஷங்களை உமக்குச் சொல்லி இராமசுவாமிக்கு அறிக்கை செய்யும்படி சொன்னளென்று சொல்லி விட்டு வாயுபகவான் தனது இருப்பிடத்திற்குப் போய் விட்டார்.

வாயுபகவான் போனபின்பு விபீஷணர் அதிக விசாரத்தை யடைந்து இதற்கென்ன செய்வோமென்று மனமுடைந்து அந்த மயிலிராவணன் கபடநாடக சூஸ்திராவதாரி நானாவித ரூபாதிகாரி என்னைப் போலும் ரூப மெடுத்து மோசம் பண்ணுவானென்று மிகவு மெண்ணி யோசனை பண்ணி சுவாமி சபையிலே எவ்

வாறு சொல்வோமெனக் கருத்திலிருத்தி இருந்தனர். சுக்ரீவன் அங்கதன் சாம்புவன் நீலன் நளன் அநுமார் இவ்விதமான எழுபது வெள்ளஞ் சேனைகளுடனே கொலுவா யிருக்கிற சமயத்தில் ஸ்ரீ ராமர் விபீஷணனைப் பார்த்து, ஓ விபீஷணரே! உம்முடைய முகமானது பூரணச் சந்திரன்போலும் மலர்ந்த தாமரைப்போலு மிருக்கப்படா நின்றது; அது இன்றைக்கு யாது காரணத்தால் கருகருத்து அகம் வெறுத்துக் கருகி மனமுருகி துயரம் பெருகி அதிக விசாரமடைந்திருப்பதேன் என்று ராமசுவாமி கேட்டபோது விபீஷணன் பயந்து திடீரென்றெழுந்து கைகட்டி வாய்புதைத்து சரீரம் பதைத்து, மெள்ள மெள்ள கிட்டச் சென்று சுவாமியைப் பார்த்து, நடந்த விசேஷங்கள் யாவு மொளியாமல் சொன்னார். அவைகள் யாவும் இராமசுவாமி கேட்டு ஆலோசனை செய்து ஜாம்புவந்தர் முதலாகிய சகலரையு மழைப்பித்து விபீஷணர் கூறிய விசேஷ மெல்லாஞ் சொல்லி, இன்று இராத்திரி பதினைந்து நாழிகை யளவில் மயிலிராவண னென்கிறவன் நம்மை யாவரையும் மோசம் பண்ணி அவனது பாதாள விலங்கைக்கு கொண்டு போகிறேனென கூறிப் போனானும்; அதற்கென்ன உபாயமுண்டோ, அவ்வித உபாயங்கள் செய்யுங்களென்ன, அவ் விசேஷத்தைக் கேட்ட, சுக்ரீவன் விபீஷணரைப் பார்த்துச் சொல்லுகிறான்: வாருமைய ா விபீஷணரே! அந்த மயிலிராவண னென்பவன் யாவன்? அவனிருப்பிட மெங்கே அவனது பூர்வோத்திரமென்ன? அவன் இராவணனுக்கு எவ்விதமான பாத்தியஞ் சொல்லுமென்று கூற, அதற்கு விபீஷணர் சொல்லுகின்றார்.

கேளும் சுக்ரீப சற்பாத்திரனே! அந்த மயிலிராவண னென்பவன் பாதாள லங்கையிலே யிருக்கிறவன் ராவணனுக்குத் தாயாதி வர்க்கத்தில் தம்பியாக வேண்டும். அவனோ மாயாவிநோதி கபடநாடக சூஸ்திராவதாரி நானாவித ரூபாதிகாரி அவனை யொருவராலுஞ் ஜெயிக்கப் போகாதென்று விபீஷணர் சுக்ரீபனுக்குச்



சொல்ல, அவ்விசேஷமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து யோசனை செய்து இதற்கு உபாயம் அநுமாராலேயாக வேண்டும் என்று நிச்சயம் பண்ணி, சுவாமி அருகில்போய் சுக்ரீபன், அங்கதன், விபீஷணர், சாம்புவர் இந்த நாலுபேரும் சுவாமியுடனே என்ன சொல்லுகிறார்களென்றால்: ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராய் விளங்கும் இராமசுவாமி பெருமானே! இந்த காரியமெல்லாம் அநுமார் ஒருவராலேயாகவேண்டுமே. யொழிய மற்றொருவராலே யாகாதென்று சொன்னார்கள். இந்த விசேஷமெல்லாம் அநுமார் கேட்டு ஒன்று மறியாதவர்போல் தலையைக் குனிந்துக்கொண்டிருந்தார். அப்போது சுவாமியானவர் வாரும் அநுமாரே! விபீஷணர் கூறிய விசேஷத்துக்கு என்ன உபாயமுண்டோ அவ் வுபாயங்களைச் செய்யுமென்று மறுமொழி கொடுக்க, அநுமார் கேட்டு, அச்சமென்பதை மண்ணிற்போட்டு ஆரவாரித்து மனம்பூரித்து சந்தோஷக் கடலிற்புகுந்து சிங்கம் போலத் துள்ளி இலங்கை ராவணனைத் தள்ளி அந்த மயிலிராவணன் சிரசைக் கிள்ளி அவனுதிரத்தைக் கையினாலள்ளி தாகந்தீர்ந்து நான் மகிழ்ச்சி கூர்ந்து வருகிறேனென்று சபதங்கூறிப் பகை மீறி சுவாமியைப் பணிந்து குனிந்து வந்தனையோடு சிந்தை செய்து கந்த புஷ்பங்கள் காலிற்பெய்து அஞ்சலி செய்து வணங்கி யொதுங்கி பதுங்கி ஆடி; பாட்டுகள் பாடி; பூமலர் கூடி; கடலை நாடி; அவர் திருவருள் தேடி அப்போது ஓடிவந்து நின்றார்.

அப்போது விபீஷணர், சுக்ரீபர், சாம்புவர் இந்த மூன்றுபேரும் அநுமாரைப் பார்த்து ஒரு விசேஷஞ் சொல்லுகிறார்கள் : நீர் மகா பராக்கிரமசாலியல்லவோ? உமக்கு ஈடு ஒருவருமில்லை; நீர் ஆகாயம் பூமி பாதாளத்திற்கு மொன்றாய்ச் சரீர மெடுக்கவேண்டுமென்றாலு மெடுப்பீர், நீர் மகா புருஷசிங்கம், நாங்களென்ன சொல்லப் போகிறோம். இன்றிராத்திரிக்கு மாத்திரம் உம்முடைய வாலினாலே இந்த எழுபது வெள்ளஞ் சேனைகளுக்கும் கோட்டையிட்டுக் கொண்

டிருந்து மகா ஜாக்கிரதையாகக் காக்க வேண்டுமென்று அவர் சொன்ன மாத்திரத்தில், அந்த அநுமா ரானவர் கேட்டு மகிழ்ந்து அப்படியே யாகட்டு மென்று சொன்னார், இப்படி யிருக்கிற சமயத்தில் சூரியபகவானானவர் அஸ்தமாயினார். உடனே அநு மாரானவர் எழுபதுவெள்ளஞ் சேனைகளும் ஒன்றாகச் சேர்த்து தம்முடைய வாலினாலே கோட்டையிட்டார். அக்கோட்டையானது எப்படியிருந்ததென்றால் : ஆகா யம் பூமி பாதாளத்துக்கு மூடுருவத்தக்கதா யிருந்தது. அக்கோட்டை வாசல் எங்கே யென்றால் : அநுமா ருடைய வாயிலே புகுந்து செவியிலே புறப்பட வேண் டும். மற்றப்படி வாசலுமில்லை; வழியுமில்லை. ஈ யெறும்பு நுழையப்போகாது ; அப்படி நுழைய வேண்டுமென்றாலும் இடமில்லை வாசலுடனே வால் நெருக்கமாகவும் கோட்டையிட்டுக் கொண்டு உள்ளே இராமலக்ஷ்மணாள் இரண்டுபேரும் ஓர் பர்ணசாலையில் சயனித்துக்கொண் டிருந்தார்கள். அத்தருணத்தில் விபீஷணருஞ் சுக்ரீபரும் யோசனை செய்து இன்றிர வில் நாலுஜாமம் மகா ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று சொல்லி, அங்கதனை யழைத்து அவ னோடுகூட இலட்சுமணரையுங் கூட்டி; விருதுமணி களை யாட்டி; சந்தடிகளைக் காட்டி; சிங்கநாதங்களை மீட்டி; நித்திரை என்பதை யோட்டி; பற்பல வாத்தி யங்கள் முழங்கவும்; தர்மதானம் வழங்கவும்; வேதியர் களாடவும்; வித்துவான்கள் பாடவும் ; இப்படி நானா வித வேடிக்கையோடு மகா ஜாக்கிரதையாய் விழித் திருக்கும்படியாகக் கட்டளையிட்டு இந்தக் காரியத்தில் யாராவது அசட்டையா யிருந்தால் நம்முடைய ஆக் கினை தெரியுமோ வென்று சொல்லி கட்டு திட்டஞ் செய்து, நளனை யழைத்து அவனுக்கும் அவ்வாறே கட்டளையிட்டருளி; சுக்ரீவன் நீலன் இவர்களையும் அழைப்பித்து தண்டம், வில், வேல், வாள், யானை, குதிரை, ஒட்டகம் முதலிய பலவித ஆயுதங்களையும் கொடுத்து இன்றிரவில் தென்றிசைப் புறத்தில் பதன மாகக் காருங்களென்று கட்டளையிட்டருளி, வீரனான குமுதனை யழைத்து அவனுக்கு துணைக்கருவியாக

இரண்டு லக்ஷம் வானரசேனைகளைக் கூட்டி சிறிது வாத்தியங்களைக் கொடுத்து, அப்பா! நீ மேற்குத் திசைப்புறத்திலே இரவில் நாலுஜாமமும் ஜாக்கிரதையாக காருங்களென்று ஆக்கினையோடு தாக்கீது செய்து சாம்புவந்தனை யழைத்து, அப்பா! நீ வடக்குத் திசைப்புறத்தில் பதனமாகக் காருமென்று சட்டமோடு திட்டஞ்செய்து, கிழக்குத் திசைப்புறத்திலும் அவ்வாறே ஆவலோடு காவலாளிகளை சேவகஞ் செய்ய திட்டமோடு கட்டளையிட்டருளி, அங்கதன், நீலன், குமுதன், சாம்புவந்தன் இந்த நாலுபேரும் அவரவர் திசைப்புறத்திலே ஜாக்கிரதையாக காக்கிற சமயத்தில் விபீஷணரானவர் அவரவற்கு எச்சரிக்கை சொல்லிக்கொண்டு அந்தக் கோட்டையை சுற்றிக்கொண்டு வந்தார். இப்படியிருக்கிற சமயத்திலே அன்றிரவில் பதினைந்து நாழிகையாச்சுது. இனிமேல் மயிலிராவணன் கதையைக் கூறுகிறேனென்று நாரதர் சொல்லுகிறார்: கேளுமையா கௌதமரிஷியே! இப்படியாக இவர்களிருக்கிற காலத்தில் பாதாள இலங்கையை யாளுகிற மயிலிராவணன் அன்று இராத்திரியிற் பதினைந்து நாழிகையில் ஆலோசனைகள் செய்து தன்னுடைய அஞ்சனஸ்திரத்தை நெஞ்சிலே நினைத்து பிராமணரை யழைத்து சாஸ்திரங் கேட்டு தன் மனதில் சித்தனாகிய மந்திரிகளை யழைத்து கெட்டிக்காரராக நான்கு பேரை நியமித்தான். அவர்கள் யாரென்றால்: சதுரனென்றும் சாத்தியனென்றும், சகலப் பிரவாணனென்றும், மாயா விநோதனென்றும் நான்கு பேரையுமுடையவர்கள். இந்நான்குபேரையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அப்போது தனது பத்தினியாகிய வர்னமாலிகை தன்னுடைய புருஷனாகிய மயிலிராவணன் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு விசேஷஞ் சொல்லுகிறாள்: வாருமையா சுவாமி என் பிராணநாதா! நீரித்தனை சேனையுடன் எங்கே பயணமென்று கேட்க, மயிலிராவணன் சொல்லுகிறான்: கேளும் பெண்ணே வர்னமாலிகையே! இலங்கையிலே ராமலக்ஷமணாள் இரண்டு மனிதர் வந்து எழுபது வெள்ளஞ் சேனையுடனே நமது தமையனாகிய ராவணேஸ்

வரனுடைய தம்பி கும்பகர்னனையும், குமார வர்க்கங்களையும், சகலவிதராக்ஷதாளையும் அதம்பண்ணி போட்டார்கள். அப்படிப்பட்ட மனிதர்களைக் காளிக்குப் பலி கொடுக்கிறேனென்று சபதம்கூறி வந்தேன், அந்தச் சபதம் தப்பாமல் அவர்களிரண்டு பேரையும் கொண்டு வரவேண்டுமென்று போகிறேனென்றுகூற, இதுகளைக் கேட்ட வர்னமாலிகை சொல்லுகிருள்: வாருமையா சுவாமி பிராணநாதா! நானொரு விசேஷஞ் சொல்லுகிறேன் கேளும்: அந்த ராமலட்சுமண ளிரண்டு பேரையும் மனிதரென்றெண்ண வேண்டாம். சாக்ஷாத் வைகுண்டவாசியாகிய ஸ்ரீ மகாவிஷ்ணுவென் றெண்ணிக்கொள்ளும்; அவர்களை ஒருவராலுஞ் ஜெயிக்கப் போகாது இராவணனுக்குக் கெட்டுப்போக காலம் வந்தபடியால் சீதையென்கிற அக்கினியைக் கொண்டு வந்து சிறையில் வைத்திருக்கிருன். லங்கைக்கு அனர்த்தம் தேடிக்கொண்டான். அவர்கள் புத்திர மித்திரர்களையும் கொன்றுபோட்டு தானும் சாக வேண்டுமென்று திரிகிருன். அவனும் ஜெயிக்கப் போகிறதில்லை; விபீஷணரானவர் தன் தமையனுகிய இராவணனுக்குச் சொல்லத்தகுந்தபுத்தி யெல்லாஞ் சொன்னர். சொன்னவிடத்திலே அவன் தம்பி புத்தியைக் கேளாதபடியினலே இப்படிக்கெல்லா மாயிற்று; அவன் நல்ல புத்திமானனபடியால் நாமிங்கேயிருந்தால் அதமாய்ப்போவோமென்று கருதி, அந்த இராம சுவாமியைச் சரணமென் றடைந்தார். அவருக்கு இலங்கை ராஜ்யத்தை பட்டாபிஷேகஞ் செய்யப் போகிருர். சுவாமி! நீரும் போனல் உம்மையும் மேன்மையாய்ப் பூப்போல் வைத்துக் கொண்டிருப்பார். அடியாள் சொல்லுகிற காரியத்திற்கு விவாதம் செய்யப் போனல் உம்முடைய காரியம் யாவும் விபரீதமாகும். எந்தையனே! என்னுயிர் துணைவா! நீர் இங்கே தானே யிருந்தால் பாதாள லங்கையாண்டு சுகமாயிருக்கலாம். அங்கே போகிறது சரியான நியாயமல்லவென்று அநேகவிதமாக நல்லமார்க்கங்கூறி அவனது இருகையும் பிடித்துக்கொண்டு அந்தப்புரம் போவோமென்று பலவாருகத் தடுத்து, நற்புத்தியைப் போதித்

துப் பன்முறையும் கூறினள். இவளது வார்த்தையைக் கேட்டு அந்த கொடும்பாவியாகிய மயிலிராவணன் சீறி கோபமீறி பதிவிரதா சிரோன்மணியான வர்னமாலிகை சொல்லைத் தள்ளிப்போவதே உத்தமமென்று துள்ளிவிழுந்து எழுந்து மந்திரிகளை கூட்டி சேனைகளை யோட்டி விருதுவண்களை யாட்டி சவுரியங்களைக் காட்டி நடந்தான்.

வர்னமாலிகை மறுபடியும் புருஷனைப் பார்த்து தேகம் வியர்த்து, சுவாமி! நான் வரும்விதி சொன்னேன். நீர்படுந் துன்பத்தைப் படுமென்று கூறி, அவள் புத்திமாறி, அவரைத் தூறி, அந்தப்புரம் வீறி, பஞ்சணையேறி வீற்றிருந்தாள். மயிலிராவணன் கரிபரி முதலிய சேனாதிபதிகளை அழைத்துக்கொண்டு தன்னுடைய அரண்மனை விட்டு ஆயுதங்களைத்தொட்டு வாசல் கடந்து நடந்து அக்கினி கோட்டைக்கு வந்து யோசனை செய்து அவ்விடம்விட்டு மேல் சமுத்திரக் கரைவெளியே ஒரு விடத்திலே வந்திருந்து தனது நாலு மந்திரிகளைப் பார்த்து, ஒரு விசேஷஞ் சொல்லுகிறான்: மந்திரிகளே! இனிமேல் ராமலக்ஷமணு ளிருவரையும் யாவர் பிடித்துக்கொண்டு வருவீர்களென்று வினவ சதுரவென்னும் மந்திரி எழுந்து காலில் விழுந்து பயந்து மயிலிராவணனைக் கண்டு அஞ்சலி கொண்டு சொல்லுகிறான்: வாருமையா சுவாமி! என்னை அனுப்பினால் அந்த எழுபது வெள்ளஞ் சேனைகளையுங் கொன்று வென்று அங்கே நின்று தின்று வருகிறேன்; அவர்களிரண்டு பேரையுங் கொண்டுவரச் சொன்னாலுங் கொண்டு வருகிறேனென்று மறுபடியுஞ் சொன்னான். இவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் மயிலிராவணன் சதுரனுக்குச் சகல வெகுமதிசெய்து பாக்கு வெற்றிலைக் கொடுத்து சீக்கிரத்தில் அனுகூலஞ்செய்து வாருமென்று அனுப்பிவைத்தான். அந்தச் சதுரன் விடை பெற்றுக் கொண்டு தாமரைத் தண்டினது வழியாக வந்து இராமரிட சேனைகளெல்லாம் இருக்குமிட மெங்கேயென்று வெகு துரிதமாகப் பார்த்துக் கொண்டு வந்து அநு

மார் கோட்டையி லிருக்கிறதைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, இப்படிப்பட்ட கோட்டையை எந்த ராஜ்ஜியத்திலுஞ் கண்டதில்லை யென்று நினைத்து, நாலு மூலையுஞ் சுற்றிப் பார்த்தான். கோட்டை வாசல் எங்கேயென்றால்: அநுமாருடைய வாயிலே புகுந்து செவியிலே புறப்படவேண்டும். அதுவே யொழிய வேறே யெங்கும் வழியுமில்லை வாசலு மில்லை. கோட்டையானது ஆகாயம் பூமி பாதாளத்துக்கு மொன்றா யிருக்கிறது ஒருவராலேயும் உள்ளே போக முடியாது; கோட்டையிலே யிருக்கிற பேர் வெகு ஜாக்கிரதையா யிருக்கிறார்கள். ஆனபடியினாலே நம்மாலேயுங் கோட்டைக்குள் நுழைய முடியாதென்று நினைத்து சதுரனானவன் திரும்பிப்போய் மயிலிராவணனைக் கண்டு தலையைக் குனிந்துகொண்டு நின்றான். அப்போது மயிலிராவணன் சதுரனைப்பார்த்து வாரும் பிள்ளாய் சதுரா! நீ இங்கே யிருந்து போகச்சே சொன்ன தீரமென்ன? இப்போது தலையைக் குனிந்து நிற்கும் வீரமென்னவென்று கேட்க சதுரன் சொல்லுகிறான்: வாருமையா சுவாமி! நாம் நினைத்த காரியம் ஆகிறதில்லை. திரும்பப் போவதே பெரிய காரியம். அது எப்படியென்றால்: அநுமாரானவர் தன்னுடைய வாலாலே கோட்டை யிட்டுக்கொண்டிருக்கிறார். அந்தக் கோட்டைக்குள் நுழைய வாசற்படி யெங்குங் காணோம். ஆகாயம் பூமி பாதாளத்துக்கும் ஒன்றாயிருக்கிறது; கோட்டைக்குள் ளிருக்கிறபேர் வெகு ஜாக்கிரதையா யிருக்கிறார்கள். நம்மாலே முடியாதென்று சதுரன் சொன்ன மாத்திரத்திலே சாயித்திய னெழுந்து மயிலிராவணன் காலில் விழுந்து சாஷ்டாங்கமாக தெண்டஞ் சமர்ப்பித்து நமஸ்கரித்து சதுரனானவன் உலகமெல்லாம் தன்னைப்போ லெண்ணுவான். அவனாலே ஆகாவிட்டாலும் என்னாலாகும். சுவாமி! என்னை யனுப்பினால் அந்தக் குரங்கு வாலாலே யிட்டிருக்கிற கோட்டையை நான் காலினால் உதைத்துத் தள்ளிப்போட்டு எழுபது வெள்ளஞ் சேனைகளையும், ராமலட்சுமண ளிருவரையும் சங்கரிக்கச் சொன்னாலுஞ் சரியே. அல்லது இருவரையும் மகா விநோத

மான பெட்டியிலே போட்டுக்கொண்டு வரச் சொன்னாலும் வருகிறேன். சீக்கிரம் அடியேனுக்கு விடை கொடுமையா வென்று கேட்டான். அப்படிக்கேட்ட மந்திரியைப் பார்த்து மயிலிராவணன் அதிக சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகுமதிகளைச் செய்தனுப்பினான். சாயித்தியனைவன் விடைபெற்றுக் கொண்டு ஸ்ரீராமருடைய பாளையத்தில் அநுமார் கோட்டையிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு பிரமித்து நின்று நாமென்ன சபதஞ்செய்து வந்தோம். இதைப் பார்த்தால் வெகு கடினமா யிருக்கிறது; சதுரனைப்போல நாம் சும்மா யிராமல் அநேக சபதங்களைச் செய்து வெகுமதியும் பெற்று வந்தோம். இப்போது திரும்பிப் போனால் நம்மைப் பரிகாசஞ் செய்வார்கள். அதைவிட செத்தாலும் நல்லதென்று அநேகவித யோசனைசெய்து கோட்டைக்கு வழியுமில்லை வாசலுமில்லை இதற்கென்ன செய்யலாமென்று எண்ணி ஆலோசனை பண்ணி பக்ஷிரூபமெடுத்து வந்து ஆகாயத்திலே பறந்து அக்கோட்டைக்குள் போய் ராமலக்ஷ்மணு ளிருவரையும் எடுத்துக்கொண்டு போவோமென்று நிச்சயம்பண்ணி பக்ஷி ரூபமெடுத்து வந்து ஆகாயத்திலே பறந்து வாயுமண்டலம் சூரியமண்டலம், நக்ஷத்திரமண்டலம் முதலிய மண்டலபுறத்திலும் பறந்து பார்த்தான். அவ்வளவிலேயும் வாலானது அப்புறம் ஊடுருவிப்போவதைக் கண்டு அதிக விசாரங்கொண்டு இப்படியும் ஆகாதென்று பூமியிலே இறங்கி தன் சுயரூபமெடுத்து அக்கோட்டைக்குப் போகவேண்டுமென்று மெள்ளமெள்ள வாலைக்கிளப்பி தலையை உள்ளே நுழையவிட்ட மாத்திரத்தில் அநுமாருக்கு வாலசைவு கொடுத்து நிற்க, அநுமாரானவர் என்னமோ வென்று வாலைக் கெட்டியாக நெருக்கினார். வலுவாயும் நெருக்கின மாத்திரத்தில் அவனது தலையுள்ளே உடல் வெளியிலேயுமாக நசுங்கி தேய்ந்து நெருங்கி ஜீவன் போகத்தக்கதாக கடினமாச்சுது; அப்போது தலையைக் கெட்டியாக யிழுத்தான். யிழுத்த மாத்திரத்தில் வால் நெருங்கினதால் முகம் மூக்கு நாக்கு கண் இவைகளெல்லாம் நசுங்கி தேய்ந்து

இரத்தவெள்ள மெடுத்துக்கொண்டு தலை வெளியில் வந்து உடனே மூர்ச்சையடைந்து சற்றுநேரஞ் சென்றபின்பு மூர்ச்சை தெளிந்தெழுந்து தலையைக் குனிந்துகொண்டு நின்றான். நின்றவனைப் பார்த்து மயிலிராவணன் திகைத்து நகைத்து வாரும் பிள்ளாய் மந்திரி சிரோமணியே! சாயித்தியனென்னும் நவ மணியே ! நீ இங்கிருந்து சொல்லிப்போன விஷய மென்ன? உன்னை இப்படி செய்த தாரென்று கேட்க, சாயித்தியன் விசனத்துடனே சொல்லுகிறான்: கேளு மையா சுவாமி ! நானவர்கள் பாளையத்திற்குப் போய் கோட்டையைச் சுற்றிப்பார்த்தேன். அக்கோட் டையானது பூமி பாதாளத்திற்கு ஒன்றாக இருந் ததைக்கண்டு ஆலோசித்து பக்ஷிரூபமெடுத்து பறந்து போகிறபோது வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் நக்ஷத்திரமண்டலம் வரையிலும் பற ந்து பார்த்தேன் வால்கோட்டை அதிக நெருக்கமாய் உயர்ந்திருப்பதைக் கண்டு திரும்பிப் பூமியிலே யிறங் கிப் பெருச்சாளியாக அறுத்துக் கொண்டு போகின்ற போது வால் நெருக்கமாகவும் நீண்டிருப்பதைக் கண்டு மீண்டு வந்து மெதுவாக வாலைகிளப்பி தலையையுள்ளே போகவிட்டேன அந்த அநுமாருக்கு வாலசைவு கொடுத்தபடியால் வாலை நெருக்கினார். என்னுடைய தலை உள்ளேயும் உடல் வெளியிலேயுமாய்த் தேய்ந்து ஜீவன் போவதாய் பிராணனுக்கு அபாயம் வருவது கண்டு தலையை யிழுத்துக்கொண்டேன். இழுக்கிற போது முகம் மூக்கு முதலானவைகள் நசுங்கிப்போய் பிராணனை பிழைத்து வந்தேன். நான் சதுரன் சொன் னதைக்கேட்டு பரியாசஞ் செய்தோமே, அந்த அநு மார் மகா பராக்கிரமசாலி அவரை ஜெயிப்பது அரிது. அப்புறம் தமது சித்தத்துக்கு தகுந்த புத் திப்படியே செய்யுமென்று மெத்தவும்வேண்டி சதுர னைத் தாண்டி தனது காவலில் ஆவலோடு சேவகஞ் செய்திருந்தான்.

அப்பால் மயிலிராவணன் சாயித்தியன் போன பின்பு மந்திரிகளைப் பார்த்து வாருங்கள் மந்திரிகளே!



தான் போய் வருகிறேன் உங்கள் கையாலாகாமற் போச்சுதே நான் வருகிற பரியந்தம் நீங்களிங்கே தானே பத்திரமா யிருங்களென்று சொல்லிவிட்டு மயிலி ராவணனானவன் விபீஷணரைப்போல் ரூபமெடுத்துக் கொண்டு மிகுந்த கோபாவேசத்துடன் பாதாளலங்கையை விட்டு தாமரை தண்டின் வழியாக வெளியில் வந்து சீக்கிரம் சென்று இராம லக்ஷமணா ளெங்கே யென்று வந்து பார்க்க அநுமார் வாலினால் கோட்டை கட்டிக்கொண்டு இருப்பதைக் கண்டும் எங்கும் உள்ளேபோக வழியில்லாமல் ஒரு தந்திரத்தை யோசித்து அநுமாரருகில் வந்து அநுமாரே எச்சரிக்கை என்று சொல்லி கோட்டைக்குள்ளே எச்சரிக்கையாய் இருக்கிறார்களா? நான் போய் பார்க்க வேண்டுமென்று சொல்ல, அநுமார் மெய்யென்று நம்பி வாயைத் திறந்த மாத்திரத்தில் மயிலிராவணன் அநுமாருடைய வாயிலிலே புகுந்து செவியிலே புறப்பட்டுக் கோட்டைக்குள்ளே போய் ராமலக்ஷமணாள் படுத்துக் கொண்டிருக்கும் இடத்தைத் தேடி மெதுவாக மாயாவிநோதம் பண்ணி இரண்டுபேரையும் மெடுத்து ஒரு பெட்டியிலே போட்டு கெட்டியாகக் கட்டி எடுத்துக் கொண்டு வந்து ஒரு வார்த்தை சொல்லுகிறான்: ஓ அநுமாரே! நாழிகை பதினைந்துமாச்சுது; இன்னும் பதினைந்து நாழிகை யிருக்கிறது எச்சரிக்கையாயிரும்; நான் மயிலி ராவணன் வருகிற கள்ளவழி யெல்லாம் பார்த்து வருகிறேன். மயிலிராவணன் என்னைப்போலும் ரூபமெடுத்துக்கொண்டு வருவா னிதுகளை யெல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்திருமென்று விபீஷணரைப் போல் செவியிலே புகுந்து அவ்வாயிலே வந்துவிட்டான். மயிலிராவணன் பின்னும் தன்னுடைய மந்திரிகளிருக்கிற விடத்திலே போய் அழைத்துக்கொண்டு தமது லங்கையில் பெட்டியைக் கொண்டு போய் வைத்து ராக்ஷதர்களையும் காவல் வைத்துவிட்டுத் திரும்பிப் போனான்.

அந்தச்சமயத்தில் ஆகாயவாணி பார்த்து சொல்லுகிறாள்; அடா வாடா மயிலிராவணா! இந்த மட்டுந்

தான் உனக்குப் பட்டம் பொறுக்கும். இனிமேல் பட்டம் பொறுக்காது. இந்தப் பெட்டியிலிருக்கிற சாக்ஷாத் வைகுண்ட நாயகராகிய இராமலக்ஷ்மணுளை எடுத்துக் கொண்டு வந்தாயே: அதனுலே உனக் கழிவுகாலம் வந்துவிட்டது. அநுமாரானவர் வந்து பட்டணமெல்லாஞ் சுற்றிக் கோட்டையைக் கொளுத்தி இராக்ஷதர்களையுங் கொன்று வென்று உன்னுடன் பிறந்தாளாகிய தூரதண்டிகைப் பிள்ளையாகிய சித்திரசேனனுக்குப் பட்டங்கட்டிவிட்டு ராமலக்ஷ்மணுளை எடுத்துக்கொண்டு போவானென்று ஆகாயவாணி பலமுறை நற்புத்தி எடுத்துக் கூறினுள். அந்த மகா பாவியான மயிலிராவணன் காதிலே நாராசங் காய்ச்சிவிட்டதுபோலும். ஈரமரத்திலே வயிரவாணி கடாவினுற் போலும் ஏறிற்று. மயிலிராவணன் பயந்து நயந்து நடுநடுங்கி ஒடுங்கி அயர்ந்து வியர்ந்து நாணி மனதுகோணி உடனே தூரதண்டிகையையும் சித்திரசேனனையும் பிடித்து கட்டி கால்விளங்கு தாள்விலங்கு மார்விலங்கு இவைகளைப் பூட்டி ஒரு குகையிலே மாட்டி அடைத்துத் தன்னுடைய அரண்மனையிலே இந்திரபோகத்திலே போனுன் அங்கே விபீஷணரானவர் வால்கோட்டையிலே அவரவர்களுக்கு எச்சரிக்கை கூறி வரும்போது அநுமார் சொல்லுகிருர்: ஏன் விபீஷணரே! அரை நாழிகைக்கு முனனே வந்து என்னைப்போல் உருவமெடுத்து வருவானென்று சொல்லிவிட்டுப் போனீரே; நான், அவன் வருகிற கள்ளவழியைப் பார்த்து வருகிறேனென்றும் என்னை யறியாமல் கோட்டைக்கு எப்படி வந்தீர் மறுபடியும் மனது கசிந்து நசிந்து வருகிறது என்னவென்றும் அநுமார் கேட்டார். இதை விபீஷணர் கேட்டு இடிவிழுந்த மரம்போற் சாய்ந்து எரிந்து பொரிந்து சரிந்து குடலும் சரிந்து எடுத்துக் கொண்டு போய்விட்டானென்று தெரிந்து அறுந்து பழுமரம் போலும் முறிந்து விழுந்து எழுந்து வாதித்து மனம் பேதித்து தியங்கி மயங்கி அஞ்சி அநுமாரைக் கெஞ்சி விகார மிஞ்சி ஐயையோ! கெடுத்தீரே வீண்பே ரெடுத்தீரே என்று கூற, அநுமார் கனிந்து முனிந்து அகம் வெறுத்து முகங் கறுத்து

க்ஷணப்பொழுதிலே மூர்ச்சை யடைந்தார். மூர்ச்சை தெளிந்து விபீஷணரைப் பார்த்து நீர் சொன்னது பொய்யல்ல மெய்யே எனக்கு மதிமயங்கி ஒன்றுந் தெரியாமல் போயிற்று! இதற்கென்ன செய்வோ மென்று கேட்க, விபீஷணர் சொல்லுகிறார்.

வாருமையா அநுமாரே! நான் என் தமைய னாகிய ராவணனை பகைத்துக்கொண்டு வழிபடு கடவு ளாகிய இராமசுவாமியைச் சரணமென் றடைந்தேன்! அப்படிப்பட்ட சுவாமியையும் மயிலிராவணன் கையில் ஒப்புவித்து விட்டேன். என்னைப்போல் ஒருபாவி இவ் வுலகிலுண்டோ வென்று பலவாறழுது கடவுளைத் தொழுது துயரப்பட அநுமார் மனங்கலங்கி துயரம் விலங்கிச் சொல்லுகிறார். கேளும் விபீஷணரே! நமது சுவாமி படுத்துக் கொண்டிருக்கிற விடத்திலே பார்க்க அவ்விடத்திலே சுவாமியைக் காணுதபடியினலே விபீ ஷணர் கூறுகின்றார். இப்போது விடிந்தால் சுக்ரீபர் வருவாரே? சுவாமி எங்கேயென்று கேட்பாரே? அவ ருக்கு என்ன சொல்லுகிறது இத்தனை பேருமிருந்து சுவாமியை ஒப்பித்துவிடலாமோ வென்று வருந்து வாரே! ஆக்கினை செய்வாரே? எழுபதுவெள்ளம் சேனையு மவரவரிருப்பிடம் போய்விடுவாரே! நான் சுவாமியை நம்பி வந்தேன் அல்லவா! நான் எங்கே போவேன் எனக்கொரு விடமில்லையே! அனுதிபட்சி போலானேனே! அபகீர்த்தியுமாயிற்றே! தீவிரம் போயிற்றே! சுவாமியை எந்த காலத்தில் காண்பே னென்று வெகுவாய் விசாரப்படுகிறபோது அநுமார் ஒரு விசேஷஞ் சொல்லுகிறார். ஐயா விபீஷணரே! மயிலிராவணனும் உம்மைப்போல் உருவமெடுத்தது தெரியாமற் போயிற்றே! இப்படி செய்வானென்று தெரிந்தேனுகில் மகா ஜாக்கிரதையாக இருப்பேன். அப்படிப்பட்ட துன்மார்க்கனைக் கொன்று விட்டு ராம லட்சுமணுள் இரண்டு பேரையும் எடுத்துக்கொண்டு வருகிறேன்; நீ யாதொன்றுக்கு மஞ்சவேண்டாம். அந்தப் பாதாள லங்கைக்குப் போகிறவழி எப்படி யென்று கேட்க, விபீஷணர் சொல்லுகிறார். கேளு

மையா! பாதாள லங்கைக்கு நீராவது போவதேது? பாதாள லங்கையோ வெகு கடினம்; ஒருவராலேயு மாகாது. அதெப்படி யென்ருல் நடுசமுத்திரத்திலே பெரிய கடற்ருமரை படர்ந்திருக்கும்; அதில் ஒரு தாமரைத் தண்டும் ஒரு புட்பமும் பெரிதாயு மிருக்கிறது அத் துவாரத்தில் சரீரத்தை ஒடுக்கி நுட்பமான புகையைப்போல் போகவேண்டும். அப்படிபோனுல், அங்ஙனம் பாதாள லங்கை அக்கினி கோட்டையோடு தோன்றும், அக்கோட்டையின் சிகரத்திலே மச்சகற்பனென்று ஒரு ராக்ஷதனுண்டு. அவன் மகாபராக்கிரமசாலி! அவனை ஒருவராலேயும் ஜெயிக்கப்படாது; அவனேடுகூட இரண்டாயிரலக்ஷம் ராக்ஷதர்களுண்டு. ஒருவரைப்பார்க்கிலும் ஒருவர் பராக்கிரமசாலிகள்; அங்ஙனம்விட்டு மற்ருெரு பக்கத்திலே போனுல் அங்கே கற்பகத்திருக்குளம் ஒன்றுண்டு. அத்திருக்குளத்தில் அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்களும், சகல இராக்ஷதஜனங்களும் வந்து தண்ணீர் முகர்வதும் பூசை செய்வதும் குளத்தண்ணீர் எடுத்துக் கொண்டு போகிறபோது கோட்டைவாசலில் இருக்கிறபேர் தண்ணீர் முதலானதும் துலாப்பாரத்தில் வைத்து நிறுத்து சோதித்துக் கொள்ளுவார்கள். அதிலே யாதாமொரு அத்தாட்சி காணப்படுமாயின் ஆக்கினையோடு தாக்கீது செய்வார்கள். அப்படிப்பட்ட கட்டுங் காவலுமா யிருக்கும். அப்புறம் போகையில் அந்தப்பட்டணம் மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனையோடு தோன்றும்; பாதாளலங்கையின் பெருமையும் அருமையும் மூவராலும் சொல்லப்படா தென்று விபீஷணர் கூற, அநுமார் கேட்டு இனிமே லரைக்ஷண மிருக்கிறதில்லை, நாம் வழிபடு தெய்வமாகியராமலட்சுமணுள் இரண்டு பேரையு மெடுத்துக்கொண்டு வராவிட்டால் பாதாள இலங்கையிலே என்சீவனை விட்டுவிடுகிறேன். இனி ஒருவருக்கும் என் மூகத்தை காட்டுகிறதில்லை என்று புறப்பட்டார். மறுபடியும் விபீஷணர் சொல்லுகிருர்.

வாருமையா அநுமாரே! எந்தவிதத்திலே போய் வரவேண்டுமோ அந்த விதத்திலே போய்வாரும்; நீர்

ஜெயமாய் வந்தாலாச்சுது; இல்லாவிட்டால்;இவ்விடத்தில்தானே பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுகிறேன். அது நிச்சயமாக வெண்ணிக்கொள்ளும்;இராமசுவாமி கிருபையினாலே நீர் ஜெயமாய் வருவீர். சீக்கிரத்தில் நமது காரியத்தை ஜெயமசெய்து வாருமென்று விடை கொடுத்தார். அநுமார் பாதாளலங்கைக்குப் புறப்பட்டு வருகிறபோது நடுச்சமுத்திரத்தில் தாமரை விசேஷமாய் படர்ந்திருந்தன; அதில் 20,000 ராக்ஷதாச் காவலிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் க்ஷணநேரத்தில் கொன்று அதிலிருந்து ஓர்பெரிய புட்பத்தின் தண்டில் தன் சரீரத்தை யொடுக்கி புகைபோல் புகுந்து பாதாள லங்கைக்குப்போனார். போகிறபோது அக்கினிக்கோட்டையைக் கண்டார், அதனருகே போகிறபோது அப்பட்டணத்திலுள்ளவர்கள் அநுமாரைக்கண்டுசொல்லுகிறார்கள். இதற்குள்ளே அநுமாரும் கிட்டே வந்தார். ஜனங்கள் பார்த்து அந்தக் குரங்கைப் பிடிக்கவேணுமென்றுவந்து நாலுபுறமும் வளைத்துக்கொண்டார்கள். அப்படி வளைத்துக்கொண்டதை அநுமார்பார்த்து சற்றும் அஞ்சாமல் உடனே தமது விஸ்வரூபத்தை யெடுத்துராக்ஷதரைத்தடுத்து வாலாலேவளைத்துசுற்றி நிலத்திலே உதைத்து குரங்கைப்போல் முனைந்து விஸ்வரூபங் கிளைத்து அடியடியென் றடித்து; இடியிடியென்றிடித்து, புடைத்து, வாலைத் துடைத்துத் தள்ளி இராக்ஷதர் தலையைக் கிள்ளி இரத்த நீரையள்ளி அருந்தி மனம்வருந்தி வீரம்பொருந்தி நிற்க, மற்றும் இராக்ஷதர் வந்து எதிர்க்க, அவர்களையும் அவ்வாறு கால்மாடு தலைமாடுகளாக பிடித்து அடித்து மீசை துடிக்க பற்களை நெறநெறவென்று கடித்து யுத்தஞ் செய்கிறபோது மச்சகர்ப்பன் கேட்டு மனம் பதைத்து அநேக இராக்ஷத கூட்டமும் தானுமாக அநுமாரிடத்தில் வந்து நிறைந்து சண்டைக்கு முனைந்து வீரமணிகளையாட்டி சவுரியங்களைக் காட்டி வானராதிகளை மாட்டி அரக்கர் கூட்டங்களை நாட்டி சிங்கநாதங்களை மீட்டி வெற்றி வெற்றி யென்று விருதுபடைகளைக்காட்டி யுத்த ஆயுதமணிந்து சித்தமாக துணிந்து நோக்கி அநுமாரோடு தாக்கி தோர்வை யென்பதை நீக்கி வெற்றி யென்பதை

யாக்கி மகா வீரனுகவும் அநுமாரைக் கொல்லவும் அதிக மெல்லவுமாக வந்து எதிர்த்தான். அநுமாரும் மச்சகர்ப்பனும் ஒருவர்க்கொருவர் தாக்கி சண்டைக ளாக்கி அவர் மெரிக்க இவர் அடிக்க மச்சகர்ப்பனுவி துடிக்க சற்று மிளையாமலும், களையாமலும், தேகம் பதைக்கவும், இராக்ஷனுடல் சிதைக்கவும், அநுமார் பதைக்கவும், பூமியில் தள்ளி உதைக்கவும், இராக்ஷதன் கோபமீறி அநுமாரைத்தூறி பாம்பைப்போற் சீறி சிங் கம்போல்வீரி அஞ்சாமலும் வீரதீரந் துஞ்சாமலும் அவரோடு கூட சரிசமானமாக சண்டை செய்து வந் தான். அநுமாருக்கு கைகாலசைந்து தோர்ப்பை யடைந்தார். அப்படி தோர்ப்பை யடைந்து அநுமார் ஆலோசித்து ஒரு வார்த்தை சொல்லுகிருர் : கேளும் பிள்ளாய்! நீ யாருடன் குமாரன்? உன் தகப்பன் பேரென்ன ? உன் தாய் பேரென்ன ? உன் பேரென்ன? அதை எனக்குத் தெரியப்படச் சொல்லென்று கேட்க, மச்சவல்லபன் கூறுகிருன். அடா வாடா நீயென்ன கேட்கிறது; நானென்ன சொல்லுகிறது. சண்டை செய்ய நிபுணன் தானே? சண்டை செய்யத் திறமில் லாமல் ஜாதி குலங் கேட்டவனே! எழுந்து சண்டை செய்வோம்; உன் சமர்த்தும் என் சமர்த்து மறிவோம் சற்றெழுந்திருமென்று பலவந்தமாக அழைக்க, அநு மார் சொல்லுகிருர்; கேளும் பிள்ளாய் இராக்ஷத சிரோத்தம சிகாமணியே! உன் குலமும் நலமும் ஜாதி யும் நீயும் கேட்பதென்ன வென்று கேட்பாயேயாளுல் சொல்லுகிறேன்.

கேளும் பிள்ளாய் ! அநேக சீமையிலே யோடி அநேகம் பேருடனேகூடி சண்டைகளாடினேன்; சகல ரையுஞ் சாடினேன்; வெற்றியுஞ் சூடினேன் ; எனக்கு மிஞ்சின பலசாலிகள் இந்த மூன்று மண்டலத்திலு மில்லை. அப்படிப்பட்ட மகா சுத்தவீரனுகிய நான் உனக்குத் துஞ்சினேன்; அஞ்சினே னுனபடியினுலே என்னிட ஜீவன் உன் கையில் போம்படியாகத் தோன் றுது; அதற்கு முன்னே எல்லாமறிந்து சாவோமல் லது; திரும்பிப்போவோமென் றெண்ணியும் சொன்

னேன்; இவ்வளவு பராக்கிரமசாலியாகிய உன்னைப் பெற்றதாய் யாரோ? அவளைச் சேர்ந்த சுத்தவீரனைத் தனை பராக்கிரமசாலியாக யிருப்பானோ? அறியேன்; எவ்வளவு தவசுசெய்து பெற்றார்களோ? அதையும் அறியேன், இப்பேர்ப்பட்ட பலத்துடன் கூடி ஒருவ ரிடத்திலே சேவிப்பானேன். நீ இந்தப் பதினாலு லோகமும் ஜெயிப்பாயே! மயிலிராவணனிடத்திலே சேவிக்கிற காரணமென்ன ? நான் கேட்கிறேனென்று கோபித்துக் கொள்ளவேண்டாம் ; என்னைச் சண்டைக் கழைக்காதே! உன்னோடே சண்டை செய்ய எனக்குப் பலமில்லை. நான் தோற்றுப்போனது மெய்யே; என் பேரில் தயவுசெய்யுமையா வென்று அநுமார் பலமுறை யுந் தொழுதார். மச்சவல்லபன் மனதிரங்கி தஞ்ச மென்றவரை கொல்லக் கூடாதென்று நெஞ்சில் நினை ந்து. கேளும் வானர சிகாமணியே! என் தாய் தகப் பன் பேர் சொல்லுகிறேன்; கேட்டபின்பு சண்டைக்கு வாரீரோ வென்ன, அப்படியே நல்லதென்று அநு மார் கூற, மச்சவல்லபன் கூறுகிறான், ஐயா வான ரோத்தமா! என் தகப்பன் பெயரென்னவென்றால்: அஷ்டதிக்குப் பாலகரை வெல்லுவான் ; மும்மூர்த்தி யையுங் கொல்லுவான். மகா சமர்த்தன் ; சுத்தவீரன் ; சத்துருசங்காரன்; சாவில்லா சிரஞ்சீவி பெற்றவன், சாக்ஷாத் சிவசங்கற்பமா யிருக்கிறானே அவனென் தகப்பன் அவனது நாமதேயம் அனுமாரென்று சொல்லப்படும் என் தாயார் திமிதி யென்னும் மச்சம். என் தகப்பனைப் பெற்றவன் வாயுபகவான். என் பெயர் மச்சவல்லபனென்று சொல்ல, அநுமார் கேட்டு திடுக் கிட்டு மச்சவல்லபனைப் பார்த்து, அங்ஙனே யோசித்து ஏதடா என்னைத்தவிர வேறொரு அநுமாருமுண்டோ? இல்லை. நாமொருவன் தானே அநுமார் இதென்ன விசித்திரமாய் இருக்கிறது. எனக்கு ஸ்திரீகளில்லையே; நாம் நித்திய பிரம்மசாரியாயிற்றே ஆனால். முன்னம் இலங்கையிலே போய் சீதையைத் தேடி இராவண னுடைய புட்பக விமானத்தில் ஸ்திரீகள் தாறுமாறாய் கிடந்தார்களோ ? அவர்களை நாம் பார்த்துச் சாபல்ய பட்டோமோ? ஐயையோ ? என்னை யறியாமல் பிள்ளை

வந்த காரணமேது? என்னமோ புதுமையாகத் தோணுது மற்றுங் கேட்டறிவோமென்று கேட்கிருர்.

வாராயப்பா மச்சவல்லபா! என்னமோ அடிக்கடி கேட்கிருனென்று கோபஞ் செய்துக்கொள்ளாதே என் வாக்கியத்தைத் தள்ளாதே. இன்னமோர் விசேஷங் கேட்கிறேன் என்னவெனில்: அனுமாரென்று சொன்னீரே அவனெங்கேயிருக்கிறவன்; யாரிடத்தில் சேவிக்கிறவன்; சொல்லுமென்று வினவ, மறுபடியும் மச்சவல்லபன் அநுமாரைப் பார்த்துச் சொல்லுகிருன், அடா வாடா வானராதிபதி! என் தகப்பன் ஸ்ரீ ராமலக்ஷமணுளுக்குச் சேவகன். அவனுக்கு துரை சுக்கிரீபன்; அந்தச் சுக்ரீபன் மந்திரி எனது தகப்பன், வாலிலுலே ஓட்டப்பட்டு வனந்திரத்திலே யிருக்க, அப்போது இராமலட்சுமணுளை வணங்கி யழைத்து அதுகளை யாவுந் திடப்படுத்தி கிஷ்கிந்தையைப் பட்டங் கட்டின மகானுபாவன்; அவரே எனது தகப்பனென்று கூற, அநுமார் சந்தோஷித்து இருதய மகிழ்ந்து, ஆசையிஞலே உன் தாய் தகப்பன் பேர் கேட்டால் இப்படி பரிகாசஞ் செய்யலாமா? பொய் சொல்லலாமா? நானந்த அநுமாரை யறியேனே? அவ்வநுமார் நித்திய பிரம்மசாரியாயிற்றே; அவருக்கு ஸ்திரீயுண்டோ? பொய் சொல்லாமல் சொல்லென்று வினவ மச்சவல்லபன் சொல்லுகிருன்: வாராய்வானராதிபதியே! என் தகப்பன் அநுமார் இராமலக்ஷமணுளுடனே சுக்ரீபன், அங்கதன், நீலன், நளன், குமுதன், கேசன், கேசவாக்ஷன் முதலானபேருடனே சீதையைக் காணுமல் நாலு மூலைக்கும் வானரர்களை அனுப்பும்போது என் தகப்பன் தெற்கு பாரிசத்திலே சமுத்திரக்கரையிலே யிருந்து சீதை லங்கையில் இருக்கிருளென்று அறிந்து அங்கனமிருந்தபடியாய் ஆகாயத்தில் பறந்து சமுத்திரத்தில் வந்து யோசனை தாண்டி ஓடும்போது அந்தச் சமுத்திரத்தில் வெட்கை யென்கிற இராக்ஷசி அனுமாருடைய நிழலைக கண்டுபிடித்து விழுங்க, என் தகப்பளுகிய அநுமார் அந்த இராக்ஷசி வாயிலே புகுந்து உள்ளேபோய் வயிற்றைக் கிழித்துக் கொண்டு போகிறபோது மகா இளைப்பாக உடம்பு

வெயர்வை வெயர்க்க, அந்த வேர்வையைப் பிழிந்து சமுத்திரத்திலே போட, அந்த சமுத்திரத்தில் வாசஞ் செய்கின்ற பெண்மச்சம்வாயிலேவிழுந்தஅந்தவேர்வை யை மச்சம் விழுங்கினவுடனே கெர்ப்பந்தரித்து என்னைப் பெற்ருள். அந்தட்சணமே நான் சமுத்திரக் கரையில் குளிர் நடுங்க உட்கார்ந்துகொண்டிருந்தேன். இருந்தாற்போலிருந்து ஒரு திவ்விய புருஷன் வந்து என்னை யெடுத்து மடியின்பேரில் வைத்துக்கொண்டு உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையிலும் தடவிக் கொடுத்து என்னை முகந்து கொடுத்து முத்தி யிட்டுக் கொண்டார். அப்போது நான் திவ்விய புருஷரைப் பார்த்து, வாருமையா! நீர் யாரையா? என்பேரில் வெகு பிரீதியாக உற்ருர் பெற்ருர்போல் என்னைப் பக்ஷமோடு எடுத்து முத்தியிட்டுக் கொள்வதென்ன வென்று கேட்க, அத்திவ்ய புருஷன் சொல்லுகிருன்: ஓ! ஓ! குழந்தாய்! நானுனக்கு பாட்டனென்றுங் கூறி எனக்குப் பேருமிட்டார். நான் மச்சத்தின் வயிற்றிலே பிறந்தபடியால் மச்சவல்லபனென்று நாமதேய மிட்டார். இப்படியிருக்க, நான் பாட்டனுகிய வாயுபகவானைப் பார்த்து, பாட்டா! என் தகப்பன் எங்கே யென்று கேட்டேன். அவர் சொன்னதாவது, வாருங் குழந்தாய்? உன் தகப்பன்பேர் ஆஞ்சநேயரென்றும், அநுமாரென்றுங் கூறி, அவர் அநேக வரம்பெற்று முப்பத்து முக்கோடி தேவர்களாலும் ஜெயிக்கப்படாதவர்; ஆயிரத்தெட்டு அண்டத்திலேயும் சாவில்லை யென்று கூற, அப்போது எனது தகப்பன் எங்கே யென்று கேட்டேன். வாயுபகவான் சொன்னது: அநுமார் சீதையைக் கண்டு பேசி இலங்காபுரி பட்டணத்தைக் கொளுத்திஞரென்ருர். வாரும் பாட்டா! எனக்கு வரந்தர வேண்டுமென்று கேட்டேன். அவர் சும்மா வரந்தரலாகாதென, ஒரு நாழிகை அவரைக் குறித்து தவஞ்செய்து சந்தோஷப்பட்டு என்ன வரம்வேண்டு மென்ருர். எனக்கு வரம் ஒன்ருயிருக்கவேண்டும், சகல வரமும் அதிலே அடங்கியிருக்கவேண்டும், என் தகப்பன் பலத்திலும் அதிகமாயிருக்கவேண்டும்; நல்லதென்று வரங்கொடுத்துப்போனுர். இப்படியாக என்

னுடைய பூர்வோத்திரம். கேட்டீரோ இப்போதாகி லுஞ் சண்டைக் கெழுந்திரென்று சொன்னான். இந்த வசனங்களை யெல்லாம் அநுமார் கேட்டு சந்தோஷித்து நயப்போடும் வியப்போடும் மெய் யென்று ஒத்துக்கொண்டு சரீரத்தை அநியாய மாய் மடிக்கப் பார்த்தோம், நமக்குப் புத்திரசிகா மணி கிடைத்தது பாக்கியந்தானென்றெண்ணி யோ சனை பண்ணி, ஆ புத்திரசிகாமணியே! நான் தான் அநுமாரென்று சொல்ல மச்சவல்லபனானவன் உட னே பயந்து நடுநடுங்கி யொடுங்கி அடிபணிந்து தகப்பனென்றெண்ணி நமஸ்காரம் பண்ணி ஆடிப் பாடி காலிலே ஓடிவந்து விழுந்து எழுந்து நிற்க, அனுமார் மச்சவல்லபனை யெடுத்து முத்திக் கொடுத்து மடிமேல் வைத்துக்கொண்டு உச்சியை முகந்து சரீர மெல்லாந் தடவி, அப்பா குமாரகா மச்சவல்லபா! நானுன்னை யடித்தேன் பிதுர்த்துரோகியானேனென்று மறுபடி சொல்லுகிறார்.

கேளுமப்பா மச்சவல்லபா! நானொரு காரியமாகவந் தேன். எனக்கு அந்த காரியஞ் சாதித்துத் தரவேண்டு மென்ன, மச்சவல்லபன் சொல்லுகிறான். வாருமையா நீர் என்ன காரியமாக வந்தீர்? நானந்த காரியத்தை முடித்துக் கொடுக்கிறேன் சொல்லுமென்று வினவ, அநுமாரானவர் சொல்லுகிறார். கேளுமப்பா மச்சவல் லபா? தசகண்ட ராவணனோடு இராமலட்சுமணரும் வானர சேனைகளுங் கூடி சண்டை பண்ணி மூலபலத் தையும் அதஞ்செய்த பின்பு தசகண்ட ராவணன் இந்த மயிலிராவணனை யழைத்து இராமலட்சுமணனைக் கொண்டுபோய் உன்னுடைய பாதாளலங்கையிலே வைத்துப் போடுமென்றான். அவ்வாறே மயிலிராவ ணன் ராத்திரி என்னை வந்து மோசஞ்செய்து இராம லட்சுமணனை எடுத்துக்கொண்டு வந்தான். அதன் பின்பு நான் கோபத்துடனே மயிலிராவணனைச் சங் கரிக்கிறேனென்று பிரதிக்ஞை செய்து வந்தேன் அவ் விராமலட்சுமணன் எங்கே யிருக்கின்றார்கள். உனக்குத் தெரியுமல்லவா சொல்லுமென்ன, மச்சவல்லபன்

சொல்லுகின்றான்: நான் முன்னம் குழந்தையாக விருக்கிறபோது வாயுபகவான் வரங் கொடுத்துப் போனார். அப்போது நான் ஒரு யோசனை சொல்லி யிருந்தேன். அதாவது: இந்தப் பதினாலுலோகமும் ஜெயிக்க வேண்டுமென்று கருதினேன். அப்போது இந்த மயிலிராவணன் வேட்டை மார்க்கமாகப் புறப்பட்டு நானிருக்குமிடத்தில் வந்து என்னுடைய முகக்களையும் பராக்கிரமத்தையும் கண்டு மகிழ்ச்சிகொண்டு மயிலிராவணன் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து பணிந்து ஒருவரம் வேண்டுமென்று கேட்டான் நானவனைப் பார்த்து சந்தோஷப்பட்டு இப்படிப்பட்ட இராஜாவானவன் சிறு பிள்ளையாகிய என் காலில் விழுந்து கேட்டானென்று மகிழ்ந்து புகழ்ந்து மயிலிராவணனைப் பார்த்து உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டேன். மயிலிராவணன் சொன்னது வாரும் பிள்ளாய் மச்சவல்லபா! நானாளுகிற பாதாள லங்கையை காக்க ஒருவருமில்லை, நீ இருந்து காத்துக்கொண்டு வர வேண்டுமென்றழைத்து வந்து தன்னிடத்தில் வைத்துக் கொண்டான். அதுமுதல் இதுவரையிலும் நான் காத்து வருகிறேன். இப்போதெப்படி உம்மை விடுவேன்; நீர் தருமசாஸ்திர மியாவும் அறிவீரோ? உன் மனதுக்குத் தக்கபடி நடவுமையா வென்று வணங்கிச் சொல்ல அநுமார் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுவார்.

கேளும் குமாரகா! ஆனால் செய்ய வேண்டியதென்ன? நான் அபஜயப்பட்டால் அந்த அபகீர்த்தி உனக்கில்லையா? உன்னுடையதல்லவா என்று இவர் பலமுறையாகச் சொல்ல, அப்போது மச்சவல்லபன் சொல்லுகிறான்: பிதாவே! நான் உயிரோடிருந்து மயிலிராவணனுக்குத் துரோகம் பண்ணமாட்டேன்; உனக்கு அந்தரங்கமான வார்த்தைகளைச் சொல்வது தருமமல்ல. ஆனாலும் உம்முடைய விவரத்தை அறிந்து சொல்லுகிறேன். நீர் வரும்போது தாமரைக் கமலத்திலே இரண்டாயிரம் ராக்ஷதர்களிருந்தார்களே அவரைக் கொன்றழித்து வந்தீரோ அல்லது சும்மா வந்

தீரோ சொல்லுமையா வென்ன, அந்த இரண்டாயிரம் ராக்ஷகரையுங் கொன்று வந்தேனென்ன, மச்சவல்ல பன் சொல்லுகிறான்: ஆனால் ஜெயத்தை யடைவீர், நான் உம்மைச் சும்மா விடக்கூடாது. ஒரு தந்திரம் சொல்லுகிறேன். அதென்னவெனில் : என்னை நடுமார் பில் குத்துவீராகில் நான் மூர்ச்சையாய் விழுவேன். என்னுயிர் நிலை அதுதான், அவ்விதஞ் செய்து அப் புறம் நீர் உள்ளே போமென்று சொல்ல : அநுமார் அங்ஙனே யோசித்து சுவாமியைப் பூசித்து துயரப்பட அதைக்கண்ட மச்சவல்லபன், ஓ ஓ பிதாவே! நீர் இப் படி துயரப்பட்டால் உள்ளே போகமாட்டீர். நாழிகை அதிகமாகிறது; இப்படி இருக்கக்கூடாது முன்பின் யோசிக்காமல் உமது பலமெல்லாஞ் சேர்த்து குத்து மையா வென்று தனது மார்பைக்காட்ட, அநுமாரான வர் வருத்தத்துடனே ஐந்து விரலையு முஷ்டியாகப் பிடி த்து குத்த மச்சவல்லபன் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தான், அநுமார் தனது குமாரனுக்கு வலித்து தோவென்று மனவிசாரத்துடன் மூர்ச்சையாய் விழுந்த மச்ச வல்லபனைத் தடவிக் கொடுத்துச் சுகமா யிருக் கும்படி ஆசீர்வதித்து இராமசுவாமியைத் துதித்து பாதாள லங்கையை மிதிதது ராக்ஷதனெங்கே யென்று குதித்து உள்ளே சென்று அங்ஙனம் நின்றும் ஓர் பக்கம் பிரவேசித்தார்.

அப்படிப் பிரவேசித்துப் போகிறபோது அவ்வி டத்தில் முதல் கோட்டை செங்கல்லினாலே கட்டப்பட் டிருந்தது. அதைப் பார்த்து அப்பாற் போகும்போது நாலாயிரலக்ஷம் இராக்ஷதர்கள் ஆயுதங்களுடனே காவலிருந்தார்கள் அவர்களை அநுமார் பார்த்து தேகம் வேர்த்து அவர்களை எவ்வாறு சங்கரிப்போ மென்று கருதி தியங்கி மயங்கி செல்லுகிறபோது அங்கே ஒரு மரமானது பிரமாண்டமாக இருக்கப் பார்த்து, அந்தப் பெருமரத்தை வேரோடு பிடுங்கிக் கொண்டு குபீலென்று இடி விழுந்தாற்போல பாய்ந்து இந்தச் செங்கற் கோட்டையின் வாசற்படியை வாயி னால் படல்கட்டி மூடி முத்திரை போட்டு கொண்டு

உள் நுழைந்து இராக்ஷதர்களைப் பார்த்து கோப நகை செய்து அநுமாரானவர் மரத்தினாலே சூரை யடித்தது போல் இராக்ஷதர்களை யடிக்கிற காலத்தில், ராக்ஷதர்க ளெல்லாம் கத்திகளையும் வாள்களையு முருவி புறப்பட்டு அநுமாரைக் கொல்லும்படியாக எதிர்த்து ஆயுதங் களைத் தெரித்தார்கள். அதைக்கண்ட அநுமார் சற்று மஞ்சாமல் அவ்வித அரக்கரையெல்லாம் நோக்கி ஒரு வரோ டொருவரைத் தாக்கி யுத்தஞ் செய்கிறபோது, சத்த சமுத்திர முழக்கம்போல சந்திராயுதமும், சுக்கு மாந்தடியும், கண்ட கோடாலியும், தெண்டாயுதமும் அஸ்திரசஸ்திரமுங் கொண்டு சில இராக்ஷதர்கள் நெருங்கினார். சிலர் கண்டு வாள்-வேல்-வில் முதலிய ஆயுதங்களைக் கொண்டு நாற்புறத்திலுஞ் சூழ்ந்தார்கள். சிலர் யுத்தத்திற்கு சேர்ந்தார்கள். சேனாதிபதிகள், யானை அறுபதுலக்ஷம், குதிரை அறுபதுலக்ஷம், தேர் ஆயிரலக்ஷம் இராக்ஷதர் நூறாயிரலக்ஷம் இப்படிப்பட்ட சேனைசைனியங்களுடனே வந்து எதிர்த்தார்கள். அப் போது அநுமாரானவர் கையிலிருந்த விருக்ஷத்தினால் நானாவிதமாகச் சாடினார். அத்தருணத்தில் இராக்ஷதர் யாவருங் கால்மாடு, தலைமாடு, கைவேறு, மெய்வேறு, தோள்வேறு, தாள்வேறு, உடல் வேறாகச் சிதைந்து மடிந்தார்கள். ஆயுள்கால முடிந்தார்கள். நரகவாசற் குழியில் மடிந்தார்கள். இப்படி நிர்மூலமாக அடித்து இராக்ஷதர்களைப் பிடித்து தரையில் அறைந்து அநு மார் வெற்றியிற் சிறந்து துறந்து வீரமோடு தீரமாக அப்புறம் போகும்போது அவன் ஆளப்பட்ட பித்த ளைக் கோட்டையானது மகரகுண்டல சிகரமகர மொடு மகரமாகத் தோன்றிற்று. அதிலே அந்த இராக்ஷதர் கூட்டங்கள் நிறையா யிருப்பதைக் கண்டு, நம்முடைய அதிர்ஷ்டம் தெய்வாதீன மிப்படியாக யிருந்தது. இன்று பிழைத்தோம்; இலைபோல் தழைத்தோம், மூலைக்கொருவனாக இராமல் ஒன்றாக விருந்தது நன்றாக முடிந்தது, நாம் கொண்ட கோட்பாடு தெண்டம் வாராது. இனி யாவரையு முறுக்கி இறுக்கி நொறுக்கி விடுவதே யோக்கியம்! இதுவே சிலாக்கியம்; இராமர் கொடுத்த வாக்கியம் : நல்ல பாக்கியம் என்றெண்ணி

மகிழ்ந்து புகழ்ந்து அண்ணுந்து இறுமாந்து புடைத்து பூரித்து ஆரவாரித்து யுத்தத்திற்குப் பிரயத்தனமானுர்.

அப்போது அநுமாரானவர் சரீரத்தை யொடுக்கி விஸ்வரூபம்புதுக்கி அண்டகோளவரைகரும் பிரமாண்டமாக வளர்ந்து இருகையும் குவித்து தவித்து கூட்டி அபிநயங்காட்டி விரலைவிரித்து அரிந்து குபீல் ருபீலென்று பறந்து மெய்மறந்து அந்த ராக்ஷதரை யடித்து வாயினுலே கடித்து ஒருவரோ டொருவரைத் தள்ளிச் சிங்கம்போலத் துள்ளியாவரையும் விடாமலும் ஆயுதமெடாமலும் காயப்படாமலுமாக போகிறபோது அங்கே இரண்டாயிரம் ராக்ஷதர்கள் மடிந்தார்கள். இவ்வாருக அநுமாரானவர் அடித்து மடித்துவிட்டு புறப்பட்டு போகிறபோது, செப்புக் கோட்டையானது மாடமாளிகை கூடகோபுரம் அரண்மனை தோன்றிற்று. அந்தச்செப்புக் கோட்டையானதைப் பார்க்குமிடத்தில் 20-லக்ஷம் இராக்ஷதர் ஆவலோடு காவலில் சேவகம் செய்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து ஆர்த்து சீக்கிரமாக ஜாக்கிரதையோடு குபீலென்று குதித்து, இராக்ஷதரென்று மதித்து, இராமரைத் துதித்து அரக்கரை மிதித்துக் கொன்று தின்று போவோமென்று அப்பாலே போகும்போது வெங்கலக் கோட்டை தோன்றிற்று, அதிலே காவல் 28-லக்ஷம் இராக்ஷதரிருப்பதைப் பார்த்து கதவை மூடிக்கொண்டு தாப்பாளைப் போட்டு சாப்பாக ஒருவரையாகிலும் வெளிவிடாமல் எல்லோரையும் அதமாக அடித்து இடித்து நொறுக்கி அவரவர் எலும்புகளைப் பொறுக்கிக் கடலிலே போட்டுவிட்டார். அரக்கரெல்லாம் எமபுரஞ் சேர்ந்தார்கள். பின்னர் அநுமாரானவர் போகிறபோது பொன் கோட்டை தோன்றிற்று, அங்ஙனம் 60-லட்சம் இராக்ஷத ரிருக்கக்கண்டு மகிழ்ச்சி கொண்டு களித்து ஆனந்தக்கடலில் குதித்து அதற்குமப்படியே அற்பமாக வெண்ணி அதம்பண்ணி அப்பாலே நடக்கிறபோது பவள கோட்டைத் தோன்றிற்று. அதிலே 80-லட்சம் ராக்ஷதரிருப்பதை யறிந்து வாலினுலே

யெறிந்து அறைகிறபோது அங்ஙனே ஒரு கொடிக் காம்பானது நவரத்னகசிதமாய் நூறு யோசனை விஸ்தாரமாக விருக்க, அதைப் பிடுங்கிக்கொண்டு அரக்கர் படையிலே விழுந்து அதம்பண்ணிவிட்டு அப்பாலே போகும்போது, சரீரமானது சிறுக ஒரு அணுவளவாக எடுத்துக்கொண்டு கோட்டையின் மேலே துலா யந்திரங்கட்டி யிருப்பதைப் பார்த்து அங்கே யிருக்கிற இராக்ஷதரையுங் கண்டு யோசனை பண்ணி உள்ளே போகிறபோது தங்கக்கோட்டை காவற்காரர்கள் மேளதாளம் வெடிதடி யொழுதமுறுதப்பட்டை எக்காள முதலிய வாத்தியத்துடனே பாதாள லோகம் கிடுகிடுவென் றிருப்பதைக்கண்டு மயங்கி யோசனை செய்து எங்கேபோ யொளிப்போ மென்று நாலுபக்கமு மிடமில்லாமலந்தப் பவளக்கோட்டைக்கு உத்தர பாரிசத்திலே ஒரு தோப்பானது உத்தியான வனமும் சிறிது விருக்ஷசாதிகளும் சில நந்தவனமுஞ் சோலையுஞ் சாலையு மிருபபதைப் பார்த்து. அந்த தோப்பிலே மறைந்திருக்க வேண்டுமென்று போய் ஒரு மரத்திலே இலை மறைவிலே ஒளித்திருந்தார்.

அப்போது பரிசோதனைக்குப் புறப்பட்ட ராக்ஷதர் மேல் சண்டைக்குப் போய்விட்டார். அநுமார் இந்த மரத்திலே யிருந்தபடியாக நாலுதிக்கும் பார்த்து ஒருவரு மில்லையென்று மனதிலே தீர்மானித்து கீழே யிறங்கி அந்த வனமிருக்கிற அழகைப் பார்த்து இது யாருடைய வனமோ? இத்தனை அழகாகப் பொருந்தி யிருக்குதென்று மனதில் நினைத்து நாலுபுறமுஞ் சுற்றி வரும்போது அவ்விடத்தில் ஒரு மண்டபமானது மயிலிராவணன் பாதநாட்டியம் பார்க்க, நடனஞ் செய்கிற மண்டபமும் ஒருவராலு மையாத அழகோடு கட்டி யிருப்பதை அநுமார் பார்த்து வெகு ஆச்சரியப்பட்டு இது யார் கட்டிவைத்த மண்டபமோ வென்று அதிலே உட்கார்ந்துக்கொண்டார். இந்தக் கதை இப்படியிருக்க, கேளும் கௌதம ரிஷியே! என்று நாரத மகாரிஷி சொல்லுகிறார். அப்பால் அந்தப்புறத்திலே யிருக்கும மயிலிராவணன் மாதங்கியுடனே கூடி சரச

சல்லாபமாடி மன்மதன்போல் நீடி குங்குமக் கதம்பஞ் சூடி சம்போக பாக்கியங்களை அனுபவித்து நித்திரை செய்துக்கொண்டிருந்தவன் திடீரென் றெழுந்து கண் விழித்து வெளியிலே வந்து எத்தனை நாழிகையாயிற் றென்று நக்ஷத்திரம் உச்சமானதை பார்த்து நாழிகை 22-ஆய்விட்டது. இனி சும்மா யிருக்கக் கூடாதென்று நினைத்து பாதாள இலங்கைப் பத்தினியாகிய பத்திர காளிக்கு இராமலக்ஷ்மணனை பலி கொடுக்கவேண்டுமே, இனனும் பொழுதுவிடிய எட்டு நாழிகை யிருக்கிறதல் லவா? இதற்குள்ளே சுருக்கமாக அபிஷேகத்திற்கு சலங் கொண்டு வரவேண்டுமே யாரை அனுப்பிவைப் போமென்று உடனே யோசனைசெய்து தன்னுடைய உடற்பிறந்தாளாகிய தூரதண்டிகையை யழைத்து, அடி தூரதண்டிகையே! இப்போது என்னுடைய உத்தியானவனத்திற்குப் போய் தண்ணீர் கொண்டுவா வென்று சொல்லித் தங்கக் குடத்தைக் கொடுத்து சீக் கிரங் கொண்டுவா போடியென்று கட்டளையிட்டான்,

அந்த தூரதண்டியானவள் நாமும் நம் மகனும் சதாவருஷம் விலங்கிலே அகப்பட்டிருந்தோமே! இப் போதென்னமோ நம்மைக்கொல்ல நினைத்துத் தண்ணீ ருக்குப் போகச் சொல்லுகிறான் என்று கருதி, மயிலி ராவணனைப் பார்த்துச் சொல்லுகிறாள். வாடா அப்பா மயிலிராவணா! என்னடா என்னைத் தண்ணீர்க்குப் போகச்சொல்லி, என்னையும் என் மகனையும் விலங்கு போட்டுக் காவலாளிகளைக் காவல்வைத்தாயே, இப்போ தண்ணீர் கொண்டு வந்தால் என்னையும் என்மகனையும் வெட்ட யோசனைசெய்து போகச் சொல்லுகிறாப்போல் தோற்றுகின்றது. அப்படி செய்கிறது உண்மையானால் எங்களிருவரையும் இங்கேதானே வெட்டி போடப்பா என்று வருந்திச் சொன்னாள். மயிலிராவணன் தூர தண்டிகையைப் பார்த்து சொல்லுகிறான்: அடி தூர தண்டி! அப்படி உங்களிரண்டு பேரையும் வெட்டுகிற தானால் எனகது என்ன பயம், இங்ஙனம் வெட்ட மாட் டேனோ? வேறே ஒரு காரியமிருக்கிறது, உங்களை வெட்டவில்லை யஞ்சாதே! நீ தண்ணீருக்குப் போடி

மென்றுசொல்லி, தூரதண்டிகையே? தசகண்டராவண னுக்குச் சத்துருவான ராமலக்ஷமணனை நமது பத்திர காளிக்கு பலி கொடுக்கவேண்டும். வெளியில் ஒருவரோ டுஞ் சொல்லாதே போடியம்மா! சுருக்கிலே தண்ணீர் கொண்டுவாடி யம்மா வென்று சொல்ல, தூரதண்டி மனது கசிந்து தெய்வமே ஆ! நானென்ன பாவஞ் செய்தேனோ பூர்வத்தின் தீவினை இந்த ஜென்மத்தில் இவ்வாறு நானும் என் மகனும் காலிலே விலங்கு மாட்டிக்கொண்டு புருஷனையும் பறிகொடுத்து இப்படி யிருக்கிறேனே. இந்த பாவமனுபவிப்பதல்லாமல் அந் தத் தரும புருஷரான ராமலக்ஷமணனை பலிகொடுக்கும் போது நான் ஜலங்கொண்டு வருவது தருமமா! ஐயை யோ? பாவம் வந்து விதித்ததே யென்று மயிலிராவண னைப் பார்த்து நான் தண்ணீருக்குப் போகமாட்டேன் அண்ணாவென்று சொன்னாள். அப்போது மயிலிராவ ணன் கோபத்துடனே அடி தூரதண்டிகையே! ஒருவ ரோடே சொல்லாதே யென்று சொல்லியும் நான் உன்னை தண்ணீர்க்குப் போகச்சொன்னால் இராமலக்ஷம ணனை கூப்பிடுகிறா யென்னடியென்று தனது உறை யிலே இருந்த கத்தியை உருவி இதோ உன்னை வெட்டு கிறேனென்று பயமுறுத்தினான், தூரதண்டிகை நடுங்கி ஒடுங்கி பயந்தயர்ந்து இதோ நான் தண்ணீர் கொண்டு வருறனேறனென்று கூறித் தங்கக் குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போனாள். அந்தத் தங்கக் கோட் டையைத்தாண்டி துலாயந்திரம் மீண்டு மயிலிராவண னுடைய உத்தியானவனத்திற்கு வந்துவிட்டாள்; அந் தச் சமயத்தில் அநுமார் கண்டு பயங்கொண்டு அங்கு னமே யிருந்து தன்னுடைய சரீரத்தை அணுவைப் போல் குறுக்கி அந்த மண்டபத்திலிருந்தோடி ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டு இலை மறைவிலே மறைந்திருந்தார்.

தூரதண்டியானவள் உத்தியானவனத்து கதவைத் திறந்து உள்ளே புகுந்துகொண்டு தாப்பாளைப்போட்டு விட்டு உட்கார்ந்துகொண்டு தன்னுடைய விசாரத்தி னாலே யழுகிறாள். ஆ தெய்வமே! என்னைப்படைத்த

கடவுளே! நானென்ன செய்வேன். இந்த பாதகம் என் தலையிலேவிடிந்ததோ! இராமலக்ஷ்மணனுடையஜீவன் போக முடிந்ததோ! அந்த மகா பாதகனுக்குத் துற் புத்தி மனத்திற் படிந்ததோ! பார்த்தையா புண்ணிய புருஷரானவர்க்கு இப்படி வருமோ? எந்த ராஜ்ஜியத் திற் பிறந்தார்களோ? என்ன பாவஞ் செய்தார்களோ? இந்த இராஜ்ஜியத்தில் ஜீவன்போகப் பிரமனெழுதினு னே! நானுமிந்தச் சண்டாளன் திண்டாளன் காவலி லே விலங்கு தரிக்க தெய்வம் விதித்ததோ? இராமலக்ஷ் மணருக்கு இப்படியும் லபித்ததோ! நமக்கும் அவர் களுக்கும் ஒன்ருகவும் ஆச்சுதோ! அவனுடைய எழுத் துப்போலாச்சுதோ! ஆ தெய்வமே! பரமசிவமாகிய தெய்வமே யென்று நொந்து துன்பமாக வார்த்தை களைத் தனது வாயில் வந்தபடி யுளறி பாதக விபீஷண ஞகிலும் இராமலக்ஷ்மணரை வந்து எடுத்துக்கொண்டு போகலாகாதோ? இல்லாவிட்டால் யாரோ அநுமா ரென்கிற புண்ணியவான் வால்கோட்டையாக யிட்டுக் காப்பாற்றினுரே! அவருக்காகிலும் வழிதுறைசொல்லி அனுப்பலாகாதோ! அடா விபீஷணு! கெடுத்தாயே! சத்துருக்கள் முன் காட்டிக்கொடுத்தாயே! இராமலக்ஷ் மணர் அநியாயமாகப் போகிருர்களே என்று பலவா ருக அழுகிருள். மண்ணிலே விழுகிருள். சுவாமியைத் தொழுகிருள். பூமியை அறைவா னிறைவான் அணி வாள் இராமனை நினைத்துத் துணிவாள்; இதுவென்ன விதி என்பாள் தெய்வமே கெதியென்பாள். இவ்வாறு பலவாருக மதிப்பதும் துதிப்பதுமா யிருப்பதை மரத் தில் ஒளித்துக்கொண்டிருந்த அநுமாரானவர் கேட்டு மகிழ்ச்சிகொண்டு பூரித்து ஆரவாரித்து எண்ணி யோசனைபண்ணி இவளாரோ கன்னிகை இராமகாரி யம் விசுவாசிக்கிருள். அதிகமாக பூசிக்கிருள். புகழ்கிருள் தெரியவில்லை. கிட்டப்போனுள் பயந் தோடிபோவாளோ அறியோம் அல்லது மயில் ராவணன்தானே மாறுவேடம் போட்டுக்கொண்டு இப்படி கபடு செய்கிருனே யாதொன்றும் தெரியோம் என்று நினைத்து அந்த மரத்தின்மே லிருந்தே

ஆகாயவாணி சொல்லுவது போலவே அநுமார் சொல்லுகிறார்.

கேளும் பெண்ணே! உன் மகனுக்கு ஒருவனும் திக்கில்லாமல் போனதென்ன! இராமலக்ஷ்மணருக்கும் அப்படிபோனதென்ன சொல்லென்ன, தூரதண்டிகை கேட்டு இதேது மனிதர் பேசுகிற குரலாயிருக்கிறது! மயிலிராவணன் ஒருவரோடே சொல்லாதேயென்று போகச் சொன்னானே, நாமிங்கே வந்தோமே, இப்படி யழுதோமே. அந்த மயிலிராவணன்தான் வந்தானோ அல்லது எவரையாகிலுங் கூட்டி யனுப்பினானோ இதேதுபேசுங் குரலாயிருக்கிறதென்று பயந்து அழுகையை நிறுத்தி எழுந்திருந்து குளத்திலே தண்ணீர் மொள்ள இறங்கினாள். அதை யநுமார் பார்த்து இனி சும்மா யிருக்கலாகாது; இவளண்டைக்குப்போய் பேசவேண்டுமென்று அந்த க்ஷணமே மரத்தைவிட்டிறங்கி தூரதண்டியிடத்தில் மெதுவாக நடந்துபோய் குளத்தின் படிகட்டின்பேரில் நின்றுகொண்டு சொல்லுகிறார்: வாரும் பெண்ணே! மாதுசிரோமணி! இராம லக்ஷ்மணருக்கும் உனக்கும் உன் மகனுக்கும் அநுமந்தனாகிய நான் சகிபாக்கிக்கொண்டு வந்தேன். அந்த இராமலக்ஷ்மணரென்கிற வழிபடு கடவுளர் எங்கே யிருக்கிறார்கள்? அறிந்தால் தயவுசெய்து சொல்லுமம்மா வென்று அநுமார் கேட்டருளினார். அப்போது தூரதண்டி அநுமாரைப்பார்த்து பயந்தெளிந்து சொல்லுகிறாள்; ஐயா அநுமாரே! நீர் என்னருகில் வாருமென்று அழைக்க, அநுமார் சந்தோஷித்து அவளருகில் போய் நிற்க தூரதண்டி சொல்லுகிறாள்: அடாவாடா அப்பா! அநுமாரென்று சொல்லுகிறாயே; குரங்கு ஜாதியல்லவா மனுஷரைப்போல் நீ பேசுகிறாய்; நானெப்படி நம்புவேனென்று சொல்ல, அநுமார் சொல்லுகிறார், வாரும் பெண்ணே தூரதண்டி யென்னும் ராட்சத ஸ்திரீயே! அப்படியேன் பயப்படுகிறாய், எனக்கு அறுபத்தினாலு பாஷையும் சகல சாஸ்திரமும் நீதிநூலும் சாதாரணமாய் விளங்கும் எறும்பு முதலிய சிற்றறி உயிர்களின்

பாஷையும் தெரியும். சந்தேகப்பட வேண்டியதில்லை, சும்மா சொல்லடியம்மா வென்று கேட்க, தூரதண்டி சொல்லுகிறாள்: வாரும் ஆஞ்சநேயா! அரிராமருடைய நேயா! அருணனாகிய வாயுவின் சேயா! நான் சொல்வதைக்கேளும் புஜபல பராக்கிரமம் பண்ணுகிறபோது ஒருகையினால் ராட்சதக்கூட்டங்களை யடித்தால் பதினெட்டக்ரோணி தண்டு தளம் மாண்டுவிட்டதென்றார்களே, அப்படிப்பட்ட புஜபல பராக்கிரம சாலியாகிய நீ இப்படி குழந்தை பிள்ளைபோலிருந்தால் எனக்கு காண்பிக்க வேண்டும் அதன் பின்பு நான் சொல்லுகிறேனென்று சொல்ல, அநுமார் தூரதண்டியைப் பார்த்து நீ அந்த சொரூபத்தைப் பார்த்தால் பயப்படுவாயென்று சொல்ல, அதற்கு தூரதண்டியானவள் சொல்லுகிறாள்.

கேளும்ஆஞ்சநேயரே! நீர்எவ்வித சொரூபம் எடுத்து காட்டினாலும் பயப்படமாட்டேன். மயிலிராவணனுடைய மாய்கைகளைக்கண்டு பயந்தெளிந்தேன் நீர் எவ்வித ரூபமெடுத்தாலும் பயந்தோற்றாது துரிதத்தில் உம்முடைய விஸ்வரூபத்தை யெடுத்துக் காட்டுமையாவென்று தூரதண்டிகை சொல்ல, அநுமார் பாரும் பெண்ணேயென்று சொல்லி மேகமண்டலம் வாயுமண்டலம் சந்திரமண்டலம் சூரியமண்டலம் நட்சத்திர மண்டலம் அளாவும்படியாக வளர்ந்தார்: தூரதண்டி பார்த்து பயந்து நடுநடுங்கி ஒடுங்கி கிடுகிடுத்து ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிறாள். அநுமாரே! உம்முடைய சொரூபத்தைப் பார்க்கத்தக்கவளல்ல; போதும் போதுமையா வென்று ஆடிப்பாடி அவரை நாடி அவர்பாதம் தேடி விழுந்து எழுந்து அடிபணிந்து அநுமாரென்று துணிந்து விசாரந்தணிந்து சிரமேற் கரங்குவித்து தீர்க்கதண்டஞ் சமர்ப்பித்தாள். உடனே அநுமார் அந்த சொரூபத்தைவிட்டு எப்போதும்போல சுருக்கி தூரதண்டி யண்டையில் நெருங்கி பயப்படாதே யென்று தைரியஞ்சொல்லி, பெண்ணே! உன் காலில் விளங்கேது யார் போட்டார்கள்; என்ன காரணத்தினால் உனக்கு விலங்கிட்டார்கள்; எங்கே

திருடினாய்; என்ன அடாத காரியத்தைச் செய்தாய்; என்ன சுமங்கலியே உன்னைப்பார்த்தால் சகலாபரணங் களுடன் பூஷணாலங்கிர்த்தையா யிருக்கிறாய்; கழுத் திலே மங்கிலியம் விளங்கவில்லை, உன் புருஷன் இருக் கிறானோ இல்லையோ! இராமலக்ஷ்மணாள் உயிரோடு சுகமாயிருக்கிறார்களோ இல்லையோ? உனக்கு இந்த விலங்குவந்த காரணார்த்தமென்ன சொல்லுமம்மா வென்று கேட்டார்.

இந்த வார்த்தையைக்கேட்ட தூரதண்டிகை அநு மாரைப் பார்த்து அன்போடு மின்போடும் அர்ச்சித் துப் பூசித்து பார்த்து சொல்லுகிறாள்: கேளுமையா அநுமாரே! இந்த மயிலிராவணன் மகா திண்டோ ளன்: வெகு சண்டாளன்; என்னையும், என் மகனையும் விலங்கிலே போட்டான். நாங்கள் திருடவுமில்லை; அள்ளவுமில்லை; துன்பஞ்செய்து கொள்ளவுமில்லை; அவன் வார்த்தையை தள்ளவுமில்லை; அந்தப்பாதகன் ஆங்காரத்திலேயே என் புருஷனைக் கொன்று என்னை யும் என்மகனையும் அநியாயமாக நாலாயிர வருஷகால மாய் மூன்னூறுபாரம் எழுகினாலே மிகுதியோடு தகுதி யான கையிலும்மெய்யிலும் தோளிலும் விலங்குபூட்டி விட்டானென்று கூறி! அவ்வசனத்தைக் கேட்ட அநு மார் நல்லது பெண்ணே, அந்த சண்டாளனிட்ட விலங் கெங்கேயென் றுக்கரித்துப் பற்கடித்து மீசை துடித்து காத்தை மண்மீது அடித்து காலையையுங் கையையும் பிடித்து விலங்குகளை ஒடித்து விட்டார். தூரதண்டிகை கண்டு மனமகிழ்ச்சிகொண்டு நயந்து வியந்து அநுமாரென்று பயந்து கைகட்டி வாய் பொத்தி தூரதண்டிகை உனக்கு விலங்கு போட்ட காரணமென்ன? உன் புருஷனாகிய புண்ணியவான் பெயரென்ன? உன் மகன் விலங்கிலேகிடக்கிறானென்று அழுதாயே அந்தச் சங்கதிகளை யெல்லாம் சவிஸ்தார மாக சொல்லவேண்டுமென்று அநுமார் கூறினர்.

அந்த வசனத்தைக் கேட்ட தூரதண்டிகை சொல்லுகிறாள்; கேளும் அநுமாரே! என்பேர் தூர தண்டிகை; என்புருஷன்பேர் காலதத்தன்; என் குமா

ரன் பேர் நீலமேகன்; கேட்டீரோ அநுமபூபா! என் புருஷனைக கொல்லவந்த காரணம் மயிலிராவணன் எனக்கு அண்ணன் அவனிந்த பாதாள லங்கையை அரசாட்சி செய்துக்கொண்டிருந்தவன், என் புருஷனை யும் தன்னோடுகூட வைத்துக்கொண்டு சகல அதிகார மெல்லாம் விசாரணைகளையும் விசாரித்து வரச்சொல்லி உத்தியோகக் கட்டளை யிட்டமா யிட்டிருந்தான். நானும் என் புருஷனுடன் சுகமாகச் சிறிதுகாலம் வாழ்ந்திருக்கும்போது, எனக்கு கர்ப்பந்தரித்து ஒரு பிள்ளையைப் பெற்றேன். அந்தப் பிள்ளைக்கு என் புரு ஷன் நீலமேகனென்று பேரிட்டார். அதன் பின்பு மயிலிராவணனுக்கு மாதங்கி என்பவளுடைய வயிற் றிலே ஒரு பெண் பிறந்தது. அந்தப் பெண்ணுக்கு ரூபவதியென்று பெயரிட்டு நாளொருமேனியும் பொழு தொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

அப்படி வளர்த்துவந்த சிறிது காலத்துக்குப்பின் என் புருஷனவன் மகனையெடுத்து முத்தங்கொடுத்து மடிமீது வைத்துக்கொண்டு கொலுக்கூட மண்டபத்தி லிருந்தார் அப்போது மயிலிராவணனும் தன்னுடைய குமாரத்தியாகிய அதிரூபவதிக்கு சகல ஆபரணந் தரித்து மடியின்மீது வைத்துக்கொண்டிருந்தான். இப் படியாக ஏக சிங்காதனத்தின் மீதிலே இருக்கும்போது மயிலிராவணன் என் புருஷனைப்பார்த்து, வாரும் பிள் ளாய் காலதத்தா! உன் மகனுக்கு இந்த ரூபவதி யென் கிறபெண்ணைக்கொடுத்து கலியாணம்பண்ணிவைக்கிறே னென்று சொன்னான். அந்தட்சணமே இடியிடித்தது போல் ஆகாயவாணி சொன்னதாவது: அடா வாடா மயிலிராவணா! இந்த ரூபவதியை யாருக்குக் கொடுத்து விவாகஞ் செய்துவைக்கிறாயோ அந்தப் புருஷன்பெயர் நீலமேகனாகும். அவனுக்கு இந்தப் பாதாள லங்கை முடி பொறுக்குமென முக்காலுஞ்சொல்ல, அப்போது சபையிலிருந்தவர்கள் எல்லோரும் ஆதியந்தமோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். உடனே மயிலிராவணன் திடீரென்று தனது சிங்காதனத்தை விட்டு கீழே குதி த்து கோபமதிகரித்து அச்சபையை மிதித்து குதித்து

சொல்லுகிருன்; கேளுங்கள் சபையோர்களே! யான் விளையாட்டுக்குச் சொன்னதை நீலமேகனுக்கு ஸ்தாபிதமாக அந்த ஆகாயவாணியரும் உறுதி சொல்லலாமோ! நீலமேகனுக்கு என் குமாரத்தியான ரூபவதியைக் கொடுக்கிறேனென்று சும்மா சொன்னேனே யொழிய, நிஜமாகச்சொல்ல வில்லையே! எனக்குச்சரியான பலசாலியானவன் எவனே அவனுக்கல்லவோ கொடுப்பேன். இந்த சொற்பமான நீலமேகனுககு என் குமாரத்தியைத் தருவேனே? இவ்வசனம் அடாது. இனி விட்டுவிட்டால் காலதத்தனையும், அவன் பெண் ஜாதியையும், பிள்ளையையும் கொல்லாமல் விட்டுவிட்டால் பின்னுல் நமக்குக் கேட்டைத் தருமென்றெண்ணி இதோ இந்தக் கத்தியினுல் வெட்டுகிறேனென்று என் புருஷனைப் பிடித்துக்கொண்டான். அப்போது என் மகன் ஓட்டமாக ஓடிவந்து இப்படி சேதியென்று என்னேடு சொன்னுன், அப்போது நான் என் மகனுகிய நீலமேகனை வீட்டிலே போட்டுக் கதவை மூடி ஒளித்து வைத்துப் புருஷனை அழைத்துவர மீண்டும் திரும்பிச் சென்றேன். அதற்கு முன்னமே மயிலிராவணன் என் புருஷனை வெட்டிப்போட்டு எனக்கெதிராக அந்தக் கத்தியையும் பிடித்துக்கொண் டோடிவந்து அடி தாரதண்டிகையே! உன்மகன் ஓடிவந்தானே அவன் எங்கே யெங்கே என்று என் தலைமயிரைச் சுருட்டி கீழேதள்ள அவன் கையினுலே ஓங்கிக் குத்தும்வேளையில், நான் அண்ணு! என்னிரு கண்ணு! ஐயா இருபது கையா! ஆண்டவனே! முடிகள் பூண்டவனே! என்னை ஏன் குத்துகிருயென்று இரக்கமோடு வேண்டினேன். அவன் மனதிரங்கி இதோ பெருவிலங்காகிய ஒரு விலங்கை மாட்டி விடுகிறேனென்று பதினுயிரம் பாரமுள்ள இந்த எழுகினுலே பண்ணின விலங்கை என் காலிலும் என் குமாரன் காலிலும் தரித்தான், அவ்விலங்குடனே என் மகனுன நீலமேகன் காவற்கூடத்திலே யிருக்கிறுனென் றடிவாண முறையாக ஆதியந்தமாக கூறிப் பின்னும் அநுமாரே! நீ என் பங்கு தேவனுக வந்து நாற்பதினுயிர வருஷமாகத் தரித்திருந்த பெருவிலங்காகிய திருவிலங்

கை முறித்துத் தரித்துவிட்டீரே! வானர சேனதிபதியே! வழிபடு தெய்வக்கதியே! மாயன் புகழு நிதியே! மன்னர் துதிக்குந்துதியே! ஆஞ்சநேயா! ஆயன் சகாயா! அரும்பதத்தூயா! அடியார்களுக்கு நேயா! அநுமந்தா! என்முன் வந்தான் ஐயனே! மெய்யனே! தீரனே! வீரனே! சீலா! அன்பரனுகூலா! சரணம் சரணம் என்னை யாண்டருளும் தருணம் என்று பற்பலவாக புகழ்ந்து அஞ்சலிசெய்து இருகைகளையும் நீட்டி திருமுகங்காட்டி அபயஸ்தந் தாயென்று கேட்டாள்.

அநுமார் சந்தோஷித்து தூரதண்டியைப்பார்த்தவள் கையைப் பிடித்து உள்ளங்கையில் அடித்து நன்மதி யெடுத்து அபயஸ்தங் கொடுத்துச் சொல்லுகிறார்; வாரும் பெண்ணே! உனது சேதியெல்லாங் கேட்டுத் திருமனங் களித்தேன். ஆனந்தக்கடலில் குளித்தேனென்றெனது பராக்கிரமம் நீயறியப்போகிருய், அந்த மயிலிராவணனை அதம்பண்ணிப்போடுகிறேன். உனது குமாரனுகிய நீலமேகனுக்கு அவனது பாதாளலங்கையாகிய இந்த நகரத்திற்குப் பெரிய துரையாகப் பட்டங்கட்டி அந்த ரூபவதியென்னு மாதை அவனுக்கு மணம் செய்வித்துப் போவதுமன்றி, நாடுநகர முதலியவற்றைச் சீர்திருத்தி அரக்கர் படைகளை நீக்கிவிட்டுப் போவேன்; அஞ்சாதேயென்று பற்பல தைரியஞ் சொல்லி பின்னுஞ் சொல்லுகிறார். கேளும் மாதே தூரதண்டிகையே! நமது வழிபடு தெய்வமான இராமலக்ஷ்மணுளெங்கே யிருக்கின்றார்கள்: மயிலிராவணன் எங்கேயிருக்கின்றான்; என்ன செய்கின்றான்! அவன் புஜபல சௌரியமென்ன! பராக்கிரம வீரதீரமென்ன? எல்லாமறிய சொல்லவேண்டுமென்று வினவ, வாரும் அநுமாரே? என்ன சொல்லப் போகிறேன்; நிஷ்கள நிர்மல நிர்விஷய சுத்தசைதன்னியமாகியும் பார்வதா சமேதனுகியும் குணங்குறி யில்லாததாயும் விளங்கி யிருக்கப்பட்ட சாக்ஷாத பகவானுகிய பரமேஸ்வரனிடத்திலே மூவேழு தலைமுறைக்கு மழியாத வரம்பெற்றவன், வீராதிவீரன, தீரமுள்ளவன், மாயா வித்தைகள் கற்று சிறந்தவன், புண்ணியமற்றவன்,

அவனைத் தேவராலும் மூவராலும் ஜெயிக்கப்படாது. இந்த மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் ஒருவருமில்லை அவனைப்போலொத்த பராக்கிரமசாலிகள் யாவருமில்லை; நீர் ஜாக்கிரதையாகச் சண்டைசெய்து ஜெயிக்கவேண்டுமென்று தூரதண்டிகை சொல்லினாள். அநுமார் சொல்லுகிறார்: நல்லது அப்படியே அவன் சமர்த்தனென்று சொன்னாயல்லவா? நல்லதாகட்டும். அவனை நானொருவனுமே ஏகாங்கியாய் வீரதீர சண்டப்பிரசண்டனாய் யுத்தத்தில் மடித்துவிடுகிறேன்; என் பலத்தை அறியப்போகிறாய். அதிருக்கட்டும்; இதோயிருக்கிற தங்கக்கோட்டை வாசலிலே துலாயந்திரமொன்றிருக்கிறதாம்; அதிலே சிறிது இராக்ஷதர்களிருக்கிறார்களாம்; அதின் விவரம விரைவிலே சொல்லென்ன, தூரதண்டிகை சொல்லுகிறாள்: கேளுமையா வானர சிரோமணியே! அதோ பாரும்; அந்தக் கோட்டை வாசலில் துலாயந்திரங் கட்டி யிருப்பதை; அதிலே மயிலிராவணனுக்குச் சத்துரு யாவர் வருவாரோ அவர்களைக் கண்டிப்பதுந் துண்டிப்பதுமாக நிறைகோலில் நிற்பார்கள். அந்த நிறைகோல் மூன்று தரஞ் சாயுமாயின் அவன் சத்துரு, இவன் மித்துரு, இவன் இஷ்டம், இவன் துஷ்டன் இவன் சகோதரன் இவன் விசுவாசனென்று அறிந்து கொள்ளுவார்கள். இவன் சத்துருவென்று கண்டுகொண்டால் அங்ஙனம் காவலாயிருக்கும் 20-லக்ஷம் ராக்ஷதர் வந்து மூனைந்து யுத்தவாதம் புனைந்து கோபக்கனல் கனைந்து சினந்து கதித்து கொதித்து மதித்து துதித்து பிடித்து அடித்து கசக்கி நசக்கி உதைத்து வதைத்து மண்ணிற் புதைத்து விடுவார்களே என்று கூறினாள்.

பின்னும் அநுமாரானவர் சொல்லுகிறார்; வாரும் பெண்ணே! இந்தக் கோட்டை வாசலிலுள்ள அவாவரை யானே தப்பாமல் கொல்லுவேன். நீ எனக்கோருபாயம் செய்யவேண்டுமென்ன, தூரதண்டிகை அநுமாருக்குச் சொல்லுகின்றனள்: ஓ வீராதிவீர தீரபராக்கிரம விற்பன சொற்பனமுள்ள அநுமானே! என்னாலாகும் காரணார்த்தமானது யாவை? அவைகளைச்

சொல்லுமையா! அடியேன் சிரமேற்கொண்டு நடக்கப் பிரியமுற்றிருக்கிறேனென்ன. மயில்போலும் சாயலும் அயில்போலும் விழியுங் குயில்போலு மொழியும் அன்னத்தின் ஒயில்போலும் நடையையுடைய பெண் பாலாகிய தூரதண்டிகையே கேளும்: மாதர்க்கரசியே! அந்தக் கோட்டைவாசலுக் கப்பால் என்னைக்கொண்டு போய்விட்டால் நான் அத்தனை பேரையும் ஆலையிலாடும் கரும்பு எவ்வண்ணஞ் சதையுமோ அவ்வண்ணம் போல் யாவரையுமடித்துக் கடித்து படுகளஞ் செய்து விடுவேன்; எமபுரஞ் செலுத்திவிடுவேன் இந்த உபகாரஞ் செய்தால் போதுமானது என்று அநுமார் சொல்ல, அதைக்கேட்ட தூரதண்டிகை நடுங்கி ஒன்று ஆஞ்சநேயரோடு சொல்லுகிறுள்: ஐயனே! வானரத் துய்யனே! யான் எவ்வாறு போவேன்; விலங்கு முறிபட்டுத் தறிபட்டுப்போனதை இனி எவ்வாறு செல்ல என்னவுபாயம் நீர் செய்தது சகாயம் அங்ஙனே போனல் அபாயம் வருமே என்ன செய்கிறது; இதுவுமன்றி உம்மை அவ்விடம் யழைத்துப் போனல் தராசு முள்ளாகிய நிறைகோல் சாயுமே; உடனே காரியம் கெட்டுப்போகுமே; சரிக்கட்டிப்போடு வாரே ராமமூர்த்தி தேடுவாரே யிதற்கென்னசெய்கிறது என்னுலாகாதென்று வருத்தமடைந்து சொன்னுள்.

அநுமார் நோக்கி மனதைத் திடமாக்கி, கவலையென்பதை நீக்கி, கலக்கமென்பதை போக்கி, யாதொரு விசேடஞ் சொல்லினர். சமீபத்திலுற்று கேளும் பெண்ணே! நீ கூறினவாறே அந்தத் தராசாகிய நிறைகோல் சாயுமாயினும், உன்னை எவனொருவன் கண்ணுக்கிப் பார்ப்பானுகில் உடனே கண்டிக்கவும் தண்டிக்கவும் காத்து வருகிறேன் பயப்படாதே இந்த உபகாரம் பண்ண வேணுமென்று கூற, அம்மாது சொல்லுகிறுள்: ஆனுலும் எப்படிக் கொண்டுபோவேன்; இவ்வளவு கெம்பீரமான ரூபமோடிருக்கிறீரே என்று சொல்ல, அநுமார் சொல்லுகிறுர்: வாரும் பெண்ணே! இதோ என்னுடைய விசித்திரத்தைப் பாருமென்று கூறி சந்தோஷம் மீறி சரீரத்தை உருவி

காலமையை நிருவி ராக்ஷதரைக் கொல்லக் கருவி திரணமாத்திரத்தில் சிறிய உருவமைத்து தூரதண்டி கையைப் பார்த்து தண்ணீர் குடத்தை எடுத்து தலை மீது வைத்துக்கொள்ளச் சொல்லி அந்த தண்ணீர்க் குடத்தின் மீதிலே மாங்கொத்தை ஒடித்து வைத்து அந்நீர்க் குடத்திற் போட்டு மாவிலைக்கொத்திலே ஈபோல மறைந்திருந்தார். தூரதண்டிகை மகிழ்ந்து அநுமாரிருக்கிற மாவிலைக் கொத்தினைப் பிடுங்கி குடத்தின்மீது வைத்து மெள்ள மெள்ள நடந்து செல்ல தங்கக்கோட்டை வாசலிலே யிருக்கிற இராக்ஷ தரைப் பார்த்து எவ்வாறு போவோம்: என்ன அனர்த்தமாகுமோவென்று ஏங்கி வீங்கி காலடிவாங்கி ஒடுங்கி நடந்து தங்கக் கோட்டையைக் கடந்து துலா யந்திரமான தாரசென்கிற நிறைகோலுக்கப்பால் போனாள். உடனே அந்தத் தராசுக்கோலானது தலை கீழ்மேலாக யிருக்க பெருக்க விழுந்தவுடனே இராக்ஷ தாள் திடுக்கென்று பயந்து நயந்து விழுந்து அயர்ந்து அண்ணாந்து இறுமாந்து பார்க்குமளவில் சத்துரு வைக் கண்டதில்லை; தூரதண்டிகையை கண்டார்கள் கோபங்கொண்டார்கள்; யாரையோ ஒருவனையழைத்து வந்தாற்போற் றோன்றுகிறது என்று ஐயுற்று, அங்ஙன மிருந்த 80-ஆயிர லட்சம் ராக்ஷதாளும் அதிகாரி யான தலைவன் ரத்தாட்சன் என்பவனோடு முறையிட் டார்கள். ரத்தாட்சன் அதிசீக்கிரமாக வலதுபாரிசத்தி லிருந்த கத்தியை உருவிக்கொண்டு தூரதண்டிகை முன்னே சென்று நின்று அடிவாடி தூரதண்டிகை யென்னுந் திருடி! எங்கே போகிறாய்? ஆரை யழை த்து வந்தாயோ சோதனைக் காட்டடி! இதோ உன்னை வெட்டுகிறேன் குத்துகிறேன் கழுவேத்துகிறேன் கள்ளமில்லாமல் உள்ளபடி சொல்லடி, இங்கே நில் லடி யென்று சொல்ல திடுகிடென்று அயர்ந்து நிற்க லுற்றாள்.

ஆஞ்சநேயர் அந்தச் சமயத்தில் மாவிலை கொத்தி லிருந்த வண்ணமாக ஒளித்து மனது களித்து சிரசை அசைத்து திடீரென்று கோடை யிடித்ததுபோல்

குமுறி ஆகாயம் பூமி பாதாளம்வரையிலும் ஏகசொரூபமாக விஸ்வரூபமெடுத்து கீழேகுதித்து கோபங்கதித்து அந்த ராக்ஷதன் உருவிய கத்தியைப் பிடுங்கிக்கொண்டு அரக்கரோடெதிர்த்து யுத்தஞ் செய்கிறபோது அரக்கர்கள் கண்டு அவரவர் வில்வளைத்து நாணேறிட்டு பூரி-கோவை-ஆதம் - பட்சி - யஞ்சினி - நரம்பு-நாரி-புடம்-குணம்-முதலியது நாணேறிட்டு நாகம்-வாளி-கணை-பல்லவம்-வண்டுந்தூரம்-சங்கம்-பத்திரம்-அந்திரம்-தோவென்று பேர்பெற்ற அம்புகளையும்; விசிதப்பூதை-பதவுரி-பாளம்-தோணியகழி-கொடை-சீலிமுகம் என்று நாமகரணம் பெற்ற பாணங்களையும், கரவேகசரவேகமாக வில்லிற் புதைத்து குணத்தொனி பண்ணி, ஆகாயம் பூமி அண்டகடாக மெண்டிசையும் வெடிக்கும்படியாக கார்மழைபோலப் பொழிந்தார்கள். அநுமார் அதுகளைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு இடது கை கேடயத்தினேடு விலக்கி வலதுகை கேடயத்தினலே ஓங்கி படீல் படீலென அடிக்கிறபோது, அந்த அடியானது கோடைகாலத்திலே இடியிடித்ததுபோல் திடீல் திடீலென்று கற்பங் கலங்கும்படி இடித்து அடித்து புதைத்து காலால் துடைத்து தலைமாடு கால்மாடு,கால் மாடு தலைமாடாக வெட்டி புஜங்களைத்தட்டி பிணமலை போற் குவித்து தாகந் தாகமென்று சிலர் தவிக்க அநுமாரானவர் சற்று மிளைபாது களையாது யானைக்கூட்டத்திலே போய்விழுந்த வீரசிங்கம்போல் ஒருமணி நேரம் முன்னும் பின்னும் பாராமல் ஜாடுகிறபோது சிலர் ஏங்கினுர்கள் சிலர் தூங்கினுர்கள், சிலர் ஆத்மாவை விட்டு நீங்கினுர்கள்! சிலர் வேலாயுதத்தைத் தூக்கினுர்கள், சிலர் பரமண்டலத்தில் ஓங்கினுர்கள், ஆயுதங்களை கையில் வாங்கினுர்கள், சிலர் மூர்ச்சைப்பட்டுத் தேங்கினுர்கள், சிலர் குத்துயிராக உளறினுர்கள், சிலர் குற்றுயிரோடு தேறினுர்கள் இப்படி நானுவிதமாக அநுமார் நிர்த்தூளி செய்துவிட்டார்.

அந்த அரக்கர் படையிலே பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மன்னர், மண்டலீகர், யானைத்தலைவர், சேனைத்தலைவர், குதிரைத்தலைவர், ஒட்டகத்தலைவர்,

படைத்தலைவர், யூகத்தலைவர், தண்டத்தலைவர் முதலிய ராட்சதபடைகளெல்லாம் ஈட்டி-பாங்கு-சங்கு-பாலா-யெரியம்பு-பொரியம்பு - தறியம்பு - நெற்றியம்பு - வில்லுகள் - சங்கு - சக்கரம் - காலாள்கள் - கோதண்டம்-பிண்டி - பாலம்-கொடுமரம்-தொடுமரம் - விடுமரம்-எடுமரம்-பழுப்படை-கொழுப்படை - எழுப்படை - வேலாயுதம்-சூலாயுதம்-அஸ்திரம்-சஸ்திரம் - வச்சிராயுதம்-குந்தம்-தொந்தம்-நந்தம்-கூர்வாள்-மீன்வாள் - உடைவாள்-கடைவாள்-கூர்வாள்-குறுந்தடி-நெறுந்தடி இவ்வாறு நானுவித ஆயுதங்களை யெடுத்து முகங்கடுத்து இராட்சதர்களெல்லாம் பற்களை நெறநெறவென்று கடித்து மீசை துடித்து அநுமாரோடு கைகலக்கிற காலத்தில் ஆஞ்சநேயப் பெருமாள் சீக்கிரமாக ஜாக்கிரதையோடு ஆக்ரமித்து பராக்கிரமங்காட்டி வியாக்கிரமம் போலச் சீறி கோபம் மீறி அவனை இவனடிக்க இவனை அவனடிக்க அவன் மார்பில் இவன் குத்த இவன் மார்பில் அவன் குத்த. அவன் தோளில் இவன் குத்த, இவன் தோளில் அவன் குத்த, வலம் இடமாக இடம் வலமாக கிறுகிறென்று நின்று சென்று சுழன்று சுழன்று விழன்று ஒருவர்க்கொருவர் சரிசமானமாகச் சண்டை செய்தார்.

இப்படி இவர் சண்டை செய்கிறதை ஆகாயத்திலுள்ள தேவர்கள் யாவரும் பார்த்து ஆச்சரியப்பட்டு ஆதிகாலத்திலே சாட்சாத் பிரம சைதன்னியராயும், தந்தைக் குபதேசம் வந்தித்த குருவாயு மிருக்கப்பட்ட கந்தன், கடம்பன்; காங்கேயன், வேலுடைக்கடவுள், தேவசேனாதிபதி, மயிலேறு சேவகன், கோழிக்கொடியோன், தாந்தன், சேந்தன், குறிஞ்சிவேந்தன். வள்ளி சாந்தன் என்று சொல்லத்தக்க சிவசுப்பிரமணியக் கடவுளோடு எதிர்த்த சூரபத்மாவும், அவனுடை புத்திரமித்திர களத்திராதி சேனைகள் எவ்வாறு அழிந்தனவோ அவ்வாறு சுப்பிரமணியக் கடவுள்போல் இந்த அநுமார் ஒருவராக யிருந்து அந்தத் தங்கக் கோட்டை வாசலிற் காவலாயிருந்த மயிலிராவணனுடைய இராட்சதப் படைகளைப் பெரிய விருக்ஷத்தின்

அச்சுவேர், நச்சுவேர், சிறுவேர், பெருவேர், பக்கம் வேர், பழுவேர், சல்லியவேர், மூவேர், அடிவேர், நுனிவேர் இப்படிச் சொல்லப்பட்ட வேர் களைந்து மரத்தைவெட்டி தள்ளுவதுபோல் அரக்கர் படைகளைத் தலைக்காட்டாமல் முடித்து தலைகளைத் தரித்து நிமைப்பொழுதிலே படுசூரணம் பண்ணினார். அதன்றி ஒரு கற்பனை சொல்லுகிறேன்: (அதாவது வானத்தின் மாலைப்பொழுதில் செவ்வான மிடுகிறது. அதை ஆகாயவாணி பூமிதேவியை நோக்கி அடிமண்ணுக் கரசியே! என்னைப்பார் சிவப்புப்புடவை கட்டிக்கொண் டேன் என்று சில நாளைக்கு முன்னே சொல்லியிருந் தாள், அவ்வார்த்தையை வெகுநாளாய் மனதில் வைத் திருந்த பூமாதேவியும் இன்று யுத்தகளத்திலே இரத்த வெள்ளம் ஓடினதை பூமாதேவி கண்டு ஆகாயவா ணியை நோக்கிச் சொல்லுகிறாள்: அடி விண்ணுக்கர சியே! நீ சிவப்புப் புடவை கட்டிக் கொண்டதுபோல் நானும் கட்டிக்கொண்டேன் பாரடி யென்று சொல்லு மாபோல அநுமார்போர் செய்தனர்.) இது புராணி கர் கூற்று. அதாவது இக்கதை எழுதினவர் கருத்தாம்.

அநுமார் சொல்லுகிறார்: கேளும் பெண்ணே! தூரதண்டிகையே! இப்போது நடந்த யுத்தகளறியைப் பார்த்தனையா! எமது பராக்கிரம வீரதீர சூரத்துவத்தை யென்னென்றுசொல்ல, தூரதண்டிகை சந்தோஷித்து அநுமாருக்கு வலம் இடம், இடம் வலமாக வணக்கந்தந்து மனத்தன்புகூர்ந்து ஆர்ந்து சொல்லுகிறாள்: ஓ அநுமாரே! நீர் வல்லவர் யாவருக்கும் நல்லவர் உம்மைப்போல் பராக்கிரமசாலி உலகத்திலில்லை யென்று துதித்தாள்; மனதில் மதித்தாள்; நீர்க்குமிழி போல் குதித்தாள்; இவரே அதிவீரரென்று கட்டளை விதித்தாள் எரிகிற வெண்ணையில் விழுந்த அதிரசம் போல் குதித்தாள். மகிழ்ந்தாள் புகழ்ந்தாள் மயிலிராவணன் கெட்டான் போவென்று இகழ்ந்தாள். அச்சமயம் நோக்கி ஆஞ்சநேயர் சொல்லுகின்றனர்; மாதர்க் கரசியே! கடகராஜன் வீடெங்குந் தேடி இங்கு வந்தது என்று கூற, ஐயா! அநுமந்தய்யா! சிரஞ்சீவி

மெய்யா! சொல்லுகிறேன்; இதோ இருக்கிறதே அது கடகன் வீடு. அதற்கப்பால் விருசிமுகன் வீடு அதற்கப்பால் பத்திரகாளியம்மன் வீடாகிய கோவில். அதை அநுமார் கேட்டு அப்படியா வென்று சொல்லிக் கடகன் வாசலிலே சென்று அங்ஙனம் நின்று கொல்லுவோ மென்று தனதழகிய வாலை உள்ளே மெள்ள பஞ்சுபோல நுழைய விட்டார்.

அங்ஙனம் அவனும் பெண்சாதியும் மன்மதனும் ரதியும்போல பஞ்சணைமீது சரசசல்லாப வுல்லாச விலாச அமளி செய்துக்கொண்டிருக்கிற சமயத்தில் அநுமாரானவர் வாலால் இருவரையும மடலிருகக் கட்டி சுருக்கி வுருட்டி புரட்டி திரட்டி தெருவிலிழுக்கக்கண்டு பயங்கொண்டு சிரமேற் கரங்குவித்து ஆண்டவரே! நான் முன்னே வந்து அழகிய வாலுக்கு எனது பற்களைப் பலிகொடுத்து புறமுதுகு காட்டி ஓடி வந்துவிட்ட என்னை ஏனிழுக்கிறீர்! உமது வார்த்தைக்கு வரவில்லை;- அதோ மகா பாவியான மயிலிராவணனைக் கொல்லுமையா சரணம் சரணம் தற்காலம் விட்டுவிடுமென்று வணங்கி இணங்கிச் சொல்ல, அநுமார் மனதிரங்கி புருஷனையும் பெண்சாதியையும்விட்டுவிட்டார் அதன் பின்பு விருசிமுகன் வீட்டிலும் அவ்வாறு தமது வாலைப் புகட்டிவிட்டு அந்த அரசனையும் மடலிருகச் சுருட்டிக் கட்டி இழுத்து காகரவென்று சுழற்றி நிலத்திலே யடித்தார். அவன் யமபுரஞ் சேர்ந்தான்.

அப்பால், மந்திரி, பிரதானி, தண்டைத்தலைவர், யூகத்தலைவர், அணித்தலைவர் முதலிய பேரையும் அவ்வண்ணமே தமது வாலை ஒழுங்காகப் புகுபடி யந்தப் பத்து வீட்டையும் இடிவிழுந்த மரத்தைப்போல் யதம்பண்ணி யாவரையுங் கொன்று கசக்கி, நசுக்கி, தீயிற்பொசுக்கி, தூளனம்போல் செய்து தூரதண்டிகையை நோக்கி, மாதுசிரோன்மணியே! பார்த்தாயா என்று சொல்லினர். அவள் சொல்லுகிருள்; வாரும் வானர சிரோன்மணியே! என் மகனுனவன் அந்த வீட்டில் தான் விலங்குடனே யிருக்கிருன்; தயவு

செய்து அவன் விலங்கைத் தரித்துவிடுமென்று நமஸ்கரித்தாள்: அநுமாரானவர் அதேது நான் இந்தப் பாதாள இலங்கா புரந்தரா துறந்தரா நிரந்தரா வென்று கூறுமாப்போல கூறி, அவனிருக்கிற வீட்டின் கதவை நொறுக்கி உள்ளேபோய் விலங்குகளை நறுக்கிவிட்டு உள் நுழைந்தார். நீலமேகன் பார்த்து இவனெவனோ புதிதாய்த் தோன்றி நம்மைக் கொல்ல வந்த கூற்றுவனென்று கருதி மூலையில் நடுங்கி ஒளித்தான், அநுமாரானவர் அவனைப்பார்த்து அடா நீலமேகா! வெளியே புறப்படடா வென்று சொல்லக்கேட்டுத் திரும்பவும் கதவுமூலையி லொளித்தான்; அநுமார் கிட்டப்போ யிருப்போமாகில் இவன் மிகவும் பயந்திருக்கிறனென்கிறதாய் தூரதண்டிகையை யழைத்து அடிபெண்ணே! உன் மகன் என்னைக் கண்டு மூலையிலே பதுங்கினன். அவனை நீ வந்தழையுமென்று சொல்ல, தூரதண்டிகை யவ்வாறே காவற்கூடத்திலே சென்று நீலமேகனைப்பார்த்து, அடா நீலமேகா! ஏன் மூலையிலே பதுங்கிறாய்? வெளியிலே வாடா குமாரகா வென்றழைக்க, அவன் பயந்தெளிந்து தாயாரிடம் வந்து அம்மாதாயே! உன்காலிலிருந்த விலங்கெங்கே! யாவர் முறித்தவர்கள் சொல்லுமம்மாவென்று நயத்தோடு கேட்டனன். தாய் சொல்லுகிறாள்:

அப்பா குமாரகா நீலமேகா! நான் இந்த வானர சிரோன்மணியானவர் காலில் விழுந்தேன். அவர் தயவுசெய்து என் விலங்கை வாங்கிவிட்டார் என்று மகனைப் பிடித்து இருவரும் அநுமாருடைய காலிலே விழுந்து கும்பிட்டு, அடா பயப்படாதே இவர் ரட்சிக்க வந்த ஆண்டவனடா என்று சொல்ல, அநுமாரை நோக்கி எங்களை இரட்சியுமையா வெனச் சொல்லினர். ஆஞ்சநேயர் களிகூர்ந்து உங்களிருவரையும் இரட்சிக்கவும், மயிலிராவணனைப் பட்சிக்கவும் வந்து தோன்றினேன். நீலமேகனுக்குப் பட்டங்கட்டி அந்த ரூபவதியை மணஞ்செய்து விட்டுப்போகிறேன். இதோ அபயஸ்தம் பிடிபிடியென்று தூரதண்டிகையிலே போட, நீலமேகன் சந்தோஷ மெய்திருக்க,

அநுமார் நீலமேகனைக் கிட்ட வழைத்து அப்பா! இராமலட்சுமணனை இங்கிருக்கா நின்ற பத்திரகாளி கோயிலுக்குப் பலியிடப் போகின்றானாம். அந்தக் காளி கோயில் எங்கே யிருக்கிறது காண்பியுமென்று சொல்ல நீலமேகன் சொல்லுகிறான்: கேளும் ஆஞ்சநேயரே! அந்த பத்திரகாளி கோயிலிலே அவர்களிருவரு மிருக்கிறார்கள். அந்த கோயிற்புறமானது மகா உன்னதமாயிருக்கும். அதோ பார்த்தீரோ தோன்றுது, அதிலே இராமலக்ஷ்மணாள் இரண்டுபேர் இருக்கிறார்களென்று சொல்லி, பின்னும் ஐயா! அவர்களைப் போய் பார்த்தவுடனே நீர் இராமலக்ஷ்மணாள் அகப்பட்டாரென்று சந்தோஷித்து இனி மயிலிராவணன் தான் போனாலென்ன நமக்கு இராமலக்ஷ்மணாள் அகப்பட்டு விட்டாரென்று களிப்பெய்தி சும்மாபோய்விட்டா லெப்படி, விலங்கைத் தரித்துவிட்டு எங்களை பரதேசியாக விட்டுப்போனா லெப்படி, அப்புறம் மயிலிராவணன் எங்க ளிரண்டு பேரையும் வெட்டிப் போடுவானே! அநுமந்தா ஆனபடியினாலே எனக்கு வெகு பயமாயிருக்கிறது. சுவாமி! நானொரு யோசனை சொல்லுகிறேன். கோபஞ் செய்துகொள்ளவேண்டாம் நீர் பட்டங் கட்டுகிறேனென்றீரே எனக்குப் பட்டமும் வேண்டாம்; இதோ இந்த மயிலிராவணனை முன்னம் சங்காரம் பண்ணிவிட்டு அப்பால் இராம லக்ஷ்மணனை எடுத்துக்கொண்டு உமக்குச் சரிப்போனவனுக்கு இந்தப் பாதாள லங்கையைப் பட்டங் கட்டிவிட்டு அப்பால் நீர் போகலாமாவென்று சொன்னான்.

அப்பால் அநுமார் சொல்லுகிறார்: தம்பி நீலமேகா! நீ இப்படி சமுசயப்படவேண்டாம்; நான் உனக்கு அபயஸ்தங் கொடுத்தது தவறுமோ? தப்பத் தக்கதில்லை. இந்த நாழிகைக்கு நம்பிக்கை சொல்லுகிறேன். இதோ யிருக்கிற ஆகாயவாணி பூமிதேவி சாட்சியாக நானுனக்குப் பயப்படாமல் வாழப் பட்டங் கட்டி விவாகஞ்செய்து பின்பு உன்னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போகிறேனென்று சொல்ல, நீலமேகனுந் தூரதண்டிகையும் தைரியத்துட னிருக்க,

மற்றுஞ் சொல்லுகிறார்கள்: வாரும் ஆஞ்சநேயா எங்களுக்கு மயிலிராவணனுடைய கெடுதி இப்படி சொல்லத்தக்கதாக விருக்கிறது, அநுமந்தசுவாமி யென்று சொல்லிவிட்டு இனிமேல் சுகமாய் பத்திரகாளி கோயிலுக்குப்போம்; நாங்களுங்கூட வருகிறோமென்று சொல்ல, அநுமார் நீங்களிரண்டுபேரும் என்கூட வர வேண்டாம்; ஏனென்றால் யுத்தகளத்தில் நான் சண்டை செய்யும்போது பயப்படுவீர்களாதலால் இந்த மண்டபத்தில் தானே பத்திரமோடிருங்கள் என்று சொன்னார். நீலமேகனும் தூரதண்டிகையும் அநுமாரை நோக்கிச் சொல்லுகிறார்கள்: கேளும் அநுமந்தா, நீர் பத்திரகாளி கோயிலுக்குப் போயிருக்கிற சமயத்தில் மயிலிராவணன் ஆள்களை யனுப்பி எங்களைப் பிடித்து வெட்டிப்போட்டா லப்போது எங்களுக்காதரவில்லையே நீர் போய்விட்டா லிவ்விடத்தில் நாங்களெப்படி யிருப்பதென்று சொன்னார்கள்.

அவ்வார்த்தைகளை அநுமார்கேட்டு இருவரையும் பார்த்துச் சொல்லுகிறார்: வாரும் பிள்ளாய் நீலமேகா அவ்வாறே இங்ஙனம் யாராகிலும் வந்துங்களை பிடிக்க வந்தால் என்னை நினைத்து கணைத்துக் கூப்பிடும். அப்போது நான் வந்து யதம்பண்ணிப் போடுகிறேனென்றார். ஆனால் அவ்வாறு நல்லது போமென்று சொன்னார்கள். அநுமார் விடைபெற்றுக்கொண்டு யதிசீக்கிரமாக பத்திரகாளி கோயிலுக்கு வந்தார். அங்ஙனம் அக்காளி கோயில் கதவு சாத்தப்பட் டிருப்பதைப் பார்த்து, ஐந்து விரலைக் குவித்திறுக்கி கெட்டியாகப் பிடித்திழுத்து ஓங்கி ஒரு குத்துகுத்தினார். அங்கிருந்த பதினாயிரம் சூலவண்டி யிழுக்கத்தக்கதான பொற்கதவானது பொடிப்பொடியாகப் போய்விட்டது. உடனே அங்கே யிருக்கப்பட்ட அதிசயத்தை சொல்லுகிறேன் வினவக் கேட்டருளுங்களென்று நாரதர் கௌதமருக்குச் சொல்லுகிறார்! அந்த மாகாளி கோயிலிலே ஆயிரக்கால் மண்டபம்-அபிஷேக மண்டபம்-எண்ணெயாடு மண்டபம்-பளிங்கு மண்டபம்-முத்து மண்டபம்-வண்ண மண்டபம் - திண்ணமண்டபம் - கல் மண்ட

பம்-மாகத மண்டபம்-கோமேதக மண்டபம் - வச்சிர மண்டபம்-பச்சை மண்டபம்-புட்ப மண்டபம் - வயிர மண்டபம்-பவள மண்டபம்-தாள மண்டபம்-பதுமை மண்டபம்-புதுமை மண்டபம்-மதுர மண்டபம், பிரகாரங்கள் சாலைகள் துஜஸ்தம்பம் கோபுரஸ்தூபி கொடிக்கம்பம் இப்படி நானுவித அதிசயத்தைப் பார்த்து தேவர் மனதுவாடி, மூலஸ்தானத்துக் கதவு மூடியிருப்பதால் கோபநீடி. உடனே தமது கையால் ஜாடி உடைத்துவிட்டார். அப்படி உடைத்துப் பார்க்குமளவில் அங்குனம்மகண்டி-ஜாமுண்டி-சாமளை-காளி-வேதாளி-யுமை - மாதங்கி-தாருகர்-பேர்பெற்ற தையல்-பைரவி-சீதை-ஆரணி-நாரணி தஞ்சலணங்கு-ஜயை முகக்கன்னி-மதுபதி ஆளி-யுந்தி-மாயை - யோகினி - இடாகினி-வல்வை-குறமகள் இப்படி முப்பத்து மூன்று பெயர்படைத்த பத்திரகாளியானவள் வாளைக்கொடி போலே நீண்டபல்லும், சன்னல் பின்னல் சடையும், மழுப்படையும், புலித்தோலுடையும், அகோரரூபமுமாக விருந்தாள். கந்தமுனி சஞ்சப் பெண் முதலிய பேர்கள் ஊழியம் பண்ணுகிறதைப் பார்த்து கிட்டச் சென்று அவளருகில் வைத்திருக்கிற பெட்டியைக் கண்டு மகிழ்ச்சிகொண்டு திறந்து பார்க்கவெய்தி இப்படியா செய்தியென்று கருதி அந்தப் பெட்டியை மெள்ள அசையாமலெடுத்து மேல்மூடியைத் திறந்துப் பார்த்துவிட்டார். இராமலக்ஷ்மணுள் நிர்ச்சேஷ்டையாக .மயிலிராவணன் மந்திரித்த கட்டினுலும் மாயா சூத்திரத்தாலும் கால்கை யசையாதிருப்பதைப் பார்த்திருந்து இவர் உடம்பெல்லாந் தடவிப்பார்த்து தட்டி எழுப்பலாகாதெனக்கருதி, இராமலக்ஷ்மணுள் மயக்கந் தெளிந்து விழித்துப் பார்க்க வேண்டுமென்று அநுமார் ஸ்தோத்திரம் பண்ணுகிருர்.

ஓ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா, அனுதரக்ஷகா! ஆபத்பாந்தவா! க்ஷீராப்திநாதா! லட்சுமிசமேதா! பக்தவச்சலா! பரந்தாமா! பன்னகசயனு! சீதாசமேதா! பங்கயப்பாதா! ஆதிவராகா! அச்சுதா! கோவிந்தா! கோபாலா! இராமச்சந்திரா! சோமசுந்

திரா என்று துதித்தார்; மதித்தார். நித்திரையோ ஏழைபங்காளா! இருதயத்தோளா! இராமலட்சுமணுள் எண்வகைக்குணளா! என்று கூப்பிடும்போது அங்ஙனே சற்று இராமச்சந்திரக் கடவுள் குவளைக்கண் விழித்து பவளவாய்த் திறந்து சொல்லுகிருர்: வாரும் அநுமாரே! நாம் எங்கே வந்தோம்; இதேது பிள்ளா யநுமந்தா! கோவிலுங் கோபுரமும் மண்டபமுமாயிருக்கிறது; இது எவ்விடம்; இது யாருடைய தேசம்; இது என்ன ஸ்தலம்; இங்கேன் வந்தோம்; விவரமாக சொல்லுமென்று கேட்க, அநுமார் சொல்லுகிருர்: ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியே!ஜகத்குருவே! இந்த மயிலிராவணனை பாவி என் வாலகோட்டையை ஏதோ ஒரு உபாயம்பண்ணி ஏமாற்றி உங்களை எடுத்து வந்துவிட்டான். இதனாலே நானுன்னைச் சேவித்து அழைத்துப்போக வந்தேனென்று சொல்லி யருளினர். இவைகளை யெல்லாங்கேட்ட இராமமூர்த்தி கண்களைத்திறந்தவர் மறுபடியும் மயிலிராவணன் அபிமந்திரித்த மந்திரோச்சாடத்தின் மாய்கையாலே இவர் கண்ணைத் திறக்கப்படாமல் மூடிக்கொண்டு மறுபடியும் நித்திரை செய்யலுற்ருர். அதை அநுமார் பார்த்து அதிக விசாரப்பட்டு இனி நாம் சும்மாயிருக்கப்படாதென்றெண்ணி தீர்க்காலோசனை பண்ணி இப்போது நாழிகை பதினைந்தாச்சுது. இனி தாமதஞ் செய்தால் கெடுதி நேரிடும். இராமலட்சுமணுளை இவ்விடத்தில் வைக்கக் கூடாது. முன் செய்தவாறுபோல் இப்போது மயிலிராவணன் மதிமயங்கித் தியங்க மோசம் பண்ணுவான். இவர்களை ஒருவரிடத்தில் பத்திரப்படுத்திவிட்டு பின்பு இராக்ஷதர்களோடு சண்டைபண்ண வேண்டுமென்றெண்ணி நினைத்துத் திடலென்று இராமலக்ஷமணுளை மூன்று பிரதக்ஷணம் பண்ணி நமஸ்கரித்துக் கும்பிட்டு பெட்டியை அஸ்தத்தி லசையாம லெடுத்து அந்த மயிலிராவணன் பட்டணத்தைவிட்டு என்பது கோட்டைகளையுந் தாண்டி அப்பாலேபோய் அங்ஙனமிருக்கலாமென்று ஒரு மலை யிருக்கிறது: அந்த மலையைப் பார்த்து அதிலே மண்டபமிருக்க, அம்மண்டபத்தினுள்ளே பெட்டியை இறக்கிவைத்து அதற்குள்ளே

ஒரு குகையைப் பார்த்து அந்த குகையிலே இராம லக்ஷமணுளை கொண்டுபோய் வைத்து பூமியைப் பார்த்து அநுமார் சொல்லுகிறுர்.

கேளுமம்மா பூமாதேவியே! உன்னுடைய புருஷ ஞைவர் இதோ இருக்கிறுர்; இந்த மயிலிராவணன் கையிலே அகப்பட்டபடியினுலே நான் எடுத்து வந் தேன். உனது மாப்பிள்ளை இப்படி யிருக்கலாமா! உன் தங்கை இலங்கையிலேயே அசோக விருக்ஷத்தின் கீழே யிருக்கிறுள். இனிமேல் இராமலக்ஷமணுள் இராவண சம்மாரஞ்செய்து உன் தங்கையை விடுவிக்கப்போகிறுர் கள். ஆனபடியினுல், நான் மயிலிராவணனுடனே யுத் தம் பண்ணி அந்தச் சண்டாளனைக் கொல்லவேணும், பின்பு வந்து இராமலக்ஷமணுளை எடுத்துக்கொண்டு போகிறேன். அந்தமட்டும் நீ வைத்திருந்துகாப்பாற்றி ஒப்புவிக்க வேண்டுமென்று சொல்ல, பூமிதேவி அநு மாரைப் பார்த்து வாரும் ஆஞ்சநேயப் பெருமாளே! இதோ இவ்விடத்தில் வையும்; பத்திரமாகப் பாதுகாக் கிறேன் என்று சொல்லுமாப்போல் பூமியானது திடீ லென்று வெடித்தது. அநுமார் புகழ்ந்து அந்தவெடிப் புக் குகையிலே வைத்துவிட்டு பத்திரமென்று சொல்லி மயிலிராவணன் பட்டணத்திற்கு வந்து விட்டார். உடனே பூமிதேவியும் நாமிப்படி யிருந்தால் கெடுதி நேரிடும். இராம லக்ஷமணுளைக் காண்பித்துக் கொடுக்க லாகாதென்று வெடிப்புக் குகையை மூடிக்கொண்டாள் இந்தக் கதை இவ்வாறிருக்க, அங்கே கடகன் என்கிற இராக்ஷதனும் அவன் பெண்ஜாதியும் அநுமார்வாலிற் கட்டுப்பட்டு சரணம்பண்ணி விடுவித்துக்கொண்டு வீடு சேர்ந்து மறுபடியும் பெண்சாதியும் தானுமாக மன்மத கிரீடை நடத்தி வரும்போது கடகனைப் பார்த்துச் சொல்லுகிறுள்: வாரும் பிராணநாதா! அறிவுக் குறவா! நீர் மயிலிராவணனுடைய உப்புஞ் சோறுந் தின்று அவனுக்கு இரண்டகந்தேடலாமா; சத்திராதி யான குரங்குக்குப்பயந்துஓடலாமா? இனி உமது அரச னிடத்தில் நாடலாமா? வீரமில்லாத நீர் என்னிடத் தில் கூடலாமா? அன்னமிட்டவன் பெண்சாதியை

ஃன்ன மிட்டவாறுபோல நீர் செய்து விட்டீர்; அல்லாமலும் நீர் அவனோடு போய் சொல்லாமலு மிருப்பது தர்மசாஸ்திர நெறிக்குத் தகுதியல்லவென்று அந்தப் பெண்பால் நற்புத்தி விளங்கக் கூறினாள். கடகன் கேட்டு இதோ பாரடி போய்ச் சொல்லுகிறேனென்று புறப்பட்டுச் சீக்கிரமாகத் தோட்டவழியிலே அநுமாருக்குத் தெரியாதவனாக திரும்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு மயிலிராவணனுடைய ஆசாரவாசலில் நுழைந்தான். அவ்விடத்தில் பன்னீராயிரங்கோடி இராட்சதர்கள் சத்துரு பயமில்லாமல் ஆயுதங்களைத் தலைக்குயரமாக வைத்து நித்திரை பண்ணுகிறார்கள். அவர்களைக் கடகன் கண்டு கையாலே கட்டி என்ன தூக்கம் தூங்குகிறீர்கள். அதோ அநுமார் வரப் போகிறாரென்று சகலமான பேருக்குஞ் சொல்லி, அசுரனென்பவனை யழைத்து மயிலிராவணனுக்கு இந்த சங்கதியைச் சொல்லென்று கடகன் சொல்லி யனுப்ப அவசரக்காரனான அசுரன் மயிலிராவணனுக்குச் சொன்னான்.

அப்போது மயிலிராவணனும், அவன் பெண்சாதியும் சப்ரகூட மஞ்சத்தில் ஸரச அமளி நடத்தும்போது பெண்சாதி நாயகனை நோக்கி, ஆண்டவனே! உமது மார்பழகுபோல் ஒருவருக்கு மில்லையென்றாள். நாயகன் சொல்லுகிறான்: பெண்ணே! உனது கிளிமுகப்போ லுலகத்தில் ஒருவருக்கு மில்லையென்று மடலிருகச் சேரத்தழுவி சரசசல்லாப உல்லாச அமளி நடத்தியிருக்கிற சமயத்தில் மயிலிராவணன் காதிலே நாராசங் காய்ச்சிவிட்டதுபோலும், பச்சை மரத்திலே வயிரவாணி கடாவினாற் போலும் புகல, மயிலிராவணன் கேட்டு கிருஷ்ண சற்பம்போற் சீறி சீக்கிரமாக வெழுந்து கொலுக்கூடத்தில் வந்துட்கார்ந்து, அப்பா கடகா! வாரும்! அநுமான் வந்தானென்றாயே! துலாயந்தரத்திலிருந்த பூபதியான • இராட்சதாளெப்படி அநுமாரை விடுவார்கள்; அவர்களை இங்கே யழைத்துவர ஒரே வெட்டாக வெட்டுகிறேனென்றான்.

கடகன் சொல்லுகிறான்: வாரும் எங்களரசனே! வெற்றிமுரசனே! இலங்கைக் கதிபதியே! நீர் வெட்டு கிற பரியந்த மிருந்தாலல்லவோ; அவர்களை அநுமா ரென்னுங் குரங்கடித்துக் கொன்றுவிட்டதென்றான். மயிலிராவணன் வாசிமுகன் முதலிய மந்திரிகளைக் கூப்பிட்டு யோசனை செய்யவேண்டுமென்று சொல்ல கடகன் கூறுகிறான். ஐயா! நானொருத்தன் தவிர வாசி முகன் முதலிய பேர்களும் இறந்தார்களென்று சொல்ல, மயிலிராவணன் அப்படியா வென்று கருவி வாளையுருவி மந்திரிகளிடம் மருவி இனிமேல் நடக்கத் தக்கதான காரியமென்னவென்று கேட்டு கடகனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

கேளும் பிள்ளாய் கடகா! என் தங்கையான தூர தண்டிகையைத் தண்ணீர்க்குப்போக வனுப்பினேன். அந்தப் பாவி யழைத்து வந்தாப்போலிருக்கிறது. இல்லாவிடில் அநுமாரிங்கேவரத் திராமுண்டோ! நல் லது, எல்லாவற்றிற்கும் அந்தத் தூரதண்டிகையும் நீலமேகனையும் போட்டடைத்து வைத்த காவற்கிடங் கிலே யிருக்கிறார்களோ யில்லையோ அதைச் சற்றே பார்த்து வாவென்றனுப்பினான். கடகன் யதிசீக்கிரமா யோடி அந்த காவற்கூடத்தைப் பார்த்தான். அப்படி பார்த்தபோது கதவு படுசூரணமாய்ப் போயிருப்பதை யும், விலங்கு தூளாயிருப்பதையும்பார்த்துச்சீக்கிரமாக ஓடிவந்து மயிலிராவணனுக்கு நமஸ்காரஞ் செய்து சொல்லுகிறான்: கேளுமையா சுவாமி! உமது காவற் கூடத்தில் இருவரும் யவ்விடத்திலில்லை யென்று சொன்னான். மயிலிராவணன் யப்படியா வென்று சீக் கிரமாக ஆக்கிரமித்து பராக்கிரமம்மீறி, வியாக்கிரமம் போலச் சீறி, கடகனைக்கண்டு இருவரையும் இப் போது வெட்டிப் போட்டு வாவென்று கடக னுக்கு விடைகொடுத்தனுப்பித் தானுமெழுந்திருந்து ராமலக்ஷமணனைப் பத்திரகாளி கோயிலிலே வைத்தோ மென்று யந்தப் பெட்டியைப் பார்க்க வந்தான். யங்கேகதவு இடிந்து முறிந்து மண்ணாய்ப் படி ந்து படுசூரணமானதைப் பார்த்து, இதேது யதிசயமா

யிருக்கிறது யென்று பெட்டியைப்பார்த்தான். அங்கே பெட்டியில்லாதபடியால் அனுமாரென்னுங் குரங்கு எடுத்துக்கொண்டு போய்விட்டது போலிருக்கிறது. இனி எனன செய்வோம்; பத்திரகாளியும் அவன் கூப்பிட்ட விடத்திற்குப் போனளோ வென்று சந்தேகித்து யந்த மாகாளி முகத்தை பார்த்தான். பார்த்த விடத்திலே பத்திரகாளி அகம் நாணி முகம் கோணி விசன மடைந்திருப்பதைப் பார்த்து சரி தான் பத்திரகாளியும் அநுமாரோடு போய்விட்டாளென்று எண்ணி யோசனை பண்ணி மயங்கி தியங்கி என்ன செய்கிறதென்று ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

இவனிப்படியிருக்கக் கடகன் யதிசீக்கிரமாகப் பட்டாகத்தியை யுருவிக்கொண்டு நீலமேகனையும் தூரதண்டிகையையும் வெட்டவேண்டி அவர்களெங்கே யிருக்கிருர்களென்று கோட்டைகளைத் தாண்டி மூலைக்குமூலை தேடி இராஜமார்க்க வீதியிலே வரும்போது, இவனுக்கெதிராக யநுமார் வரக்கண்டு பயங்கொண்டு கடகன் கிடுகிடுவென்று நடுங்கியொடுங்கி இனி எப்படித் தப்பித்தோடுகிறதென்று யதிக விசாரத்துடன் பட்டாகத்தியை தெருவிலே எறிந்துவிட்டு ஒருசந்திலே நுழைந்துக் குட்டிச் சுவர்களின் வெளிகளைத் தாண்டி விழுந்து எழுந்து நான்கு மூலையும் பார்த்து அனுமார் கண்ணிலகப்படப் போகிருமென்றெண்ணி பயந்து அயர்ந்து நடுங்கி ஒடுங்கி வேர்த்து போரிற் புறமுதுகு காட்டி ஓடுவதுபோல் ஓடி இனி அரண்மனைக்குப் போக வேண்டுமே அநுமானவன் எவ்விடத்திலாவது ஒளித்திருந்து வழிமறித்துக்கொண்டு அதம் பண்ணுவானேவென்று நாலுமூலையும் பார்த்து வாயுவேக மனோவேகமாய்ப்பறந்து அரண்மனைக்கு ஓடிவந்து மயிலிராவணன் கொலுவுக்குச் சென்றுபார்க்க, அப்போது மயிலிராவணன் கடகனைப் பார்த்துச் சொல்லுகிருன்: அடாவாடா கடகா! நீ போயிருந்த காரியமெப்படியிருந்ததோ அப்படியே நான் போன காரியமு மிருந்ததென்று சொல்லி உடனே மயிலிராவணன் அவசரக்

காரரை அழைத்துச் சொல்லுகிறான்: அப்பா வேவு காரர்களே! நீங்கள் துரிதமாய்ப் போய் அந்தத் தூர தண்டி நீலமேகனை இருவரும் எங்கே போயிருக்கிறார் கள். அதிசீக்கிரமாகப் பார்த்து வாருங்களென்று சொல்லியனுப்ப, அவர்களவ்வாறே அரசன் சொற் படி பாதாளவிலங்கை 400-தெருவீதியுந் தேட வரும் போது நீலமேகனும் தூரதண்டிகையும் அநுமாரும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பயந்து நடு நடுங்கிக்கொண்டு ஓடி மயிலிராவணன் சபையிலே வந்து சேர்ந்து சொல்லுகிறார்கள்; வாரும் பாதாள இலங்கேஸ்வரா! அதோ அநுமாரும் நீலமேகனும் தூரதண்டியும் பேசிக்கொண்டு வெகு அன்னியோன் னியமாயிருக்கிறார்களென்று சொன்னார்கள்.

அப்போது மயிலிராவணன் வெகு கோபத்துடன் ஆயிரம் இராட்சதப் படைகளைக்கூட்டி நீலமேகன் தூரதண்டிகை இரண்டுபேரையும் பின் கட்டாகக்கட்டி யிழுத்து வாருங்களென்று சொன்னான். அப்படிச் சொல்லிய மயிலிராவணன் சொல்லைத்தவறாது அந்த ஆயிரம் பேரும் ஏககாலத்தில் கடல் பொங்கியவாறு போல் திரண்டுருண்டு அவரவர் ஆயுதங்களை யெடுத்து அணிந்து வில்லுகளைக் கையிற்றாங்கி அம்புறாத் தூணியை முதுகிலே தாங்கி ஆயுதபாணிகளாக அந்த ஆயிரம் பேர்களுந் தெருவீதியில் தேடிவரும்போது, அநுமார் ஒரு மூலையி லொளித்திருந்தார். இராக்ஷதர் கள் வந்துவிட்டார்கள். நீலமேகனும் தூரதண்டிகை யும் இராக்ஷதர்களென்ன செய்யப்போகிறார்கள் பார்ப் போமென்று இருமாந்திருக்க, உடனே அரக்கர்கள் வந்து இரண்டுபேரையும் பிடிகக நெருங்கி அருகில் சென்று அடி வாடி தூரதண்டிகையே! அடா வாடா நீலமேகா! எஙகள் மயிலிராவணனுடைய சத்துரு வைக் கொண்டுவந்து நமது கோட்டைக்குள் விட்டு விட்டீர்களா வென்று அதட்டி வுருவி வெருவி முகங் கறுவி கோபம் பெருகிப்பிடியுங்கள்; முடுகி அடியுங் கள்; சேர்த்துக் கட்டுங்கள்; குறிபார்த்துத் தலையை வெட்டுங்க ளென்றார்கள்.

இவ்வாறு நானுவித வார்த்தைகளாடினார்கள்; இதுகளைக்கேட்ட நீலமேகனும் தூரதண்டிகையும் கிடுகிடுத்துப் பயமெடுத்து அஞ்சி மனது திஞ்சி. ஆஞ்சநேயா! அநுமந்ததூயா! ஆபத்பாந்தவா! அனுதாரக்ஷகா! அச்சுதனோடு போந்தவா! சத்துருக்களிடத்திற் காட்டிக் கொடுத்தீரே இப்படியுஞ் செய்யலாமா! வானரநாமா! மருவர்த்தாமா! வடிவுறுசோமா! நெடிபெறு இராமா! காக்கக்கடவீர் ஏழை பங்காளா! என்னையாளவென்று முறையிட, அவ்வார்த்தையை அநுமார் கேட்டு அதிசீக்கிரமாக ஆகாயத்திலெழும்பி குபீலென்று அரக்கர் படைமேல் விழுந்து யானைக்கூட்டத்திலே சிறிய சிங்கம் புகுந்தவாறுபோல் இராக்ஷதசேனையை ஒவ்வொருவராக கால்களைப் பிடித்து கரகரவென்று சுழற்றி ஆகாயத்தை நோக்கி மண்ணிற்றுக்க சேவகர்கள் பார்க்கத் தனது வஞ்சகந் தீர்க்க யாவரையும் கசக்கி எமபுரஞ் சேர்த்தார்.

மாண்ட அரக்கர்களிலொருவன் பிழைத்து மயிலிராவணனிடத்திலோடிவந்து, ஓ! ஓ! வென்று விரைந்து சொல்லுகிறான்: ஆண்டவனே! மகுடாபிஷேகம் பூண்டவனே! இலங்காதிபதியே! ஆயிரம்பேர் போனோமே அத்தனைபேரையும் அநுமார் சரிப்படுத்தி விட்டாரென்று சொல்ல, மயிலிராவணன் தீர்க்காலோசனை செய்து அதிக கோபத்துடன் சகல ராணுவங்களையும் கூட்டி கடகனை நோக்கி, அடா வாடா கடகா! உக்கிரசேனை யனுப்பி ஆயிரங்கோடி குதிரைவீரர், இரண்டாயிரங்கோடி யானைவீரர், ஒட்டக வீரர்கள் அவரவராயுதங்களுடனே ஆக்யாபித்து 21-ரதங்களைப்பூட்டி போர்க்களத்தில் நாட்டுமென்று சொல்லியனுப்ப, கடகன் அப்படியே நல்லதென்று ஓட்டமாக ஓடி அச்சேனுதிபதிகளுக்குச் சொல்லி மயிலிராவணன் பக்கத்தில் வந்துசேர்ந்தான். உடனே யாவரும் யுத்தகோலத்துடனே வந்தார்கள், மயிலிராவணன் தனது தேரைச் சிங்காரித்துக்கொண்டு வரச்சொல்லி ஆயுதபாணியாகத் தேரின்மேலேறினான். அவனது சேனுதிபதிகளாகிய உக்கிரசேனன் - தசமவீரன் - காலதெட்சன் - வித்திய

சமன்-வக்கிரசேனன் - சுக்கிரன்-இருமாலி - அக்கினி கேது-தூமகேது - நாமகேது - தீரகாலன் - கடாராக்ஷதன் - அம்மன் - நிகும்பன்-மந்தரன் முதலான சுத்த வீரர்கள் புடைசூழச் சத்துருக்கள் தாழ முத்துக் குடைகள் கவிய மாற்றலர் கரங்கள் சிரமேற் குவிய சிங்கக்கொடி பறக்க, மயிலிராவணனுனவன் சகல சேனைகளும் புடை சூழும்படி பாதாளம்விட் டிறங்கினுன். இப்படி யிருப்பதை அநுமார் பார்த்து மகா கோபத்துடனே விஸ்வரூப மெடுத்துக்கொண்டு இராக்ஷதக் கூட்டத்தில் விழுந்து தாறுமாருய் நொறுங்கடிக்க, அப்போது இராக்ஷதர்களெல்லாம் அநுமாரைச் சுற்றிக் கொண்டு ஈட்டி, எறியம்பு, பாணமுதலிய ஆயுதங்களை எறிந்தார்கள், இருபதினுயிரந் தேரின் பேரிலே இருக்கிற மந்திரி பிரதானி சேனுதிபதிகள் தங்கள் தங்கள் வில்லுகளை வளைத்து ஆயுதங்களைத் தொடுத்து அநுமார்பேரிலே சரவருஷம் பொழிந்தார்கள்; ஆயிரங் கோடி பாணம் வருஷித்தார்கள்; நூறுகோடி மதயானைகளும் இருப்புலக்கையைப் பிடித்துக்கொண்டு கரகர வென்று சுழற்றி விட்டெறிய ஒரு வெள்ள மிராக்ஷதர்கள் சகல ஆயுதத்தினுலு மடிக்க அநுமாரானவர் பார்த்து தனது வாலை விஸ்தீரணமாய் வளைத்து வால் கோட்டையாகத் தன்னைச் சுற்றிலும் கட்டிக்கொண்டு அக்கோட்டைக்குள்ளே சட்ட திட்டமாய் காலை மடித்துக்கொண்டு உட்கார்ந்தார். அப்போது சகல இராக்ஷதர்களும், இரதகஜ துரகபதாதிகளும் அக்காலத்தில் அநுமாருடைய வால்கோட்டையின்பேரில் முப்பத்திரண்டாயுதங்களும் பிரயோகஞ் செய்து சின்னபின்னமாய் அடிக்க, அநுமாரானவர் யோசனைசெய்து நாமிப்படி உட்கார்ந்திருந்தால் பத்து நாளாகிலு மிவ்வண்ணமே இராக்ஷதர் ஒன்றுக்கு மஞ்சாமல் சண்டை செய்துக் கொண்டிருப்பார்கள். ஆகையால் நாமெழுந்திருந்து சண்டைபண்ண வேண்டுமென்று தனது வாலை பிரம்மாண்டமாய் வளைத்து இராக்ஷதரை வாலினுலும் கையாலும் மெய்யாலும் பல்லாலும் கல்லாலு மடித்து உதிரத்தைக் குடித்து ஆத்துமத்தை முடித்தும், தேர்களை யொடித்தும், யானைகள், சேனைகள், ஒட்டகங்கள்,

கரடிகள், புலிகள் யாவற்றையும் அதமாக்கிப் பொடிப் பொடியா யுதைத்து தும்சப்படுத்தி பிரளய காலாக்கினி ருத்திரனைப்போல் ஆஞ்சநேயரடிக்க சகல சேனையுமடி பட்டு மூலையிலோடுவதைக் கண்டு கதாசிங்க னோடு கிற பேரைத் தடுத்து ஆஞ்சநேயரைக் கொல்லுகி றேன், யானவனை வெல்லுகிறேன்; நீங்கள் பயப் படாம லிருந்து வேடிக்கை பாருங்களென்று சொல்ல, ஆஞ்சநேயர்பேரில் சகல சேனைகளும் வந்து அநேக பாணங்களைப் பொழிந்தார்கள். அப்போது ஆஞ்ச நேயர் தனதுவாலை கதாசிங்கனுடைய இரண்டு காலின் கீழ் புகவிட்டு சுற்றிக்கொண்டு கீழே யிழுத்துவிட்டு நடு மார்பில் மிதித்தார். மிதித்த மாத்திரத்திலே அந்தக் கதாசிங்கன் நூறு நீர்க்குழி பதுங்கி நூறு கையும் ஒடிந்து கண் வெளியே பிதுங்கி குடல்கள் நசுங்கி எலும்புகள் முறிந்து எமபுரத்தை யடைந்தான்.

அப்போதுவித்திய சிம்மனைவன் மனம்பதைத்து கோபமீறி நாகத்தைப்போல்சீறி அநுமாரைப்பார்த்து, அடா ஆஞ்சநேயா! அநுமந்தராயா! நில்லு! கதா சிம்மனை அடித்து மாய்த்துவிட்டோமென்று கர் வங்கொள்ளாதே! வீணைக் துள்ளாதே! துள்ளிய மாடு பொதி சுமக்குமா? என்முன்னே சண்டைக்கு வாடா! இப்போதே சங்கரிக்கிறேனென் றுண்மைகூற, அப்போதநுமார் வித்தியசிம்மன்பேரி லெதிர்த்தார். வித்தியசியமன் வில்லை வளைத்து அநேக பாணங்களைப் பிரயோகஞ் செய்தான். கோபத்துடனே துரிதமா யோடி தேரின்பேரி லிருக்கிற வித்திய சிம்மனைப் பிடித்து தமது கையினால் நோக்கி யறைய வித்திய சிம்மன் மூர்ச்சையாய்த் தேரின்பேரிலிருந்து கீழே விழுந்து விரைவா யெழுந்து ஓட்டம் பிடித்தான். அவனோடு வதைக்கண்ட கடகரோம னென்கிறவன் ஆஞ்சநேயரோ டெதிர்த்து யுத்தஞ் செய்தான். அவனையுந் தன்னுடைய கையா லறைந்தார். அந்த அறையினால் கடகரோமன் இரத்தத்தைக் கக்கிக் கொண்டு கீழே விழுந்து எமபுரத்தைச் சேர்ந்தான்.



பின்பு நான்காம் வீட்டில் பிரவேசிக்க அவ்விடத்திலே காலதெட்சனைவன் அதிசீக்கிரமாய் வில்லிலே பாணங்களைப்பூட்டி பிரயோகஞ் செய்தான். அப்போது ஆஞ்சநேயர் அநேக ஆயுதங்களினல் யுத்தஞ் செய்த பின்பு தனது வாலை கீழே புகவிட்டு தேரின் பேரிலே இருக்கிற காலதெட்சனைக் கட்டி யிழுத்து ஆகாயத்தில் தூக்கி கரகரவென்று சுழற்றி நிலத்திலடிக்க அவனும் எமபுரத்தை யடைந்தான். அதைக் கண்ட உக்கிரசேனன் வக்கிரசேனன் இவ்விரண்டு பேரும் கண்களில் தீப்பொறி பறக்கக் கோபித்து, வில்லைவளைத்துக் குணத்தொனி செய்தார்கள் அப்போது அநுமார் அதிசீக்கிரமாக எழும்பி குபீலென்று உக்கிரசேனனுடைய தேரின்பேரில் ஒரு காலும், வக்கிரசேனனுடைய் தேரின்பேரில் ஒருகாலும் வைத்து வீராவேசத்துடன் மிதித்துக்கொண்டு இருவர் கழுத்தையும் இரண்டு கையினல் பிடித்து அங்கு மிங்கு மசையாம லமுத்த இராட்சதாள் யாவரும் பிதுர் கலங்கி அவரவர் கழுத்தையு மிறுக்கிப் பிடித்து இரத்தம் பீறி விஷங்களைக் கக்கிக்கொண்டு விழ அம்பலப்படுத்தி யாவரையும் எமபுரஞ் சேர்த்துப் பின்பு ஏழாம் வீட்டில் போகிறபோது தீரசிம்மனைவன் ஆஞ்சநேயரைப்பார்த்து அட்டகாசஞ்செய்தான். அடா வானரா! உனக்கு வாலிருக்கிறதென் றல்லவோ கர்வ மடைந்திருக்கின்ருய். இதோ பாரென்று உன்னைப்போல் நாவானது அதிக பெரியதாயிருக்கிறது இந்த நாவினலே உன்னைக் கட்டிப்பிடித்து விழுங்கி விடுகிறேனென் ருண்மைகூறி இருவரும் மல்யுத்தம் செய்ய அப்போது ஆஞ்சநேயர் பிணைடைய தீரசிம்மனைவன் ஆஞ்சநேயரைப் பிடிக்கவேண்டுமென்று தனது நாவைவிட்டான். அநுமார் தனது கையால் ஐந்து சுற்ருகச்சுற்றி யிழுத்து கரகரவென்று ஆகாயத்தில் சுழற்றி தீரசிம்மனின் நாவானது அடியோடே அறுந்து விழுந்து எமதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

பின்பு ஆஞ்சநேயர் எட்டாம் வீட்டில் போகிறபோது சம்புமாலியானவன் அதிக கோபத்துடனே

வர ஆஞ்சநேயரறிந்து தனது வாலை கீழேவிட்டு சம்பு மாலிக்குத் தெரியாமல் காலையுதைத்து கொண்டு இரண்டு விழியும் பிதுங்க பூமியில் விழுந்து காலன் பதி யடைந்தான். அதைவிட்டுப் போகிறபோது அக்கினி கேதுவென்றவன் அநேக பாணங்களினால் தும்சப்படுத்த ஆஞ்சநேயர் தனது வாலினால் அவன் கழுத்தை இறுக்கிப் பிடித்து எமபுரஞ் சேரும்படி செய்துவிட்டு அப்பால் போகிறபோது ஆஞ்சநேயரோடெதிர்த்து யுத்தஞ் செய்ய நிர்வாகமில்லாமல் மூலைக்கு மூலையாய் விழுந்து அலைச்சல் வந்து மயிலிராவணனண்டையிலே போய் உரைக்க. மயிலிராவணன் தனக்குத்தானே யோசனைசெய்து ஓ இராட்சதர்களே! மாதங்கி சொன்னபடியே ஆச்சுது பார்த்தீரோ? இதென்ன வதிசயம்! முன் ஆகாயவாணி நீலமேகன் இப்பாதாள இலங்கையைப் பட்டங் கட்டிக் கொள்வானென்றார்களே; அவளுடைய திருவாக்குக் கெதிர் வாக்கில்லாமல் முடியுமாப்போற் றோணுதென்று மனதில் நினைத்து,விசாரத்துடனே தன் மனது தாளாமல் கோபம் பெருகி மனமுருகி இராக்ஷதரைப் பார்த்துச் சொல்லுகிறான்.

இராக்ஷதர்களே! வாருங்கள்; உங்களா லானவரையில் பாருங்கள்: மூலைக்குமூலையேன் ஓடுகிறீர்கள். நான் இருக்கச்சே உங்களுக் கென்னபயம். நானே அந்த அநுமந்தனைச் சங்காரஞ் செய்வேன். என்னுடைய மாய்கையைக் கண்டு பிடிக்கக்கூடுமோ? அவன் புத்தியில் நாடுமோ? நாடாது. ஒரு சமயம் கண்டு பிடித்தாலு மென்னுடைய சீவனிருக்குமிடம் அவனுக்குத் தெரியுமோ? அவனுக் கென்னைச் சங்கரிக்கும்படியான வல்லமையுண்டோ? இல்லை. நானே அந்த அநுமாரைக் கொல்லுகிறேன். இதோ பார் என்னுடைய வீரயாகத்தைச்செய்து மகா பூத பிரளயத்தை அழைத்துக்கொண்டு போய் அவனை அதம் பண்ணுகிறேனென்று பராக்கிரமங்கூறி, ஆஞ்சநேயர் பேரில் ரதத்தையேவ, ஆஞ்சநேயர் சகல ராக்ஷதர்களும் சுகமென்று நினைத்த காலதக்ஷன் - உக்கிரசேனன் - வக்கிர

சேனன்-கடகன்-திரிகடசிம்மன்-சம்புமாலி - அக்கினி கேது முதலான சேனாதிபதிகளை அதஞ்செய்து இனி எவன் சண்டைக்கு வருவானென்று யோசனை செய்து இடுப்பிலிரண்டு கையையு மூன்றிக்கொண்டு இறு மாந்து கொடூர முகத்தோடு கண்களில் நெருப்புப் பொறிகள் பறக்க இருமிப் பார்த்திருக்கிறபோது அங் ஙனமொரு ரதம் வரக்கண்டு இது யாருடைய ரதம் இவனெந்த சேனாதிபதியோ வென்று நோக்கிப் பார்த் துக்கொண்டிருக்க, அந்த ரதத்தின்பேரில் வெவ்விய புரவிகள் பூட்டியிருக்க இருபுறத்திலும் இராக்ஷதாள் சூழ்ந்து நிற்க, வச்சிரத்தினற்செய்த வெள்ளைக் குடை யானது பிடிக்க, ரதகஜ மேளமடிக்க, வீரர்கள் படபட வென்று குதிக்க, குதிரைகள் தடதடவென்று நடக்க, இருபுறத்திலுஞ் சாமரை வீச, சகல ஜனங்களும் கோஷ்டமிட்டுப் பேச, இப்படி நானாவித அலங்காரத் துடன் பாணம் சொரிய மகா ஆயுதபாணியாய் வருவ தைக் கண்டு ஆஞ்சநேயர் சொல்லுகிறார்.

அடா வாடா மயிலிராவணா! உன்னுடைய இரா க்ஷதன் எங்கு ஒளித்தாலும் உன்னை விடுவேனோ! நில்லு நில்லென்று கருவிச் சொல்லிக் கொண்டு வரு கையில், மயிலிராவணன் கோபங்கொண்டு அநேக பாணங்களினால் அடிபட்டு நொந்து உடம்பாதியந்த மும் இரத்தமயமா யொழுகும்படி பாணத்தை ஆஞ்ச நேயர் மகாகோபத்துடனே கொஞ்சமாகிலுஞ் சட்டை பண்ணாமல், மனதில் யாதொன்று மெண்ணாமல் பாணத்தின்மேல் விழுந்தோடிவர, மயிலிராவணன் அநுமந்தர் வருவதைப் பார்த்து மகா தவஞ்செய்த வரப்பிரசாதமான அஸ்திரங்களை யெல்லாம் ஏககாலத் திலே பிரயோகஞ்செய்ய, அது அக்கினிச் சுவாலையா யெறிந்து கொண்டுவர, அநுமார் அக்கினியாஸ்தி ரத்தை வாலாலே சுழற்றியடிக்க, அப்போது அக்கினி யாஸ்திரம் பூமியிலேவிழுந்தெரிந்து போயிற்று. மயிலி ராவணன் அக்கினியாஸ்திரம் வியர்த்தமாய் போனது கண்டு மகா கோபத்துடனே மகா வுக்கிரயஸ்திரத்தை யெடுத்து பிரயோகம் பண்ணினான்: அவ்வஸ்திரமா

னது விடுபட்டு அநுமாரைச் சுற்றிவந்து பூமியில் விழுந்துபோக மயிலிராவணன் கண்டு சகல அஸ்திர மும் பிரயோகஞ்செய்து பலனென்ன? இனி யாதோ ரஸ்திரமு மில்லையென்று மனதில் திகிலடைந்து மகா விசாரத்துடனே யோசனைசெய்து அடா நாம் என்ன காரியஞ் செய்தோம். மாதங்கி சொன்னவார்த்தை நிலை நின்றது. அவ்வார்த்தையைக் கேளாமற்போனேமே! ஆ தெய்வமே! இனிமே லெவ்வாறு ஜெயிப்போம்! தசகண்ட ராவணனுடனே பிரதிக்கினைசெய்து உறுதி கூறி வந்தோமென்று மனச்சஞ்சலமாய்த் தனது தேரின்பேரில் வில்வளைத்து யுத்தஞ் செய்யாமலிருக்க, மயிலிராவணனைப் பார்த்து ஆஞ்சநேயர் அதிக உக் கிரத்துடனே ஆகாயத்தி லெழும்பி அவனுடைய தேரின்பேரில் குதித்துதுச்சப்படுத்துப்போது அவன் தேரைவிட்டுகீழே குதித்து அப்பால் நிற்க, ஆஞ்ச நேயரால் ரதமானது பொடிப் பொடியாய்ப் போன வுடன் மயிலிராவணன் நிற்கப் பார்த்து அநுமார் ஐந்து விரலையுமடக்கி அவனுடைய மார்பிலே குத்த மயிலிராவணன் மூர்ச்சையால் நாக்கிலும் மூக்கிலும் மிரத்தங்கக்கிக்கொண்டு அலறி பூமியில் விழுந்த வுடனே எழுந்திருந்து கோபத்துடனே தண்டாயுதத் தைச்சுற்றி ஆஞ்சநேயர் பேரிலெறிய, மூர்ச்சை யடைந்து சீக்கிரத்தில் பந்தடித்தாற்போல் பதறி கிளம்பி அட்டகாசஞ்செய்து மயிலிராவணனைப் பார் த்து, அடா நில்லு நில்லு திருடாவென்று சொல்லிக் கொண்டு தனது வாலைக் கீழேபோட்டு அவனுடைய இரண்டு காலை சுழற்றியும் இழுத்து ஆகாயமார்க்கத் திலே தூக்கி கரகரவென்று சுழற்றி பூமியிலடிக்க. மயி லிராவணன் பூமியிலறைபட்டு நூறு சுக்கலாய்த் தெறி த்து உருவு தெரியாமலடித்து பிகுத்தஞ்செய்து சந்தோ ஷத்துடனே நாம் செய்த பிரதிக்கினை முடிந்ததென்று ராமச்சந்திரமூர்த்தி யிருக்கும் ஸ்தானமாகத் திரும்பித் தோத்திரஞ்செய்ய, அப்போது மயிலிராவணன் முன் போலுருவாகி ஐந்து விரலை மூஷ்டியாகப் பிடித்து ஆஞ்சநேயர் பின்புறத்தில் வந்து அவரது முதுகி லோங்கிக் குத்தினன். அவர் திரும்பிப்பார்த்தார்; மயி

விராவணன் நிற்பதைக் கண்டு இதேது காரணம்; இவனைச் சங்காரம் பண்ணினேனே! இவனுர் மயிலிரா வணன்போல் தோன்றுகிறது. இன்னமிவனைப்போ லிரண்டுமூன்று பேருண்டோவென்று ஐயுற்றுயோசனை செய்துக்கொண் டிருக்கும்போது; அவனட்டகாசம் பண்ணி அருகில் நின்றுக்கொண்டு அநுமாரைப் பார்த்து! அடா வானரம் என்று சொல்லி நிற்கிறவனை ஆஞ்சநேயர் சற்றுகிலும் திரும்பிப்பாராமல் ஐந்துவிரலால் முஷ்டிக் குத்தாக்குத்தி அதஞ்செய்ய மறுபடியும் எழுந்திருந்து யுத்தஞ்செய்து பின்னும் மயிலிராவணனைச் சாகவடித்து அஷ்டதிக்கிலும் மார்க்கண்டங்களை சக்கை சக்கையாய்ப் பேர்த்தெரிய அக் கண்டங்கள் முன்னூறு யோசனைக்கப்பால் போய்விழுந்தன.

அப்போது ஆஞ்சநேயர் மயிலிராவணனைக் கொன்றுவிட்டோமென்று சந்தோஷத்துடனே இராம மூர்த்தியை நினைத்து தோத்திரஞ் செய்யும்போது மயிலிராவணன் முன்னூறு யோசனைக் கப்பால் விழுந்து கிடந்த மார்க்கண்டங்களெல்லா மொன்ருகச் சேர்ந்து முன்போலுருவாக, அடா அநுமந்தா! நீ சண்டைக்கு வருவாயென்று கேட்க. அநுமார் மயிலிராவணனைப் பார்த்து இதென்ன ஆச்சரியம்! இறந்து போனவன் அடிக்கடி பிழைத்து வருகிருன். இவ்வதிசயம் நானெங்குங் கண்டதில்லை. இதென்ன ஆச்சரியமென்று யோசனைசெய்து பலபலவிதமாய் இதென்னகாரணமோ அல்லது தவமோ! அல்லது வல்லமையோ! அந்தப் பாதகனுன விபீஷணன் மயிலிராவணனுடைய வல்லமை இப்படிப்பட்டதென்று சொல்லாமற்போனுனே! இனிமேலிவனை எப்படி கொல்லுகிறது, இவன் இவ்வண்ணமாய் செத்துசெத்துப் பிறப்பானுகில் நானெப்படி ஜெயிப்பேன்; என் பிரதிக்கினை எப்படி முடியும்? நீலமேகனுக்கென்னுல் பட்டங்கட்ட முடியுமோ? ஆ ஆ தெய்வமே! இப்படி வல்லமையான மயிலிராவணனுடைய மாய்கைக்கு நான் பாத்திரனல்ல; ஓ இராம லக்ஷமணுளே! உங்கள் காரியார்த்தமாய் வந்த யெனக்கு அந்த அபஜெயம் வரலாமோ? தேவர்களே நீங்களா

வது இங்ஙனம் வந்து இவனது வரம் இப்படிப்பட்டதென்று எனக்குச் சொல்லலாகாதா என்ன செய்வேனென்று விசாரப்பட்டுக் கொண்டு மனதிடப்படுத்தி இனிமேல் நடக்கும் மர்மம் யார் சொல்லப்போகிறார்கள். நீலமேகன் தூரதண்டிகை இவர்களிடத்திற்குப் போய் இம் மர்மந் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மனதிலுத்தேசித்து மயிலிராவணனைப் பார்த்து அதிக கோபத்துடனே தன்வாலை கீழேவிட்டு அவனுடைய கால் முதல் கழுத்து வரையில் பிரி சுற்றினாற்போலச் சுற்றி யிழுத்து ஆகாயத்தில் கரகரவென்று பம்பரம் போலச் சுழற்றி மிசையாய் எறிந்துவிட்டு அங்கிருந்தபடியே நீலமேகன் தூரதண்டிகை இவர்களருகிற் போகவேண்டுமென்று மகா சந்தோஷத்துட னிருந்தார் அங்ஙனம் அப்படியிருக்க தூரதண்டி நீலமேகனைப் பார்த்துச் சொல்லுகிறாள் ?

அடா வாடா குமாரகா சண்டாள மயிலிராவணனுடனே ஆஞ்சநேயர் யுத்தம் செய்து எப்படி பேர்த்தெறிந்தாலும் மறுபடியும் ஒன்றோடொன்று உருப்படுத்திக்கொண்டு மறுபடியுஞ் சண்டைபண்ண வருவானே? அவனைக் கொல்லும்விதம் ஆஞ்சநேயருக்குத் தெரியாது. நீ இங்கேயிரு; நானவரைக் கண்டு மயிலிராவணனைக்கொல்லுகிறதற்குத் தந்திரஞ்சொல்லி வருகிறேனென்று நீலமேகனை அவ்விடம் விட்டுப் பிரயாணமாய் வந்து பார்க்க, அப்போது மயிலிராவணனும் அநுமாரும் ஒரு வீட்டிலிருந்து சண்டை பண்ணுகிறதைக் கண்டு ஆஞ்சநேயரிடத்தில் போய் யாதொரு சங்கதியுஞ் சொல்லமுடியாமல் பயந்து அந்த வீட்டிலே நின்று கொண்டிருந்தார்.

அப்போது ஆஞ்சநேயர் தூரதண்டிகையைப் பார்த்துச் சந்தோஷமடைந்து அவளருகிற் சென்று என்ன சங்கதியென்று வினவ, தூரதண்டி சைகையாய் ஆஞ்சநேயரைப் பார்த்து, சுவாமி அநுமாரே உட்காருமையாவென்று சொல்லி நாங்கள் ஒளித்திருந்த விடத்திலே நீலமேகனை விட்டுப்போட்டு உமதண்டைக்கு வரவேண்டுமென்று வந்தேனென்றுசொல்ல, அப்

போது ஆஞ்சநேயர் தூரதண்டிகையைப் பார்த்து வாரும் பெண்ணே! தூரதண்டி என்னசொல்லுகிருய்? அந்த மயிலிராவணனுடனே பலபல யுத்தம்பண்ணி சித்திரவதை பண்ணிஞலும் மறுபடியு மெழுந்து சண்டைக்கு வருகிருன். இவ்வண்ணம் செத்துப் பிழைப்பது இவ்வுலகிலுண்டோ? இதென்ன ஆச்சரியம்? அவனுடைய விருத்தாந்த மென்ன? ஆண்மைதானென்ன? நீயாகிலு மறிவாயா? அறிந்தாயாஞல் தெரிந்தவரையிற் சொல்லென்று கேட்க, தூரதண்டி ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிருள்: வாரும் வானர சிரோன்மணியே நான் தெரிந்தவரையிற் சொல்லுகிறேன் கேளும்: முற்காலத்தில் நானுமென் கணவனுஞ் சுகமாக வாழ்ந்திருக்குங்காலத்தில் ஒரு காரியார்த்தமாய் என் வீட்டில் விருந்துண்ணவந்தான். அவனுக்கும் சகல பிராணிகளுக்கும் சட்சுவையோடு அன்னம் பாலிக்கச் சகலரும் போஜனஞ் செய்து கை கால் சுத்திபண்ணி தாம்பூலந் தரித்துககொண்டு சந்தோஷமாயிருக்குங் காலத்தில் மயிலிராவணனைவன் தனதுயிர் நிறுத்திருக்கப்பட்ட ஸ்தானத்தைக் கபடில்லாமற் சொன்ஞன்.

அந்தவிவரத்தை யாதென்று கேட்பீராஞல் யான் சொல்லுகிறேன் கேளும்; மயிலிராவணஞே வென்ருல் யநேக தவங்கள் செய்து சகல வரங்களும் பெற்றதுமன்றி, மறுபடியும் பிரமாவை யநேககாலந் தவசு பண்ணிஞன்; அந்தத்தவமானது சத்தியலோகத்தைத் தணலாய் எரிக்க, அப்போது பிரமா சரஸ்வதி சமேதராய் மயிலிராவணன் அருகில் வந்து தவசை நிறுத்தி உனக்கு வேண்டும் வரத்தைக் கேளென்ன, மயிலிராவணன் பிரமாவைப்பார்த்துச் சொல்லுகிருன்: வாரும் பிரமாவே! நீ வரங்கொடுப்பது மெய்யாஞல் சொல்லுகிறேன் கேளும்; நீர் எனக்கு சகல அஸ்திரங்களும் கொடுத்திருக்கின்றீர். இனி எனக்கு யாதொன்றும் தேவையில்லை. நீர் கொடுத்த அஸ்திரத்திஞலே யான் யுத்தஞ்செய்து ஜெயத்தை யடைவேன். அந்த அஸ்திரம் வியர்த்தமாஞல் வெட்டிப் பிளந்தாலும் என்னுயிர்

என்னைவிட்டு நீங்காமலும் வெட்டுப்பட்டு, துணுக்கை துணுக்கையானாலும் மறுபடியும் ஒன்றோடொன்று சரீரத்தைச் சேர்த்துயிராக்கவேண்டும். எப்போதுஞ் சண்டைக்கிளையாமல் வெற்றி வரவேண்டும்; அவ்வண்ணம் வரங்கொடுத்தால் மகா உத்தமம்; அப்படி கொடுப்பீரானால் உம்முடைய கீர்த்தியானது உலகெங்கும் பிரகாசிக்குமென்று பிரதிபாலித்துச்சொல்ல, பிரமாவானவர் பார்த்துசொல்லுகிறார்; பிள்ளாய் இலங்கை மன்னவா! நீர் கலங்காது சொன்னாய்; இவ்வார்த்தை கேட்டால் உயிர் போய்விட்டால் பஞ்சபிராணனும் போய்விடுமே; மறுபடியு மெவ்வாறுன் பிராணன்வரும், பஞ்சபிராணனிருந்தாலல்லவோ ஜீவன் வருமென, அப்போது மயிலிராவணன் சொல்லுகிறான்: வாரும் வரங்கொடுக்கும் பிரமாவே! பஞ்சபூதமிருந்தாலொழிய ஜீவன் வராதென்றீர்; யான் சொல்லுகிறேன் கேளும்; என்னுடைய பஞ்சபூதமு மைந்துவண்டாயுருவுகொண்டு என் பாதாள விலங்கையிலே மூவாயிரம் யோசனைக்கப்பால் விந்தியாசல பர்வதமொன்றிருக்கிறது. அப்பர்வதத்தில் ஐந்து குகை யிருக்கின்றது. அந்த ஐந்து குகையிலும் என்னுடைய பஞ்சபூதங்கள் ஐந்து வண்டாய் உருவுக்கொண் டிருக்கவேண்டும். இவ்வண்ணமாய் வரங்கொடுத்தால் உலகமெல்லாம் அதம் பண்ணுவான். யாவரையுந் தன் மனதிலே பாததூளி யென்றெண்ணுவானென்று மனதி லுத்தேசித்து மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாரும் பிள்ளாய் மயிலிராவணா! உன்னிஷ்டப்படி வரங்கொடுத்தேன்; யாராகிலு முன்னோடெதிர்த்து யுத்தஞ்செய்து உன்னை மிதித்துக்கொண்டு அந்த விந்தியாசல பர்வதத்திலிருக்கிற வண்டையும் நசுக்கிப் பொசிக்கிக் கொன்றுவிட்டால் அப்போது உன்ஜீவன் போய்விடுமென்று கூற, மயிலிராவணன் பிரமாவைப் பார்த்துச் சொல்லுகிறான்: வாரும் பிரமசிருஷ்டியே! அவ்வண்ணமெடுத்து மிதித்துக் கொண்டு அந்த விந்தியாசல பர்வதத்திலிருக்கிற வண்டுகளைந்தையுங் கொன்றால் அப்போதென் ஜீவன்போகும்; அதிலொரு

வண்டு தப்பிப்போனால் சாகத்தக்கதில்லையென்று வரங்கொடுமென்று சொல்ல, பிரமாவானவர் அவன் கோரிக்கைவாறே வரங்கொடுத்து சத்தியலோகத்துக்குப் போனாரென்று என்னுடனு மென்கணவனாகிய காலதத்தனிடத்தும் சந்தோஷத்துடனே சொல்லியிருந்தான். ஆகையால், ஆஞ்சநேயரே! அவனுக்கித்தனை கெர்வமும் ஆங்காரங்களு முண்டாயின. அவனுடைய விருத்தாந்தம் இப்படிப்பட்டது. அவனை எவ்விதமாகிலும் சங்காரம் பண்ணும் பிள்ளாயென்று சொல்ல, ஆஞ்சநேயர் ஆ! ஆ! இவ்வளவு தந்திரமிருக்குதாவென்று மனதில் ஆலோசனை செய்துக்கொண்டு உடனே அதிவேகமாய் அவ்விடத்திலிருந்து ரணக்களம் வந்து குதித்தார். அப்போது மயிலிராவணன் ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா வானரா! நீ எங்கே போனாய்? நானுன்னை விடுவேனோ? எமபுரத்துக் கனுப்புவேன் நீ கெட்டியாய் நம்பு. இதுபரியந்தம் எங்கேயொளித்திருந்தாய்? என்னுயிரைப் போக்க உன்னாலாகுமோ? இதோ பார். நானொரு மாய்கை பண்ணுகிறேன்; உன் கண்ணுக்குப் புலப்படாம லிருக்கிறேன்; என்னுடைய மாய்கையைப் பாரும், வல்லவனென்று மனதில் சந்தேகந் தீரும் என்று ஆண்மை கூறி அக்கணமே கண்கட்டு மந்திரஞ்செய்து ஆஞ்சநேயர் கண்ணைக்கட்டி அவரது கண்ணுக்குத் தெரியாமல் நின்று அநேக விசேஷங்களைச் சொல்ல, ஆஞ்சநேயர் மயிலிராவணனைப் பார்த்து அடா திருடா! வாடா இராக்ஷதப் பதரே! நீ இப்படிப்பட்ட மாய்கை அடைந்திருக்கிறாய்? இந்திரஜித்தனென்பவன் எவ்வாறு போனான்; அவ்வாறு நான் உன்னை யதம்பண்ணுகிறேன் உன் மாய்கைவிட்டென்முன்னே நில்லடா! என் கேள்விக்கு உத்தரவு சொல்லடாவென்று ஆஞ்சநேயர் மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிறார்:

வாடா இராக்ஷத அதமா! இவ்வுலகுச் சதமா! உன் விருத்தாந்தம் யாவுமறிந்தேன். உன் மாய்கையுந் தெரிந்தேன், உன்னையும் என்வாளுக்கு பலி கொடுக்கி

றேன் மாய்கை செய்தாயே? என்னை நீ வைதாயே? என்முன் நில்லடா என்னைச் சண்டையில் வெல்லடா ஏன் கெட்டுப்போகிருய்? அந்தப் பாவியான தசகண்ட ராவணன் சீதாதேவியைத் திருடிக்கொண்டு வந்தான். யந்தத் திருடனை ராமமூர்த்தி கோதண்டத்தினாலே யதம்பண்ணி போடுகிருர். நாளையதினம் சூரிய உதயத் திற்கு நீயும் திருடனோடு திருடனாய் கட்டுண்டு ராம லக்ஷ்மணனைக்கொண்டுவந்து திருட்டுத்தனமாய்வைத்த உன்னை லேசாக விடுகிறதில்லை; நீ என்ன செய்வாய்; அஷ்டமத்துச் சனியன் புட்டத்துத் துணியை யுரியு மென்பது போலாயின.

அதற்காக என் செய்வார்கள்; ஆகாயவாணி வாக் குத் தப்புமோ; உன் செய்கை யாவருக்கு மொப்புமோ; சூரிய உதயத்துக்குள் உன் பாதாள விலங்கையை நீல மேகனுக்குப் பட்டங் கட்டுகிறேன்; உன் ஜீவனை இக்ஷணமே எமபுரத்துக் கனுப்புகிறேன் என்றுபிரதிக் கினைக்கூறி, மயிலிராவணனைப் பிடிக்க பிரதட்சணமாய் சுற்றிச் சுற்றி லகு பார்த்திருக்கிறபோது மயிலிராவ ணன் திடுக்கிட்டு இதேது ஆச்சரியம் உன் விர்த்தாந் தம் உன் மாய்கை இவற்றை யானறிவே னென்றனே! இவ்வண்ண மிவனறிந்து சொன்னது தூரதண்டி கையா லறிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ னறியத் திராணியுள்ளவனோவென்று யோசனைசெய்து மயிலிராவணன் பயந்து இனிமேல் நாம் இவன்கையில் அகப்படப்போகாது. அகப்பட்டால் இவன்நம்முயிரை மடித்திடுவானென்று எவ்விதத்தினாலுந் தப்பித்துக் கொண்டே யிருந்தான். அச்சமயத்தில் ஆஞ்சநேயர் மயிலிராவணனைக் கட்டிப்பிடித்து பூமியில் அறைந்து கொல்லுவோமென்று யோசனைபண்ணி ஸ்ரீராமமூர்த் தியை நினைத்து அதிக கோபத்துடனே இனிமேல் தாமதம் செய்யக்கூடாது; தாமதஞ் செய்தா லிப்பாத கன் ஓடிப்போவானே இப்போது இருபத்துநான்கு நாழிகை யாச்சுதென் றறிந்து, உடனே அங்கிருந்த படியே ஆகாயத்தின்மே லெழும்பி மயிலிராவண னுடைய தேரின்மீது குதித்தார், அவன் திடுக்கிட்டு

பயந்து நடுநடுங்கி இனிமேல் இங்கே நிற்கக்கூடா தென்று அந்தரத்தியானமாய் ஒருவர் கண்ணுக்குந் தெரியாமல் மாய்கையால் மறைந்தோடிப் போனான். அப்போது அநுமார் தேரிலிருந்து கீழே குதித்துப் பார்த்து மயிலிராவணனைக்காணமல் அவனெங்குஓடிப் போனானோ? என்ன மாய்கைசெய்தானோ தெரியவில்லை யென்று நான்கு மூலையுஞ் சுற்றிப்பார்த்து எங்குங்காணா மல் விசாரப்பட்டுக்கொண் டிருக்கும்போது மயிலிராவ ணன் அதிசீக்கிரமாய் அநுமார் வந்து விடுவாரோ? வந்தால் பிடித்துக் கொள்வாரோவென்று மனதில் திகிலடைந்து திரும்பிப் பார்த்துக்கொண்டு ஓடிப் போய் தங்கக் கோட்டைக்கும் மூத்துக் கோட்டைக்கும் நடுவில் ஒருஉத்தியான வனத் தோப்பில் ஆலவிருக்ஷம் பிரம்மாண்டமாய் வளர்ந்து கப்புங்கிளையுமாகத் தழைத் திருக்கின்றது. அந்த மரத்தின்கீழ் ஒரு வழி போகி றது: அந்தப் பாதாளத்தில் ஒரு வெளியிருக்கின்றது. அந்த வெளியே போய் பதுங்கி யிருந்தான்.

அப்போது இராக்ஷதப் பிராமணாள் யாவரும் மயி லிராவண னோடிப்போவதைப் பார்த்து, ஆலமரத்தின் கீழே வீரணயாகம் பண்ணப்போனவன்போல் காண்கி றது. ஆகையால், நாமும் போகவேணுமென்று அதி சீக்கிரமாய் சுரூபமெடுத்து ஒருவர் கண்ணுக்குப் புலப் படாமல் யாகததுக்கு வேண்டுவனகொண்டு யாக சாலையை முஸ்தீபு செய்து ஒன்பதுகோணமாய் ஓம குண்டம் வெட்டி மயிலிராவணன் உட்கார்ந்திருந்து ஆர்த்தி பண்ணுகிறதற்கு மூக்கோணமாய் மேடை போட்டு சுடலைக்குப் போய் நெருப்பெடுத்து வந்து தலைமண்டை யோட்டில் எருமைக்காலில் இரத்தஞ் சொரிந்து ஓமகுண்டத்தைச் சுற்றிலும் அந்தத் தலை யோட்டையிட்டு எருமைக்கிடாவி னெலும்புகளினாலே ஓமகுண்டத்துக்கு நான்கு பக்கத்திலும் தர்ப்பாசனம் போட்டாற்போல் அஸ்திகளைப் பரப்பி பனைமரங் கொண்டுவந்து துஜஸ்தம்பமாக நாட்டி அந்த துஜஸ் தம்பத்தில் ஒரு சர்ப்பத்தைக் கட்டினார்கள். பின்னும் ஓமகுண்டத்தி னடுவில் உயர்வாய் தலைகீழாகக் கட்டி

அக்கினிச் சுவாலையாக வெழும்ப அத் திரிகோண மேடையில் தலைமண்டையோடு கவிழ்த்து அவ்வோட்டின்பேரில் தனது வலது காலையூன்றி இடது காலை கழுத்தில்மாட்டி அர்த்த சந்தன மணிந்து கொண்டு உதிர நிறமான புட்பமாலைகள் கழுத்திலும் சிரசிலும் தரித்துக்கொண்டு ஈரவஸ்திர முடுத்திக் கொண்டு இடக்கரத்தில் ஜபமாலையேந்தி வலக்கரத்தினால் எக்கியாதி முதலான நவதானிய சமித்துகளை ஆவாகனம் பண்ணி அந்த துஜஸ்தம்பத்திலே கட்டி யிருக்கப்பட்ட சர்ப்பத்தை யறுத்து நெய்யிற்றோய்த்து பூரணாகுதி கொடுத்தான். கொடுத்தவுடனே அந்த அக்கினி குண்டத்திலிருந்து பிரம்மாண்டமாய் ஒரு பூதம் புறப்பட்டு மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகின்றது.

வாருமையா பாதாளவிலங்கைக் கரசனாகிய மயிலிராவணா! என்னை யாது காரியமாய் இந்த யாகஞ்செய்து அழைப்பித்தீர்; அந்தக் காரியத்தைச் சொல்லும்? நான் ஜெயித்து வருகிறேனென்றுகூற, அப்பூதத்தைப் பார்த்து ஓ பூதமே என் சத்துருவாகிய ஆஞ்சநேயரைச் சம்மாரஞ்செய்து வருவாயென, அப்பூதம் பிரளய கால ருத்திரனைப்போல் கர்ச்சித்து மயிலிராவணனைப் பார்த்து, ஓ மகா வல்லமையுள்ள பாதாளவிலங்கைக்கரசனே! நீ கூறியவாறே ஆஞ்சநேயரை யதம்பண்ணி வருகிறேன்; அவனெப்படிப்பட்டவனோ யடங்கா மன்னனோ யாரோ தெரியாது சகலத்திற்கும் நீரே துணை. இந்த வேள்வியை விடாமல் செய்துகொண்டு வாரும். நான் சீக்கிரமாகப்போய் ஜெயித்து வருகிறேன்; நீர் யாதொன்றுக்கும் அஞ்ச வேண்டாமென்று கூறி, பின்பு அந்த யாகசாலையைவிட்டு இரண பூமியில் ஆஞ்சநேயரிருக்கும் சமீபத்தில் வருவதை அநுமார் பார்த்து பிரமித்து; இதென்னடா வென்று அதிக கோபத்துடனே எழுந்திருந்து அந்தப் பிரளயகால பூதத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்.

வாடா ராக்ஷதமாயா! நீ என்ன மாய்கையாய் வந்தாலும் நான் பயப்படுவேனோ வென்று அதிக

கோபத்துடன் ஐந்துவிரலேயும் முஷ்டியாகப் பிடித்து பூதத்தைக் குத்த வரும்போது அந்தப் பிரளய காலாக்கினி பூதமானது ஆவென்று வாயைத்திறந்து கோவென்று அட்டகாசஞ்செய்து வாயிலிருந்து அக்கினிச்சுவாலேயானது குபீல்குபீலென்று புறப்பட நடந்து ஆஞ்சநேயனென்பவர் நீர்தானு உன்னே இப்போது பஸ்மீகரமாக எரித்துப் போடுகிறேனென்று ஆஞ்சநேயருக்கெதிரில் நின்று ஆவென்று வாயைத் திறந்தது. உடனே அவர்பேரில் அக்கினிச்சுவாலே சூழ்ந்து பற்றிக்கொண்டெறிய அவர் அக்கினிக்குப் பயந்து நடுங்கி ஒடுங்கி மூர்ச்சையடைந்து கோபந்தெளிந்து, ஆ இதென்ன காரணமென்று ஆச்சரியப்பட்டு கோபத்துடனே அப்பூதத்தின் மார்பில் ஒரு குத்து விட்டார். அக்குத்தினுல் பிரளயகால பூதமானது மார்பு பிளந்து மூர்ச்சையாய் பூமியில் விழுந்தெழுந்து கோபமீறி ஆஞ்சநேயரைப் பார்த்து சமீபத்தில் வந்து நாலுவிசை மூன்றுவிசை விடாமல் அக்கினிச் சுவாலே ஜொலிக்கும்படியூத, அப்போது அவருக்கு திரேகமெல்லாம் அனலாயெரிக்க, எரிந்தவிடமெல்லாம் தொடைக்க, எரிச்சல் மாருமல் வேதனேயாக விழுந்தது, அப்போது அநுமார் வருத்தமடைந்து சீதாதேவியையும் ராமலக்ஷமணுளேயும் நினேத்து பலவாருகத் தொழுது கண்ணீர்விட் டழுததுமன்றி அக்கினி பகவானே நினேத்து உன் நிமித்தியமல்லவா இராவண சம்மாரம் பண்ணுகிறேன், சகல தேவதைகளுக்கும் நிருபகாராரூர்த்தமாய் வந்தவரல்லவா? அப்படியிருக்க, நீரென்னேத் தகிக்கலாமா? நீ இப்படிச் செய்வதுனக்குத் தருமமாவென்று தோத்திரஞ் செய்தார். அப்போ தக்கினி பகவான் சில்லென்று தணித்திருந்தார்: அப்போது ஆஞ்சநேயர் நேரில் வந்து உட்கார்ந்திருக்க, அவர் ஸ்தூல சரீரத்துடனே அவ்விடம் விட்டு அப்பாலே நீங்கிப் போய் அடங்கி கிளம்பி தூரதண்டிகையருகில் வந்து குதித்து அவளேப் பார்த்து, ஆஞ்சநேயர் சொல்லுகிருர்: வாரும்,பெண்ணே தூரதண்டிகையே! நானுன்னேடு பேசிக்கொண்டிருந்து இவ்விடம் விட்டு போனேனே அத்தருணத்தில் மயிலிராவண னெங்கே

யோ மாய்கையாய்ப் போய்விட்டான். அதன்பின் எங்கிருந்து வந்ததோ இப்பிரளயகால பூதமானது அனலாய் எரிக்கின்றதே என்றுற் கூடுமானவரையில் யுத்தம் செய்தேன் யாதொரு காரியமு முடியவில்லையே! இப்பூதமெக்காரணத்தால் வந்ததோ அல்லது இராவணனுடைய மாய்கையால் வந்ததோ யாதுந் தெரியேனென்று தூரதண்டிகையைக் கேட்க, அப்பெண்ணானவள் யாரென்று மறியேனென்று சொல்ல, ஆஞ்சநேயர் சொல்லுகிறுர்: ஸ்ரீ தர்மதேவதைகளே! யான் சொல்லுகிறதைக் கேளுங்கள்; வைகுந்தவாசகராகிய மகாவிஷ்ணு ஸ்ரீராமமூர்த்தி யவதாரஞ்செய்து சத்தியத் தவறுதிருக்கிறதும், சீதாபிராட்டியும் மகா பதிவிரதையாயும், நான் அந்த ஸ்ரீ ராமலக்ஷ்மணனுடைய பாதாரவிந்தங்களை சேவித்துக்கொண் டிருப்பது மெய்யானல் இப்போ தணலாயெரிக்கிற பூதமின்னதென்றெனக்குச் சொல்லவேண்டுமென்று சொன்னுர். அப்போது தர்மதேவதைகள் நடுநடுங்கி ஆகாயத்திலிருந்து ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிறுர்கள். வாரும் அநுமந்த சிகாமணியே! இப்போதிந்தப் பூதம் மயிலிராவணனனுப்பிய பூதம் ஆனபடியால், இப்பூதத்தை ஜெயிக்க முடியாது. உனக்கேற்ற மர்மம் சொல்லுகிறேன் கேள்! அதோ தங்கக் கோட்டைக்கும் வெள்ளிக் கோட்டைக்கும் நடுவில் தோப்பிருக்கின்றது. அத்தோப்பில் ஒரு வழி போகின்றது. அதிலேந்து குகைகளிருக்கின்றது. அவ்விடத்திற்கு போனல் ஒரு யாகசாலை யிருக்கின்றது. அந்த யாக சாலையி லிந்த மயிலராவணனனவன் வீரண யாகமென்ற ஒரு யாகத்தை அதர்வண வேத தோத்திரஞ் செய்கிறுன். அந்த யாகம் பண்ணச்சே ஓமகுண்டத்திலிருந்து இந்த பூதம் புறப்பட்டு வந்தது. அவனின்னமும் யாகஞ்செய்துகொண்டே யிருக்கிறுன். அவன் யாகத்தை முடிக்குமுன் நீ அதிசீக்கிரத்தில்போய் விக்கினஞ் செய்தால் இப் பூதத்துக்குப் பலன் ஒடுங்கிப் போகும். அப்பால் பூதம் சொல்லாமலோடி யமபுரத்தைநாடும், அவ்விடத்தில்தானே சங்காரம் பண்ணலாமென்று தருமதேவதைகள் கூறினுர்கள். அதைக்

கேட்டவுடன் ஆஞ்சநேயர் ஆகாயத்தி லெழும்பி அந்த இடத்தைத் தேடிப் போகும்போது அப் பூதமானது மகா கோபத்துடனே ஆஞ்சநேயரைப் பார்த்து, அடா குரங்கே! நீ எங்கே போகிருய்; நில்லு நில்லென்று சொல்லிப்பின் தொடர்ந்து துரத்திக்கொண்டு போக ஆஞ்சநேயர் பூதத்தைப் பார்த்து நீ கெட்டாய் கெட்டாயென்று அதிவேகமாய் ஆலமரத்தடியில் வந்திறங்கிஞர். அவ் விருக்ஷத்தின்கீழ் மயிலிராவணன் மனிதரூபமாகவும் ராக்ஷத பிராமணுள் காவலாகவும் நான்கு மூலேயும் பார்த்துக்கொண்டு யாகஞ்செய்திருந்தவர்கள் ஆஞ்சநேயரைக் கண்டவுடனே எட்டிப் புகுந்து திட்டி வாசற் கதவைத் தாட்கொண்டு பூட்டிக் கொண்டார்கள். மாய்கையால் ஆலமரத்தின் பட்டையானது கீழே விழுந்து வழி தெரியமாட்டாமல் மூடிக்கொண்டது. ஆஞ்சநேயர் அம்மரத்தின் சத்தத்தைக் கேட்டு சீக்கிரத்தில் ஒருவன் இவ்வழியை மூடிக் கொண்டு உள்ளே ஒளித்துக் கொண்டான். இது தர்மதேவதைகள் கூறிய ஆலமரமாகையால் இம் மரத்தை அடியோடே பிடுங்கிப் போடுவோமென்று இரண்டுகையினுலும் அம்மரத்தைப்பிடித்துஅசைத்து பிடுங்க அப்போதந்த மகா பிரளயகால பூதமானது மரத்தைப் பிடுங்கிக்கொண்டிருக்கிற ஆஞ்சநேயருடைய முதுகிலே குத்த அவர் திரும்பிப் பார்த்து அப் பிரளயகாலபூதத்தை வாலினுலே சுற்றி யிழுத்துக் கட்டிக்கொண்டு மரத்தை வேரோடே பிடுங்கி அப்பாலெறிய, அங்ஙனம் குகை தோன்றிப் பாதாளம் போக, அந்தப் பாதாள வழியாக ஆஞ்சநேயர் பூதத்தை வாலிற்கட்டினபடி கீழேயிறங்கி யாகசாலேயைப் பார்த்து அவ்விடத்தில் மயிலிராவணன் ஓமம் பண்ணிக்கொண்டிருக்கிறதைக் கண்டு ஐந்து விரலேயு மடக்கிக் குத்திஞர். அதனுல் மயிலிராவணன் மூர்ச்சையாய்க் கீழே விழுந்தான். அதன்பின்பு ஆஞ்சநேயர் அங்கிருந்த ஓம பாத்திரங்களேயெல்லாம் உடைத்து, யாககுண்டத்தையிடித்து விக்கினஞ்செய்ய மயிலிராவணன் மூர்ச்சை தெளிந்தெழுந்து அநுமானிடத்து கிடுகிடுவென்று நடுங்கி, நாம்தப்பித்துப்போகவேண்டுமென்று மாய்கை

யாய் ஓடிப்போனு னப்போது ஆஞ்சநேயர் யாகசாலை யாவையும் அதஞ்செய்து தன் வாலில் கட்டுண்ட பூதத்தை கரகரவென்று சுழற்றி பூமியிலடித்தார். அப்போது அந்தப் பூதமானது அந்தாத்தியானமாய்க் குதித்து ஆகாயத்திலே போய் அநுமாரைப் பார்த்துச் சொல்லுகிறது: வாருமையா அநுமந்தரே! ஸ்ரீராம காரிய துரந்தரா கேளும்: அந்த மகாபாவியான மயிலி ராவணனுலே உம்மிடத்தில் சண்டை தொடுத்தேன் போய்வருவேன் சுவாமி அதோ மயிலிராவணன் மாய்கையாய் ஓடிப்போய்விட்டான். அவனைத் தேடிப் பிடித்து சம்மாரஞ் செய்யும். அந்த யாகத்தை விக்கினஞ் செய்தீரே உம்மைப்போல வல்லமையுள்ளவன் இவ்வுலகத்திலுண்டோ? சுவாமி! ராமமூர்த்தி தூதா! நீ இந்த மயிலிராவணனைச் செயித்து கீர்த்தி அடையக் கடவாயென்று வரங்கொடுத்துப் போய்விட்டது. அப்போது ஆஞ்சநேயர் அந்த விஷயத்தைக்கேட்டு மயிலிராவணன் எங்கு போனுனோவென்று பராக்கிரமங்கூறி ஆகாயவாணி பூமிதேவி இவ்விருவர் சாட்சியாகத் திரும்பிப்பார்த்தான். மயிலிராவணன் காணுமலிருக்க அதிக கோபங்கொண்டு, அடா திருடா! நீ எங்கே போனுய்? நான் உன்னை விடுவேனோவென்று அருணோதயத்துக்கு முன்னே அரக்கனுகிய மயிலிராவணனைக் கொல்லாமற்போனுல் இப்பாதாள லங்கையிலே நான் அக்கினிப் பிரவேசமாகக் கடவேனென்று சபதங் கூறி, அங்கிருந்தபடி ஆஞ்சநேயர் வெளியே புறப்பட்டு பாதாள லங்கைபட்டணம் நானூறு தெருவாச்சுதே; எந்த மூலையி லொளித்திருக்கிருனோவென்று எங்குந் தேடிக்கொண்டிருக்க; அத்தருணத்தில் மயிலிராவணன் ஆஞ்சநேயர் கண்ணுக்குப் புலப்படாமல் அவர் சொன்ன விசேஷங்களையெல்லாங் கேட்டு பயப்பட்டு நடுநடுங்கி நாமெங்கே போய் பிழைப்போம். அவன் நம்மை விடுகிறதாகத் தோன்றவில்லை என்று யோசனை செய்து முத்துக்கோட்டைக்கு வடபுறத்தில் ஒரு வெளியான விடத்தைப் பார்த்து அவ்விடத்திலே போய் தன்னுடைய மாய்கையினுலே தனது சரீரத்தை வெள்ளி மலையாக்கி அந்த வெள்ளிமலையிலே சிவ

விருட்ச சாதிகளும், மண்டபங்களும், மாடமாளிகை கூடகோபுரங்களுமாகக் கொடிமுடியோடே வெள்ளி யங்கிரிக்குச் சமானமாய் விழுந்து கிடந்தான்.

அப்போது அநுமாரானவர் மயங்கித் தியங்கி இலங்கைப் பட்டணத்து நானூறு தெருவிலுந் தேடி மயிலிராவணனைக்காணமல் தூரதண்டி அருகில் வந்து வாராய் பெண்ணே தூரதண்டி! அப் பூதத்தையும் மயிலிராவணனுடைய எக்கியத்தையும் விக்கினஞ் செய்து அவனைத் தேடிப் பார்க்கையில் எங்கேயோ மறைந்து போய்விட்டான். அவன் எங்குற்றானோ? அவன் இருக்குமிடம் உனக்குத் தெரிந்திருக்குமா வென்று தூரதண்டியைக் கேட்க, அவ்வநுமாரைப் பார்த்துச் சொல்லுகிறாள்: வாரும் சுவாமி ஆஞ்சநேய சிகாமணியே! அந்த மயிலிராவணனுடைய மாய்கை யை எம்மால் அறியக்கூடுமோ? யாராலு மறியக்கூடா தே. அப்படியிருக்க, அவன் மாய்கையை என்னா லறிய வல்லமையுண்டோ? அவன் எவ்வாறாயினானோ; என்ன ரூப மெடுத்திருக்கிறானோ; ஆனால் சொல்லு கிறேன் கேளும்: ஐயாவே! அவனெங்கேயாகிலும் மாயசொரூபமானது பிரமிக்கும்படியாய் உற்பத்தியாகி புதிதாய் தோன்றச் செய்வான். அதைப் பார்த்த வுடன் அனந்த ரூபமாகி யிருப்பானென்று சொல்ல, அநுமார் கேட்டு தூரதண்டியைப் பார்த்துச் சொல்லு கிறார்: கேளும் தூரதண்டி! புதியதும் பழையதும் உனக்குத் தெரியுமல்லவா? நான் முன்னே போகி றேன், நீ என் பின்னால் வா; எனக்குத் தெரியும் தெரி யாமைக்கு நீ தூண்டுகோலாக யிருமென்று ஆக்யா பிக்க, தூரதண்டி நல்லதென்று சம்மதித்து அவ ருடன் புறப்பட்டு இலங்கைப் பட்டணம் நானூறு தெரு வீதியுந்தேடி, கோட்டைகள் சுற்றும் ஓடி ஓரிடத்திலுங் காணமல் மனது நாடி, முத்துக்கோட் டை சமீபமாக ஓடிவரச்சே அங்ஙனம் வெள்ளியங்கிரி யைக் கண்டு ஆஞ்சநேயர் இது முன்னிருந்ததோ இல்லையோவென்று சந்தேகப்பட்டு அப்பால் நடக்கிற போது தூரதண்டியானவள் வெள்ளியங்கிரியைப்பார்

த்து இதேதோ புதிதாயிருக்கின்றது, மயிலிராவண னுடைய மாய்கையோவென்றையுற்று ஆஞ்சநேயராண் டையில் ஓடி அவருக்கு சூட்சமாய் வெள்ளிமலையைக் காட்டி இது புதிதா யிருக்கிறதென்று சொல்லவே, அவள் வாக்கைக்கொண்டு ஆஞ்சநேயர் ஐந்துவிரலையு மடக்கி மகா கோபத்துடனே அந்த வெள்ளியங்கிரி யைநோக்கி தாங்கி குத்த, அக்குத்தானது மலையிற் பட்டு சுக்கல் சுக்கலாய் தெரித்து படுசூரணமாய்போக, அந்த மயிலிராவணனுனவன் வெள்ளியங்கிரியிலிரு ந்து கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதுபோல வெளி யிற் புறப்பட்டு அநுமாரைப் பார்த்து புன்னகை கொண்டு சொல்லுகிருன்: அடா வாடா அநுமந்தா! அமரர்கணேயா! என்னுடைய மாய்கையை உன் ஞல் கண்டு பிடிக்கக் கூடுமோ? நானுன்கையி லகப்படுவேனே? என்னுடைய மாய்கை பாரென்று அவர் கண்ணுக்குப் புலப்படாமல் அந்தரத்தியான மாய் ஓடிப்போனுன், ஆஞ்சநேயர் மயிலிராவணன் மாய்கையைப் பார்த்து இவன் திருடன்; இவனைக் கண்டவுடனே பிடியாமற் போவேனே, இன்னம் என்ன மாய்கை செய்வானே, எவ்விதமாய்க் கண்டு பிடிப்பேன் என்றங்கலாய்த்து மறுபடியும் இலங் கைப்பட்டணம் வந்து நானூறு தெருக்களிலுந்தேடி எங்குங் காணுமல் நடுத்தெருவில் நடந்து தேடிக் கொண்டு போகிறபோது, மயிலிராவணனுனவன் தன் னுடைய உத்தியான வனத்திற்குப் போய் உட்கார்ந்து கொண்டு மகா விசாரத்துடனே இனிமேல் என்ன செய்யப் போகிருமென்று மகா துக்காக்கிராந்தனுய் வெளியே புறப்பட்டு நாம் அநுமாருடன் சண்டை செய்யலாமென்ருல் நம்மால் முடியாது, அல்லது மாய் கையால் இருப்போமென்ருல், நம்முடைய மாய்கைக்கு உடன்படுகிறவனல்ல; நாம் இங்கிருந்தால் எவ்விதத் திலும் நம்மைக் கண்டுபிடித்து நம்முயிரை மடித்துப் போடுவான். ஆகையால், நாமிப்போதே தசகண்ட ராவணனிடத்திற்குப் போய் ,இவ்விடத்தில் நடந்த சமாச்சாரமெல்லாம ஆதியோடந்தமாகத் தெரியப் படுத்தி அவனே யழைத்துக்கொண்டுவந்து சண்டைக்

கேகினுல் நலமாயிருக்கும் இல்லாவிட்டால் நாமிப் போது ஒளித்திருப்போமானுல் எவ்விதத்திலும் கண்டு பிடித்து எமபதிசேரும்படி முடிப்பதற்குச் சந்தேக மில்லை பொழுதுவிடியுந் தருணமாயிற்று; அநுமார் அக்கினிப் பிரவேசம் பண்ணுவான். பின் எப்போதும் போலிலங்கைப் பட்டணத்திலே தசகண்டராவணன் சுகமாயிருப்பான்; நாம் சுகமாய்ப் பாதாள லங்கை யைப் பரிபாலனஞ் செய்துக்கொண் டிருப்போமென்று யோசனைசெய்து திடீரென்று புறப்பட்டு தசகண்டராவ ணனை யழைத்து வருவோமென்று யதிசீக்கிரமாய் மாயா சுருபமெடுத்து ஒருவர் கண்ணுக்கும் புலப்படா மல் ஓர் தாமரைக் குளத்தின் நூல் வழியைப்பார்த்து தாள்போட்டாப் போல் அதிசீக்கிரமா யடைத்துக் கிடக்க, அப்போது மயிலிராவணன் தாமரை நூல் தண்டுவழியைத் தட்டி முட்டி இடித்துப் புடைத்து நோக்கிக் குத்தினுன். எது செய்தபோதிலும் வழி விடாம லடைப்பட்டிருக்கப் பார்த்து நான் வரச்சே அந்தச் சக்கர கமலத்திலே யிருக்கிற ஆயிரங்கோடி ராக்ஷதர்களையும் பத்திரமாயிரு வென்று சொல்லி வந் தோமே! அவர்கள்தானிப்படி காவலுடன் பத்திரமா யடைத்துக் கொண்டிருக்கிருர்களோ யாது தெரிய வில்லையென்று மனதிலுத்தேசித்து ராக்ஷதர்கள் பேர் சொல்லி அடா கடகரோமா! அடா சம்புமாலி யென்று அவன் வார்த்தை சொல்லிக் கூப்பிட, அப் போது வாயுதேவன் மயிலிராவணன் கூப்பிடுகிரு னென்றறிந்து, நீ ஆரடாவென்று கேட்க, அப்போது மயிலிராவணன் கேட்டு யாரடா அங்ஙனம் பேசுகிறது; குரல்வேருக யிருக்கிறது; அங்கே ஆயிரங்கோடி ராக்ஷதர்க ளிருந்தார்களே யவர்களிருக்கிருர்களோ? அவர்கள் பேசுங்குரல் வேருகின்றது; உன்பே ரென்ன! உன் ஊரென்னவென்று கேட்க அப்போது வாயுபகவான் ஆரடா! இங்ஙனம் வந்து நீ தானு கூப் பிடுவதென்று கேட்க, மயிலிராவணன் கேட்டு நான் பாதாள விலங்கைக்கரசன் அவ்விடம் யாரிருக்கின் றது; வழிவிடடாவென்று சொல்ல, வாயுபகவான் மயிலிராவணனைப் பார்த்து அடா இலங்கை மன்னு

நீதானு கூப்பிடுவது; நான்தான் வாயுபகவான், அநுமார் கட்டளைப்படிக்கு நானிங்கே வழி காத்திருக்கிறேன்; யாவரையும் விடப்போகா தென்று சொல்ல மயிலிராவணன் வாயுபகவானைப் பார்த்துச் சொல்லுகிருன் :

ஓ வாயுபகவானே! உன் குமாரனும் நானு மனேகம் சண்டை பண்ணினேம்: அப்போது அநுமாரும் கோபம் வந்து பலவிதமாய் தாறுமாரு யடித்து அதம் பண்ணி வந்தார்; அப்போது என்னுடைய மாய்கைகளிலே அவனென்ன செய்தபோதிலும் அதற்கஞ்சாமல் என்பேரில் சண்டைக்கு மிஞ்சாமல் ஆச்சரியமாய் தப்பித்துக் கொண்டேன், ஆகையால், ஆஞ்சநேயர் மகா வல்லமைசாலியென்று வெகுவாய் மெச்சிக்கொண்டேன்: என்னை அவரும் மெச்சிக்கொண்டார். நாங்களொருவருக்கொருவர் சந்தோஷப்பட்டு உன்னுடைய குமாரனுக்குப் பாதாள விலங்கையை பட்டங்கட்டி வைத்தேன்; நான் வெளியே போகவேண்டும்; எனக்கு நீ வழிவிடும் பிள்ளாயென்று சொல்ல, வாயுதேவன் கேட்டு தனக்குள்ளே யோசனைசெய்து மனந்துணிந்து சகலமுமறிந்துக்கொண்டு மயிலிராவணனைப் பார்த்து புன்சிரிப்புக்கொண்டு, அடடா? ராக்ஷதப்பயலே நான் உன்னுடைய மாய்கைக் ககப்படுவேனே ஆஞ்சநேயர் உத்திரவில்லாமல் உன்னைப் போகவிடுவேனே பயித்தியக்காரா போவென்று சொல்ல, அப்போது வீயுபகவான் யோசனை செய்து இந்த மயிலிராவணன் மாயாவினேதி; வேறேவழி பண்ணிக்கொண்டு போனுலும் போவான், நமக்கிந்த வில்லங்கத்தை முன்னமே ஆஞ்சநேயரானவர் நம்மோடு சொல்லிப் போனுரே, யாராகிலும் பலவந்தம் பண்ணினு லென்னை நினையென்று சொன்னுரே. ஆகையால் அநுமாரை அழைப்போமென்று மனதில் நினைத்துக்கொண்டு மயிலிராவணனைப் பார்த்துச் சொல்லுகிருன்: அடா அடா இராக்ஷதப்பயலே! நான் வழிவிட உத்தரவில்லை: நீ யவருக்குப் பட்டங்கட்டி வைத்தேனென்று உன்னை யவர் வெளியே போகச் சொன்னுரென்று சொன்னையே;

அது மெய்யானல் நீ அந்த அநுமாரை யழைத்து வந்து எனக்குச் சொல்வாயானல் யதன்பிறகு உனக்கு நான் வழி விடுகிறேன்; அழைக்காவிட்டால் இப்போதே யந்த அநுமாரை யழைக்கிறேனென்று பிரதிக்கினை கூறி, ஆஞ்சநேயரை நினைத்து ஓ இராம காரிய துரந்தரா! அநுமந்தா! வாருமென்று ஆஞ்சநேயரைக் கூப்பிடுகிறபோது; அவர் இலங்கைப் பட்டணம் நானூறு தெருக்களிலுந் தேடிக்காணமல் விசாரத்துடனே மூத்துக்கோட்டை மேலேறி நான்கு மூலையு மாராய்ந்து பார்த்து கண்ணுக்குப் புலப்படாமல் அங்ஙன முட்கார்ந்து கொண்டு தலைமேல் கையை வைத்து விசாரப்பட்டுக் கொண்டிருக்கிற வேளையிலே வாயுபகவான் யழைக்க திடுக்கென்றெழுந்து வாயு வேக மனோ வேகமாய் ஓடி வரும்போது மயிலிராவணன் ஆஞ்சநேயரைப் பார்த்து நடுநடுங்கி நாமென்ன மாய்கை யெடுத்து மறைந்து போவோமென்று இருந்தாப்போலே யிருந்து ஒரு மதயானையாய் நான்கு கொம்புடனே ஸ்தூல சரீரமெடுத்து ஓடலுற்றான். அப்போது அநுமார் வாயுபகவானே! நீர் யாது காரணமாக என்னை யழைத்தீரென்று கேட்க, வாயு பகவான் ஆஞ்சநேயருக்குச் சொல்லுகிறார்.

வாரும் அநுமாரே! இவ்விடம் மயிலிராவணன் வந்து உமக்குப் பட்டங்கட்டி வைத்தானென்றும் தன்னைவிடச் சொன்னனென்றும் இவ்விதமாய்க் கூறினன். நான் வழிவிடுகிறதில்லை யென்றேன். அப்போது மயிலிராவணன் என்னைப் பார்த்து, நீ வழிவிடா விட்டால் நான்வேறே கள்ளவழி செய்துக்கொண்டுபோவேனென்றான். அவ்வசனங் கேட்டு உம்மை யழைத்தேனென்ன? அநுமார்; ஓ வாயுபகவானே! இப்படிதானல்லவோ என்னுடைய வால்கோட்டையைப் பார்த்து ஏமாற்றி விட்டுப் போனன். அவனுடைய மாய்கை எனக்குத் தெரியும்? பிரமாதிகள் வந்து வழிவிடச் சொன்னலும் விடாதே ஜாக்கிரதையா யிருமென்று ஆக்யாபித்து, அநுமார் மயிலிராவணன் எங்கு ஒளித்திருக்கின்றானேவென்று தேடிக்கொண்டு வரும்போது

ஒரு மதயானை நான்கு கொம்புடனே ஓடப்பார்த்து தூரதண்டியானவள் உபாயமாய் ஒரு விரலாலே யானையை அநுமாருக்குக் காட்ட, அவர் அந்த மத யானையை அதிக வேகமாக துரத்திக்கொண்டு ஓடோடி யும் வந்து ஐந்து விரலையும் முஷ்டியாகப் பிடித்து யானையினுடைய மத்தகஜத்தின்பேரில்குத்த அவ்வானை யானது மத்தகம் பிளந்து வீரிட்டுக்கொண்டு சாக அந்த யானைக்குள்ளிருந்த மயிலிராவணன் வெளியே புறப்பட்டு, ஆஞ்சநேயா! நான் உன் கையிலகப்படு வேனோ? என்னுடைய பராக்கிரமத்தைப் பாருமென்று மாய்கையினாலே ஒரு ரதத்தை சகல ஆயுதங்களோடு மகா உன்னதமாய் க்ஷணநேரத்துக்குள் உண்டுபண்ணி அநுமாரைப் பார்த்து இலங்கை மன்னன் சொல்லு கிறான், அடாவானரா! இதுபரியந்தம் மாய்கையா யிருந்தேன். இனிமேல் தான் மாய்கையை விட்டு இரதாருடனாய் வந்தேன். நான் உன்னை விடத்தக்க தில்லை; இப்போது என்னுடைய பாணப்பிரயோகத் தைப் பாருமென்று மயிலிராவணனானவன் பிர்ம சொரூபியாகிய சிவபிரானைத் துதிக்க, அவரே கதி யென்றெண்ணி தீர்க்காலோசனை பண்ணி தன் வில்லை குணத்தொனிசெய்து நாணேறிட்டு முதுகில் கட்டி யிருந்த அம்புப்பெட்டியில் தன் காத்தைவிட்டு சில சரங்களை எடுத்து மனதில்தானே தூபதீப நைவேத்தி யம்செய்து, மந்திரோபதேசத்தோடு வில்லில் தொடு த்து விடுத்தான். அந்தப் பாணம் வானத்தி லெழும்பி தேவர்கள் நடுங்க மின்னலிடி மழைகளோடுங் கூடி மேகங்களையும் காற்றையும் பர்வதங்களையும் இன்னும் அதிக வியப்படையத்தக்க விநோதங்களையும் காண்பித் தது அதை ஆஞ்சநேயர் பார்த்து ஒரு கணையை யெடு த்து தூபதீப நைவேத்திய முதலியவற்றைச் செய்து வில்லிற்பூட்டி மந்திரோப தேசத்தோடு தொடுத்தார். அக்கணை 1-10-100-1000-பதினாயிரம் - நூறாயிரம் - கோடி - சதகோடி - சங்கம் - மகா சங்கம் என்னும் சகல ஜனங்களும் வேடிக்கைப்பார்க்க நாடிற்று பின் னும் அநுமார் கஜாஸ்திரத்தைத் தொடுத்தார்.

அதுகண்டு மயிலிராவணன் அந்த கஜாஸ்திரத்துக்கு வைரியாகிய கேசப அஸ்திரத்தைவிட்டு அதனை யறுக்க, ஆஞ்சநேயர் சர்ப்பாஸ்திரத்தை எடுத்து விடுத்தார். உடனே இலங்கை மன்னன் அதற்கு வைரியாகிய கருடாஸ்திரத்தை விட்டறுக்க அநுமார் அக்கினியாஸ்திரத்தை யெடுத்துவிட்டார்: அவ்வஸ்திரத்துக்கு வைரியாய் இருக்கப்பட்ட வருணாஸ்திரத்தை விட்டறுத்தான். இன்னு மிருளாஸ்திரத்தை விடுத்தார். உடனே சூரியாஸ்திரத்தை விட்டறுத்தான். மறுபடி சுர யஸ்திரப் பிரயோகஞ் செய்தார். அதையுங் கந்தர்வாஸ்திரத்தை விட்டறுத்தான். இதன்றி, இன்னும் அநேக யாஸ்திரங்களையும் விடுத்தார் அவைகளைப் பாவியாகிய மயிலிராவணன் மூறைமுறையே கண்டித்து வந்தான். இதனைக்கண்ட தேவர்களும் மகிழ்ந்தார்கள். ஆஞ்சநேயரைப் பலவாருகப் புகழ்ந்தார்கள். இப்படி ஒருவர்க்கொருவர் யஸ்திரங்களைத் தோர்வையில்லாமல் பொழிந்தார்கள். அநேகர் உயிர்விட் டழிந்தார்கள். சிலரை நறுக்கிப் பிழிந்தார்கள். போர்க்களத்திலிறந்தார்கள், ரத்தம் பரவியோடின. கணங்கள் ஆனந்தங்கொண்டு பாடின. இப்படி சண்டப்பிரசண்டமா யுத்தம் நடத்தினர்கள். இவ்விதமாய் நடத்தியும் மயிலிராவணன் சண்டைக் கிளையாமல் சகலரும் விரும்பும்படி வில்லை வளைத்து நாணேறிட்டு விற்குணத் தொனிசெய்து வலிய பாணங்களைத் தொடுத்து சிங்கநாதஞ் செய்தான். சோனைமாரிபோலச் சரமாரி பெய்தான். ஆஞ்சநேயர் அவன் தொடுத்து விட்ட பாணங்களை யெல்லா மறுத்துவிட்டு இராமமூர்த்தியை யடுத்து அவரே நமது கடவுளென்றெண்ணி யோசனை பண்ணி அடா மயிலிராவணா! நானினி சோர்வேனென் றெண்ணதே! உன் மனதினி லோசனைப் பண்ணுதே! நானே யுத்தத்தில் கைதேர்ந்தவன்; இராமமூர்த்தியோடு சேர்ந்தவன்; பெரியோ ரனுக்கிரகம் பெற்றவன். ஆகையால், நீ ஜாக்கிரதையா யிரு; இதோ பாரென்று சொல்லி யஸ்திரத்தை யெடுத்து வில்லிற் ெறுடுத்துச் சோனைமாரி பெய்வதுபோலச் சரமாரி பெய்தார்.

அதை மயிலிராவணனுனவன் கண்டு யஸ்திரங்களையெல்லாம் நடுப்பாதியிற் கண்ட துண்டமாகச் செய்து, 1-10-100-1000-அளவுக் கதிகப்படும் பாணத்தை எடுத்தெடுத்து தேரைச் சக்கை சக்கையாய்ப் பேர்த்தெறிந்து கொடியை யறுத்து குடையைப் பூமியிலே தள்ளி குதிரைகளைக் கொன்று சாரதியைவெட்டிவில்லை நறுக்கி நாணியை யறுத்து கவசத்தைப் பொடியாக்கி மார்பைப் பிளந்து உடல் முழுதும் ரத்தமயமாக்கி ரத கஜதுரக பதாதிகளைக் கவிந்து சரங்களைத் தூண்டி கண்டதுண்ட மாக்கினுன். ஆஞ்சநேயர் ஸ்மரணை தப்பி வில்லின்மேலும் மற்ற ஆயுதங்கள் மேலுஞ்செல்லுங் கருத்தைவிட்டு சோர்ந்தாப்போ லிருந்து களை தெளிந்திருந்து, அப்பா! இவன் குருத்துரோகி இவனைச் சித்திரவதை செய்துக் கொல்லவேணும் மரணுவஸ்தைக்குச் சரியான யவஸ்தையை இவனுக்கு உண்டாக்கவேணும் ஒருவேளை ஓடிப்போனுலும் போவான் அவனை விடக்கூடாதென்று கருதி மண்வாரி யிறைத்தாற்போல வில்லை வளைத்து பாணங்களைத் தொடுத்து அவன் தேர் அசையவொட்டாமல் சரக்கூடம் போட்டார். மயிலிராவணன் அதிக கோபங்கொண்டு போர்முகத்துக்குரிய கார்முகத்தை வளைத்து நாணேறிட்டு தேவர்களுஞ் சகல குணத்தொனிசெய்ய, பிறைமுக பாணங்களுடன் சில பாணங்களைத் தொடுத்து தன் தேரை மூடியிருக்கிற பாணங்களை ஆஞ்சநேயர்மீது தூண்டினுன். அநுமாரந்தப் பாணங்களை ஒன்றையாகிலும் விடாமல் அறுத்து மூன்று திவ்வியாஸ்திரங்களையெடுத்தெறிந்தார். அந்தப் பாணங்கள் மயிலிராவணனுடைய திரேகத்தை இரத்தமயமாகச் செய்தது; உடனே மயிலிராவணன் கோபமீறி பற்களை நெறநெற வென்று கடித்து மீசைப் படபடவென்று துடிக்க அட்டகாசஞ்செய்து அளவற்ற கணைகளைத் தொடுத்தான். அக்கணைகளால் ஆஞ்சநேயர் வருத்தமடைவாரென்று யாவருஞ் சொல்லிக்கொண்டிருக்கையில் ஆஞ்சநேயர் அந்தப்பாணங்களையெல்லாம் நடுப்பாதியிற் கண்டித்து அவனேடு என்னேரவரைகரும் போராடுகிறதென்று அட்டகாசஞ் செய்து வில்லினிடமாக சில

பாணங்களை யேவி மயிலிராவணனுடைய தேரைச் சக்கை சக்கையாய்ப் பேர்த்துக் குடையை ஒடித்துத் தள்ளி, சில பாணங்களை விடுத்து குதிரையை சல்லடைக் கண்களாகத் துளைத்து சாரதி தலையை யறுத்து பின்னுஞ் சில கணைகளை மயிலிராவணன் பேரில் பிரயோகஞ்செய்து அவனணிந்து வந்த மகரகுண்டல ஆரகேயூர கடக கங்கண முதலாகிய ஆபரணங்களையும் கவசத்தையும் பொடிப் பொடியாக்கி அவனையும் ரத்த மயமாக்கினர். அதனால் மயிலிராவணன் பிரமை கொண்டு ஒன்றுந் தோன்றாமல் மனங்கலங்கி சற்று மசைவின்றி சித்திரப்பதுமைபோல் நின்றான். அத்தருணத்தில் ஆஞ்சநேயர் தமதுதேரை யருகில்நடத்தி மயிலிராவணனை தேரில் தாவி தன் வில் நாணியினால் அவனை மடல் விரியக்கட்டி தனது தேர் குத்துக்காலிலிருத்தி கட்டி சிங்கநாதஞ் செய்தார். பாதாளமன்னன் மூர்ச்சை தெளிந்து கண்ணை விழித்துப் பார்த்து கர்ச்சித்து கட்டில் நின்று திமிறிக்கொண்டு வெளிப்பட்டு காலாக்கினி உருத்திரனைப் போலாகக் கோபமீறி மறு தேரிலேறி அநுமாரெதிரில்வந்து தேரைத்தூண்டி அநேக தவங்களைச்செய்து வரப்பிரசாதங்களைப் பெற்ற அஸ்திரங்களை விடுத்தான். அதைக் கண்ட ஆஞ்சநேயர் சில அஸ்திரங்களை விடுத்து அவ்வஸ்திரங்களைக் கண்டித்தார்.

இப்படி யிருவரும் காலாக்கினி ருத்திரனைப்போல் சண்டப்ரசண்டமாய் ஒருவர்க்கொருவர் தோர்வையடையாமல் போர் புரிந்தார்கள். அப்போது மயிலிராவணனவன் அக்கினியாஸ்திரம் வருணாஸ்திர முதலான ஆயிரத்தெட்டஸ்திரங்களும் பிரயோகஞ்செய்ய, ஆஞ்சநேயர் அதிக கோபத்துடனே உக்கிராகாரனாய் கண்களில் நெருப்புப்பொறிபறக்க, இருபுஜங்களுந் துடிக்க பற்களை நெறநெறவென்றுகடித்து அவனதுஉதிரத்தை மடமடவென்று குடிக்க, விஸ்வரூபமாய் பதினாயிரம் யோசனை விஸ்தாரமாகத் தோன்றும்படி ஸ்தூல சரீரமெடுத்து மயிலிராவணனைப் பார்த்து அவன் தேரின் பேரில் ஓரறையறைந்தார். அப்போது அவ்வறையி

ளுல் அந்தரதம் அச்சுவேறு ஆணிவேறு கொடுங்கை வேருக சின்னபின்னப்பட்டு பொடிப் பொடியாய் போயிற்று. மயிலிராவணன் ஆஞ்சநேயர் வருகிற குரூர ரூபத்தையும் அவரது தேகத்தையுங் கண்டு மனதில் திகில்கொண்டு நடுங்கி ஒடுங்கி தேரை விட்டுக் கீழே குதித்து கையில் கத்தி கேடயம் பாலா முதலியன பிடித்து படபட வென்று துடிக்கத் தடதடவென்ரோட்டமாக ஓடி வந்து ஆஞ்சநேயருடைய நடுமார்பில் கத்தியினுல் வெட்ட அவர் எமலோகத்தை கிட்ட இவ்விதமாய் தட்ட ஆஞ்சநேயர் யாதொன்றுக்குஞ் சட்டைபண்ணுமல் தன் வாலைக் கீழேவிட்டு மயிலிராவணனுடைய இரண்டு காலையு மெட்டிப்பார்த்து, அடா ராக்ஷதப் பயலே! இனிமேல் எங்கேயாவது ஓடிப்போகலாமோவென் ருலோசிக்கிருயோ வென்று சொல்லி கர்ச்சித்து பதிஞயிரம் யோசனை தூரம் வளர்ந்து அவனுடைய மார்பில் இடதுகாலும் விந்தியாசலபர்வதத்தில் வலது காலும் ஊன்றிக்கொண்டு அந்த விந்தியாசல பர்வதத்தில் ஐந்து குகைகள் நடுவாயிருக்கிற துவாரதகைக் கண்டு அந்த துவாரம் ஐந்தையும் இடது கையால் மூடிக்கொண்டு வலது கையைத் துவாரத்தில் புகவிட்டு தடவிப் பிடிக்கையில் வண்டுகளைந்தும் ஆஞ்சநேயரஸ்தம் வருவதைக் கண்டு வெளியே புறப்பட்டு போவோமென்று வாசலில் வந்து பார்க்கும்போது, அவ்வாசலானது ஆஞ்சநேயருடைய உள்ளங்கையால் மூடியிருப்பதை கண்டு அந்த வண்டுகளானது பறந்து வெளியே புறப்படாமல் மூலைக்கு மூலை ஓடி உள்ளே ஒளித்திருந்தது அவருடைய கையிலகப்படாமலிருக்க, அவர் உபாயமாய் விரலினுலே பிடித்து நகத்தினுலே சேர்த்துக் கொண்டு இரண்டாந் துவாரத்திலிருக்கிற வண்டையும் பிடித்துக்கொண்டு மூன்ருந் துவாரத்தில் கையைவிட்டு அதிலிருக்கிற வண்டையும் பிடித்து நான்காந் துவாரத்தில் கரத்தை செலுத்தி அதிலிருந்ததையும் பிடித்து ஐந்தாம் துவாரத்தில் இருப்பதையும் பிடித்துக்கொண்டு இவ்வைந்தையும் உள்ளங்கையில்டக்கி தேய்த்து மாய்த்துபோட, அந்த வண்டுகளின்

பிராணன் போய்விட அதிவேகமாய் ஓடி இராவணனைத் தேடியலைந்து வந்து அவன் பாதத்திற்பிரவேசிக்க, மயிலிராவணன் தன் பிராணன் தனதுடலிற் புகுந்ததைப் பார்த்து, அவன் சிரசையசைத்து ஆ! இதென்ன ஆச்சரியம்! நமக்கின்றேடே மரணகாலம் நேரிட்டிருக்கின்றது. ஆகையால், இந்த ஆஞ்சநேயர் கையில் வண்டுகளைந்து மகப்பட்டு நடுங்கினதென்றறிந்துக்கொண்டு, ஆகாயவாணி சொன்ன விசேஷத்தையும் ஆஞ்சநேயர் வீராவேசத்தையும் பார்த்துக்கொண்டிருக்கச்சே மயிலிராவணனுக்கு ஞானசாரமானது சம்பூரணமாய் நிறைந்து, ஆஞ்சநேயரைப்பார்த்து தோத்திரம் பண்ணுகிறன். வாரும் அநுமந்தநேயா! வஜ்கரநாமா ஸ்ரீ ராமகாரிய துரந்தரா வாய்வுகுமாரகாயஞ்சனுதேவி புத்திரா ஸ்ரீ ஆரியபரிபூரணு கருணுகரா காருஹைமயா சுவாமி யென்று பலவிதமாய்த் தோத்திரஞ்செய்து சுவாமி நான் செய்த குற்றங்கள் யாவும் பொறுத் திரட்சிக்கவேண்டும், இராமதூதா ராமதுரோகம் பண்ணும் பாவியாகிய நான் உன் பாதாரவிந்தங் காணப்பெற்றேன், வைகுண்டபதவிபெற்றேன் நீர் வந்தகாரிய மீடேறிற்ற; சீக்கிரமாய் நீலமேகனுக்கு பட்டங்கட்டி வைத்து இராமலக்ஷ்மணுளை யெடுத்துக்கொண்டுபோய் இராவண சம்மாரஞ்செய்து வையுமையா வென்று தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்கச்சே பாதாள விலங்கைக் கரசனுகிய மயிலிராவணன் ஜீவனுனது வைகுந்த பதவி யடைந்தது. அவனுக்கு தெய்வலோகத்திலிருந்து புட்பகவிமானம் வந்தது. அந்த புட்பக விமானத்தில் ஏறிக்கொண்டு தேவஸ்திரீகளாகிய அரம்பை. மேனகை, ஊர்வசி, திலோர்த்தமை முதலான ஸ்திரீகள் நடனமாடவும், வெண்சாமரைபோடவும் இவ்வித ஆடம்பரத்துடனே புட்பகவிமானத்தி லிருந்தபடியே ஆஞ்சநேயரைத் தரிசனம் செய்துக்கொண்டு நான்போய் வருகிறேனென்று வீரசொர்க்கத்தை யடைந்தான். அப்போது அந்த பாதாள விலங்கையில் சில இராக்ஷதர்க ளிருக்கப் பார்த்து, ஆரடா ராக்ஷதர்களே! நீங்கள் சீக்கிரமாக நீலமேகன், தூரதண்டி இவர்களை யழைத்து வாரு

மென்று சொல்லவே அக்கணமே அழைத்து வந்தார்கள். தூரதண்டி நீலமேகன் இவ்விருவரும் ஆஞ்சநேயர் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து கைகட்டி வாய் புதைத்துக் கொண்டு நிற்க, ஆஞ்சநேயர் நீலமேகனைப் பார்த்து, அடா வாடா நீலமேகா! இந்த மயிலிராவணனுக்கு விந்தியாசல பர்வதத்தில் வலதுகாலே யூன்றிக்கொண்டு அந்த விந்தகிரி முதலியன எவ்வண்ணம் முடியவேண்டுமோ அவ்வண்ணம் முடித்து வாவென்று கூறி, சூரிய உதயத்துக்கு முன்னே இராமலக்ஷ்மணனைக் கொண்டு போய் இராவண சம்மாரஞ் செய்யவேண்டும்; பின்பு ரூபவதியென்கிற பெண்ணை கலியாணஞ் செய்வித்து, பட்டாபிஷேகம் செய்ய நினைக்கிறேன். ஆகையால், நீ அதிசீக்கிரத்தில் மயிலிராவணனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் முடிப்பித்து வரவேண்டுமென ஆக்யாபித்து ஆஞ்சநேயர் அரண்மனை போய்ச் சேர்ந்தார்.

அப்போது நீலமேகன் அவர் சொல்லியவண்ணம் இராட்சத பிராமணனை யழைத்து அதற்கு வேண்டும் சாமக்கிரியைகள் யாவும் சேகரம் செய்து வைத்துக் கொண்டு மயிலிராவணனுக்கு அக்கினி நமஸ்காரம் செய்வித்து ஸ்நானம்பண்ணி நீலமேகனுந் தூரதண்டிகையும் மற்றுமுள்ள இராக்ஷத பிராமணர் யாவரும் அரண்மனையிலே வந்து ஆஞ்சநேயருக்குத் தோத்திரம் செய்து நின்றார். ஆஞ்சநேயர் மாதங்கியைப் பார்த்து ஓ வாரும் பெண்ணே மாதங்கி! ஆகாயவாணி சொல்லிய வாக்குப்படி உன் குமாரத்தியை நீலமேகனுக்குக் கொடுத்து கலியாணஞ் செய்து வையுமென்று சொல்ல மாதங்கி அநுமாரைப் பார்த்து, ஓ சுவாமி! நான் உமதிஷ்டப்படி செய்கிறேனென்று உறுதிகூறி ரூபவதியை யழைத்துக்கொண்டு கந்த புஷ்ப முதலியது மணிந்து பச்சைப்பந்தல் வாழைக் கமுகுகளால் அலங்கரித்து தம்பதிகள் இருவருக்கும் வெகு விசித்திரமான ஆபரணங்களினு லலங்காரம் செய்து நீலமேகன் ரூபவதி இவ்விருவருக்கும் கலியாணச்சடங்குகள் யாவும் சம்

பிரமத்துடன் முடிப்பித்து மாங்கல்யந் தரிப்பித்து இரத்தின சிங்காதன மிட்டு சகலாடம்பரத்துடன் வீற்றிருக்கச்செய்து சகல ராக்ஷத பிராமணுளைக் கொண்டு சுத்த தீர்த்தங்கள் கொண்டுவந்து அநுமார் முன்னே வைத்தார்கள். அதை அநுமார் அப்போது தங்கக் குடத்திலே யிருக்கிற சுத்த ஜலத்தை நீல்மேகனுக்கு அபிஷேகம் செய்தபினபு நீலமேகனுனவன் சகல ஆபரண பூஷணுய் எழுந்து ஆஞ்சநேயர் பாதார விந்தத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து சிரமேற் கரங்குவித்து ஸ்தோத்திரம் பண்ணினுன். தூரதண்டிபாங்கியர் முதலிய சகலரும் ஆஞ்சநேயர் முன்னே விழுந்து குப்பிட்டு எழுந்து கைகட்டி வாய் புதைத்து நின்ருர்கள். ஆஞ்சநேயர் நீலமேகனைப் பார்த்து ஆசீர்வாதம் செய்து வாரும் பிள்ளாய் நீலமேகனே! நீர் இந்த பாதாள விலங்கையைப் பரிபாலனஞ் செய்துக் கொண்டு சுகமாக ஸ்ரீராமமூர்த்தியின் பேரும் பிரதி ஆரம்பம் எந்த மட்டுக்கும் சாஸ்விதமா யிருக்குமோ அக்காலம் வரையில் சுகஜீவியாய் வாழக்கடவாய்; தர்ம நீதி தவருமல் செலுத்தக்கடவாய்; சகல உயிர்களையும் தன்னுயிர்போல் மன்னுயிரைக் காப்பாற்றி வாழக்கடவாய் என்று சில புத்திமதிகள்கூறி, பின்பு தூரதண்டிகையைப் பார்த்து, ஓ பெண்ணே! நீ கேட்டுக்கொண்ட படிககு நீலமேகனுக்குப் பட்டங் கட்டி வைத்தேன்; நான் போகச் செலவு கொடுமென்று கேட்க, அப்போது தூரதண்டியானவள் சீக்கிரமாகப் போய் பொக்கிஷத்தைத் திறந்து அநேக ஆபரணங்களும் வஸ்திரமும் சந்தன புஷ்ப முதலிய பரிமளத்திரவியங்களும் கொண்டு வந்து ஆஞ்சநேயர் முன்பாக வைத்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கொண்டாள். ஆஞ்சநேயர் தூரதண்டிகையைப் பார்த்துச் சொல்லுகிருர்.

வாரும் பெண்ணே தூரதண்டிகையே! நீ கொண்டு வந்த வெகுமதிகளைப் பார்த்துச் சந்தோஷமாயினதென்று தனதஸ்தத்திஞல் தொட்டு உனது அஸ்தம் பட்டவுடனே எனக்கு மனக்களிப்புண்டாயிற்று; நீ

கொண்டுவந்த பொக்கிஷங் கொண்டுபோய்ச் சேர்ப்பி; அவ்வஸ்துக்குக் கொடுக்கக் காரணமில்லை: யாதென்ருல் சாக்ஷாத் கடவுளாகிய ஸ்ரீராமமூர்த்தியானவர் இராவணசம்மாரம் முடிப்பித்துப் பட்டாபிஷேகம் ஆனபின்பு நானந்த பூஷணாதி திரவியங்களைத்தேடுவேனென்று ஆக்யாபித்து விடை கொடுத்துவிட்டு, பின்பு ஆஞ்சநேயர் மச்சவல்லபனை யழைத்து. வாரும் பிள்ளாய் மச்சவல்லப சிகாமணியே! இப்பாதாள விலங்கையை உன்வச மொப்புவித்தேன்; நீ நீலமேகன் சொற்படி நடந்துகொண்டுவந்து சுகமாயிரு; நான் போய் வருகிறேனென்று ஆஞ்சநேயர் விடைபெற்றுக் கொண்டு சீக்கிரமாய் புறப்பட்டு இராமலட்சுமணனை வைத்திருக்கப்பட்ட விடத்தில் வந்து பூமிதேவியைப் பார்த்து; ஓ வாராய் பூமிதேவியே! இராமலக்ஷமணனை தடையின்றிக் கொடு என்று வினவ, பூமிதேவியானவள் பெட்டியோடு தூக்கிக் கொடுக்க இராமலக்ஷமணனைப் பத்திரப்படுத்தி யிருக்கிற பெட்டியோடு பெற்றுக் கொண்டு அதிசீக்கிரமாய் பாதாள இலங்கையை விட்டு அந்தத் தாமரைத் தடாகத்துள் வந்து அவ்வழி துவாரத்தைப் பார்க்க அவ்வழி மூடப்பட்டிருந்தது. அங்ஙனம் காவலா யிருக்கிற வாயுபகவானைக் கண்டு. ஓ வாயு பகவானே! எனக்குச் சற்றே வழிவிடென்று சொல்லி அவர் பெட்டியை யெடுத்துக்கொண்டு அந்தத் தாமரை நூற்றண்டு வழியாக அதிசீக்கிரத்தில் நடந்து அந்த செந்தாமரைக் கமலத்தில் வந்து சேர்ந்தார். வாயுபகவான் அவரைப்பார்த்து, வாரும் பிள்ளாய் ஆஞ்சநேயா! மயிலிராவணனை சங்காரம்பண்ணி இராமலட்சுமணனை எடுத்துக்கொண்டு வந்தாயா வென்ன, அவர் வாயுபகவானைப் பார்த்து, ஓ வாயுபகவானே! நான் மயிலிராவணனைச் சம்மாரம்பண்ணி ஸ்ரீ ராமலட்சுமணனை இந்தப் பெட்டியோடே எடுத்து வந்தேனென்ன, அப்போ வாயுபகவானனவர் அதிக சந்தோஷத்தை யடைந்தார். அப்போது பாதாள இலங்கையிலிருந்த மச்சவல்லபன் அந்நகரைவிட்டு பாட்டனருந் தகப்பனுமிருக்கிற இடத்தில் வந்து சேர்ந்து அவர்க

ளிருவருக்கும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து கைகட்டி வாய்புதைத்து நின்றான்.

அப்போது வாயுபகவான் ஆஞ்சநேயரைப் பார்த்துச் சொல்லுகிறான். வாரும் ஓ ஆஞ்சநேய தூதா? அரிராம சகாயா; ஸ்ரீ ராமலக்ஷ்மணனை கொண்டு வந்தே னென்றாயே! அவர்களைப் பார்க்க எனக்கு விருப்பமா யிருக்கிறதென்று கேட்க, மச்சவல்லபனும் அவர்களெப்படிப்பட்ட புண்ணிய புருஷரோ! நானும் பார்க்க விருப்பமுள்ளவனா யிருக்கிறேனென்று இருவரும் கூற, ஆஞ்சநேயர் அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து இதோ திறக்கிறேன் பாருங்களென்று பெட்டியைத் திறக்க, அப்பெட்டியிலே இராமலட்சுமண ளிருவரும் நித்திரை செய்திருக்க, அத்தருணத்தில வாயுபகவான் ஆஞ்சநேயர் மச்சவல்லபன் இம் மூவரும் முக்கால்வலம்வந்து ஸ்ரீராமலட்சுமணனுக்கு சாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்து பெட்டியைத் தாட்கொண்டு பூட்டி ஆஞ்சநேயர் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார்: மச்சவல்லபா! நீ இங்கு வந்த காரியமென்னவென்று வினவ, மச்சவல்லபன் சொல்லுகிறான்: ஓ ஆஞ்சநேயரே! நாளையதினம் முதல் காலையில் இராவணனுடனே யுத்தம் செய்ய வேண்டும். ஆகையால், நானே அந்த ராவணனுடைய இராக்ஷதப் பூண்டுகளெல்லா மடித்து வீராவேசப் படுத்தி பின்பு இப்பாதாள விலங்கைக்கு வருவே னென்ன, ஆஞ்சநேயர் மச்சவல்லபனைப் பார்த்துச் சொல்லுகிறார்: வாரும் ஓ மச்சவல்லபா! நீ அவ் விடம் வந்தால் அந்தச் சுக்ரீபன் முதலான யாவரும் இவன் யாரென்று என்னைக் கேட்பார்கள். அப்போ தவர்களுக்கு என்னுடைய பிள்ளையென்று சொல்ல நேரிடும். அப்படி யிருப்பதால் அவர்கள் சந்தேகப் படவும் பரியாசஞ் செய்யவும் விருதாவாகிலும் பிள்ளை யென்று ஒப்பாரி பிடித்துக்கொண்டு வந்தானென்று உனக்கு அபகீர்த்தியாதலால் நீ அவ்விடத்திற்கு வர வேண்டியதில்லை, இந்த இலங்கைப் பட்டணத்தில் சுகமாய் இருவென்று விடைகொடுத்து, வாயு பகவானை

அனுப்பிவிட்டு இராமலட்சுமணனைப் பெட்டியோடே எடுத்துக்கொண்டு வாயுவேகமாய் வரும்போது, சுக்ரீபன்-அங்கதன்-நீலன-நளன்-சாப்புவந்தன் முதலிய யாவரும் ஒன்ருகக் கூடிக்கொண்டு ஆஞ்சநேயர் வரவில்லையே சூரியோதயமாகின்றதே யென்று வருத்தப்பட்டு நான்கு மூலையும் பார்த்துக்கொண்டிருக்குந் தருணத்தில். ஆஞ்சநேயர் வருவது கண்டு அனைவோரும் எதிர்சென்று அழைத்துக்கொண்டு கூடாரம் வந்து சேர்ந்தார்கள். ஆஞ்சநேயரானவர் பெட்டியோடே இராமலட்சுபணனை அசையாமல் எப்போதும் போல முன்னிருந்த விடத்தில் வைத்து பிரதக்ஷணமாய் வந்து குப்பிட்டார்கள். அங்கதன்-நீலன்-சுக்ரீபன்-விபீஷணன் முதலானவர்களெல்லாம் இடம்புரி வலம்புரியாய் வந்து தோத்திரஞ் செய்து நிற்க சூரிய பகவான் உதயகிரி பர்வதத்திலிருந்து தன் கிரணங்களைப் பரப்பி புறப்பட்டான். ஸ்ரீ ராமலட்சுமணனை வைத்திருந்த பெட்டியானது மாயமாய் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போயிற்று. இராமலட்சுமண னிருவரும் நித்திரை தெளிந்து எழுந்திருந்தார்கள். ஆகாயமார்க்கத்திலே சகல தேவதைகளும் புட்பமாரி பொழிந்தார்கள். மங்கள வாழ்த்துப் பாடினார்கள். நான்குமாதரும் நடனமாடினார்கள். தேவகணங்கள் கூத்தாடினார்கள் சகல ஜனமும் பார்க்க ஆச்சரியத்துடனே வந்து கூத்தாடினார்கள். இன்றையதினம் இதென்ன ஆச்சரியமாயிருககிறதென சந்தேகப்பட்டு யாருடனே போர்தொடுப்போமென்று இராமலட்சுமணர் கேட்க, சாம்புவந்தனவன் இந்த பூர்வோத்திரமெல்லாம் ஸ்ரீ ராமமூர்த்திக்கு சவிஸ்தாரமாகச் சொல்லத் தொடங்க ; ஆஞ்சநேயர் சாம்புவந்தரைப்பார்த்து கண்சைகையாய் சொல்லாதே என்ருர். அவர் சைகையை யறிந்துக்கொண்டு இராமலட்சுமணனைப் பார்த்துச் சொல்லுகிருர் : வாருமையா ஜகத்ரட்சகா! ஸ்ரீராமசந்திரா ! யான் சொல்லுகிறேன் சற்றே வினவிக கேளும் வாரும் இதோ ராவணனை சம்மாரம் பண்ணப் போகச்சே தேவர்கள் புட்பமாரி பொழிந்தார்கள், இராமலட்சுமணர் சந்தோஷமடைந்தார்கள் இங்ஙன மிப்படியிருக்க, இலங்கைப்

பட்டணத்தில் இராவணன் ஸ்திரீகளோடு சரசசல்லாப வுல்லாசமாய்ச் சிரித்துக்கொண்டு இருந்தவன் சூரியவுதயத்தில் தேவர்கள் கருடகாந்தருவர் முழங்கப்பட்ட மேளவாத்தியத் தொனிகள் அவ்விடம் கேட்கும்படியான காரணமென்ன? அந்த இராமலட்சுமணனை மயிலிராவணன் கொண்டுபோனதற்கு தேவர்களுக் கித்தனை சந்தோஷம் வரக் காரணமென்ன வென்று அவ்விடத்திலிருக்கிற எட்டுபேர் வேவுக்காரரை அழைப்பித்து அக்கணமே பாதாள விலங்கைக்குச் சென்று மயிலிராவணனிடத்தில் போகாமல் வானரச்சேனையண்டைக்குப் போய் இராமலட்சுமணன் உயிருடனே க்ஷேமமாயிருக்கிறார்களோ அவர்களுடைய செய்தியை விசாரித்துக்கொண்டு வாருங்களென்ன, அந்த உத்தரப்படியே வேவுக்காரர்கள் பாதாளவிலங்கைச் செல்லாமல் வானரசேனை இருப்பிடம் வந்து விசாரிக்குமளவில், இராமலட்சுமணன் சுகமா யிருக்கிறார்களென்று சொல்ல, இராவணன் இதேது ஆச்சரியமா யிருக்கின்றது. மயிலிராவணனைக் கொன்று விட்டார்களோ அல்லது அவன் அவர்களிருவரையும் எடுத்துக்கொண்டு போகாமல் தனியாய்ப் போனானோ வென்று மனதில் பலயோசனைசெய்து எட்டுப்பேர் வேவுகாரரை யழைப்பித்து சொல்லுகிறான்: ஓ தூதர்களே! நீங்கள் சீக்கிரமாகப் பாதாளவிலங்கைக்குப் போய் மயிலிராவணன் இருக்கிறானா இல்லையா வென்று பார்த்து வாருங்களென்று சொல்ல, 8-பேர் வேவுக்காரர் அதிசீக்கிரமாய் பாதாள விலங்கைக்குப் போகவேணுமென்று தாமரைக்குளத்தில் வந்து இராட்சதரெல்லோரும் அங்கு இல்லாதிருப்பதைப் பார்த்து அவ்விடத்தில் நூதனமாய் நீலமேகனு மவன் சேனைகள் யாவரும் காவல் இருப்பதைப் பார்த்து அந்த எண்மரும் சொல்லுகிறார்கள். வாருங்கள் இராட்சதப் பேய்களே! இலங்கையிலிருக்கப்பட்ட நாய்களே! மயிலிராவணன் எங்கே இந்தக் கோட்டையில் ஆயிரங்கோடி ராக்ஷதாள் காவலா யிருந்தார்களே! அவர்களெவ்வாறாயினார்கள்? தசகண்ட ராவணனாலே அனுப்பப்பட்டவர்கள், மயிலிராவணனைக் காண வந்தோம் வழிவிடுங்க

ளென்று எண்வருங்கேட்க, காவலர்கள் சொல்லுகிறார்கள்: ஆரடா நீங்கள் தசகண்டராவணன் பேச்சை எடுக்கவேண்டிய காரணம் என்னவென்று கற்சித்து பற்களை நெறநெற வென்று கடித்து மீசைகள் படபட வென்று துடிக்க கோபங்கொண்டு பிடரியைப் பிடித்துத் தள்ளுங்கள். தள்ளினபின்பு சேதிவந்து சொல்லுங்களென, அப்போது வேவுக்காரர்கள் காவலாயிருக்கப்பட்ட இராக்ஷதாள் காலில்விழுந்து எழுந்து நடுங்கி ஒடுங்கி சொல்ல வேண்டுமென்று வேவுக்காரர்கள் கேட்கக் காவலர்கள் இவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்கள்.

வாருங்கள் வேவுக்காரர்களே! அநுமார் மயிலிராவணனை அதஞ்செய்து நீலமேகனுக்குப்பட்டங்கட்டி ஸ்ரீ ராமலட்சுமணனை எடுத்துக்கொண்டு போனார். ஆகையா லவருடைய உத்தரவில்லாமல் இங்ஙனம் சற்றேனும் நிற்கக்கூடாதென்று சீக்கிரத்தில் நெட்டித் தலைமேற்குட்டி பிடரியைப் பிடித்துக் கழுத்தைக் கடித்துத் தள்ளிவிட்டார்கள். அவர்கள் படைத்த பூசையை ஆசையோடு பெற்றுக்கொண்டு நமக்கு நாசமாகிறகாலம் வந்ததென்று மனதில் விசாரங்கொண்டு அவ்விடம் விட்டு புறப்பட்டு லங்காபுரியை ஆளப்பட்ட ராவணனிடத்தில் வந்து மகா துயரத்துடனே சொல்லுகிறார்கள். வாரும் இலங்காதிபா! மயிலிராவணன் புத்திரமித்திர களத்திராதியுடனே அநுமாரால் எமபுரத்தை யடைந்தான். இராக்ஷதப் பூண்டுகள் சகலமு மழிந்திட்டது. நீலமேகன் பாதாள விலங்கையைப் பட்டங்கட்டிக்கொண்டு அரசுசெலுத்தி வருகிறானென்று சொல்ல அந்த விசேஷத்தை தசகண்டராவணன் கேட்டு சிங்காதனத்தின்மேலிருந்து கீழே விழுந்து கடகடவென்று புரண்டு மூர்ச்சையாகிக் கிடக்கிற இராவணனை மகோதரன் முதலிய மந்திரிகளெடுத்து ஆயாசந் தீரப் பாயாசந்தந்து சோடசோபசாரம் செய்து மூர்ச்சை தெளிவித்து அவனுக்கு தேறுதலை சொன்னார்கள். இராவணன் மந்திரிகளைப் பார்த்துச் சொல்லுகிறான்.

வாரும் மந்திரிமாரே! ஆராய்ந்து சொல்லும் மந்திரிகளே! எனது துயரத்தை என்னுற்சொல்ல முடியுமோ யான் செய்த எத்தனமெல்லாம் அதமாயின. மகா சமர்த்தனனவன் தம்பியும் பிள்ளைகளும் இறந்து போய் என்னையல்லாது யாதொன்றிலும் புத்திசொல்லாது எனது காயமும் பொல்லாது க்ஷணநேரமே நில்லாதென்று மனதிலெண்ணி யோசனைபண்ணி திடங்கொண்டு தன்னுடைய தேரைக் கொண்டுவரச்சொல்லி யானைசேனை பரிவாரம் முதலியவற்றைச் சேர்த்துக் கொண்டு யுத்தகளத்தில் வந்து ஸ்ரீராமமூர்த்திபேரிலெதிர்த்து வில்லைவளைத்து நாணேறிட்டு அநேக பாணங்களை விடுத்தான்.

அதுகண்டு ரகுநாயகரானவர் அதிக கோபத்துடனே நமது கோதண்டத்தை வளைத்து நாணேரிட்டு ராமபாணங்களை யெடுத்து சரவருஷம் பொழிந்தனர். அந்த பாணங்களால் இராவணேஸ்வரனுடைய யானைகள் குதிரைகள், தேர்கள், மந்திரிகள், படைத்தலைவர் முதலிய யாவரும் இரணக்களத்திலே விழுந்தார்கள். இராவணன் தனியாய் நின்று யுத்தஞ்செய்தான். இது கண்ட இராமமூர்த்தியானவர் இதென்ன இவனுடைய போராட்டமே நமக்கு மாருட்டமா யிருக்கிறதென்று கோபங்கொண்டு தன் வில்லினிடமாய் அதி தீக்ஷண்யமான இராமபாணங்களை எடுத்து தொடுத்துவிட்டார். அந்தபாணமானது இராவணனுடைய மார்பிலேபட்டு முதுகிலுருவிப்போயின. இராவணன் தலைகள் பலவாருய்ப் பூமியில் விழுந்தன. பின்பு ஸ்ரீராமமூர்த்தி விபீஷணருக்கு உபசாரஞ்செய்து இராவணேஸ்வரனை யெடுத்துத் தகனஞ்செய்யச்சொல்லி உத்திரவு கொடுத்தார். உடனே விபீஷணர் இராவணனை யெடுத்துத் தகனஞ்செய்து பதினாறுநாள் கருமாதி காரியத்தை நடத்தினர். அதுகண்டு ரகுநாயகர் விபீஷணருக்கு இலங்கைப் பட்டணத்தை பட்டாபிஷேகஞ் செய்து வைத்து சீதாதேவியை அழைத்துக்கொண்டு வாச் சொல்லி, விபீஷணர்-சுக்ரீபர்-அங்கதன்-நளன்-குமுதன்-குமுதாக்கன்-சாம்புவந்தன் முதலிய சேனைத்தலை

வரும், எழுபத்திரண்டு வெள்ளஞ் சேனையும் ரதாரூட ராய் வரச்சொல்லி ஆஞ்சநேயருடன் புறப்பட்டு ஸ்ரீராமலட்சுமணுள் சீதாபிராட்டி சமேதராய் விமானத்திலேறிக் கொண்டு சேனைகள் நடக்கும்படி ஆக்யாபித்து தமது விமானத்தையும் நடத்தி பரத்துவாசர் ஆசிரமத்தி லிறங்கினார்கள். அப்போது ஆஞ்சநேயர் முன்னுதாய்ப் போய் பரதருக்குச் சுகசேதி சொல்ல வேண்டுமென்று ரகுநாயகரிடத்திலே விடை பெற்றுக் கொண்டு அயோத்தியாபுரி பட்டணத்திற்கு வந்து பரதனைக் கண்டு சுவாமி வருகிற சமாச்சாரத்தை ஆதியோடந்தமாகச் சொன்னார், பரதர் சந்தோஷப்பட்டு பட்டணமெல்லாம் அலங்காரஞ் செய்வித்துத் தானும் சத்துருக்கர் முதலானவரோடு தங்கள் தம்பிமார்களையு மழைத்துக்கொண்டு அனேக யானை சேனை குதிரைகளுடன் பட்டணத்திலுண்டாகிய ஜனங்களோடு எதிர்கொண்டு போனார்.

அப்போது ரகுநாயகர் பரத்துவாசர் ஆசிரமத்திலே போஜனஞ்செய்து பரத்துவாசரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு சகல சேனைகளுடனே புறப்பட்டு அயோத்தியை நோக்கி வரும்போது எதிர்கொண்டு வருகிற பரதனைக்கண்டு ரகுநாயகர் இரதத்தை நிறுத்தினார், உடனே பரதர் ஸ்ரீ ராமமூர்த்திக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்தார். ரகுநாயகர் பரதரைக் கட்டிக்கொண்டு ஆலிங்கனஞ் செய்து அதிக சந்தோஷத்துடனே சதுரங்க சேனைகளோடு பிரயாணப்பட்டு தம்முடைய தாயாராகிய கௌசலாதேவி யம்மனை நமஸ்கரித்து கைகேசி சுமித்திராதேவியம்மா ளிருவருக்கும் வந்தனஞ் செய்து சகலபேரையும் தேரிலேற்றிக் கொண்டு சந்தோஷமான சமாச்சாரங்களையுஞ் சொல்லி சகல ஜனங்களுடன் நந்திக்கிராமத்தில் வந்திறங்கி கங்கா ஸ்நானஞ்செய்து வஸ்திராபரணங் கந்த புஷ்ப பரிமள வர்க்கங்கள் முதலியது மணிந்துக்கொண்டு திவ்ய அன்னம்புசித்து தாம்பூலவர்க்கந்தரித்து அதிக சல்லாப உல்லாசமாய் அயோத்தியாபுரி பட்டணத்துக்குப் போய் ஸ்ரீ ராமமூர்த்திக்கு பட்டாபிஷேகஞ் செய்

வித்து சகல பிரஜைகளும் ஆனந்த மடைந்திருக்குந் தருணத்தில் சுக்ரீபர் விபீஷணர் முதலானவர்கள் எழுபத்திரண்டு வெள்ளம் வானரசேனைகளுக்கும் உபசாரஞ் செய்து இராமமூர்த்தியானவர் வசிஷ்டரைப் பார்த்து ஓர் விசேஷஞ் சொல்லுகிறார்.

ஐயா! வாரும் சுவாமி வசிஷ்ட மகாமுனியே? இதோ யிருக்கிற ஆஞ்சநேயர் எங்களுக்கு அநேகஞ் சகாயஞ் செய்திருக்கிறார். அவர் செய்திருக்கிற உபகாரத்துக்குத் தேவராலும் யாவராலும் பிரதி யுபகாரஞ் செய்ய முடியாதென்று ஸ்ரீராமமூர்த்தியானவர் சொல்ல வசிஷ்டர் சொல்லுகிறார்: வாருமையா இராமச்சந்திரா! ஆஞ்சநேயர் அநேக உபகாரங்கள் செய்தாரென்று சொன்னீரே. அவர் செய்த உபகாரத்தை யாவரு மறியார்கள்; இன்னதென்று குறியார்கள். அவர் செய்த காரியார்த்தமென்ன? நம்மை யறியாமல் என்ன அற்புதஞ் செய்தார். நமக்குச் சகல காரியமும் ஞானதிருஷ்டியினால் தெரியும். அவர் செய்த உபகாரத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்க, ரகுநாயகர் விபீஷணரை நோக்கிச் சொல்லச் சொன்னார். விபீஷணர் சாம்புவந்தரைப் பார்த்து ஐயா சாம்புவந்தரே! ஆஞ்சநேயர் மயிலிராவணனைச் சம்மாரம்செய்த சவிஸ்தாரத்தைச் சொல்ல வேண்டுமென்ன, சாம்புவந்தரெழுந்திருந்து பயபக்தி விசுவாசத்துடன் கைகட்டி வாய் புதைத்து ரகுநாதரைத் தோத்திரஞ் செய்து சபைக்கு முன்னின்று சொல்லுகிறார். அநுமாரானவர் தாமரைத் தண்டின் நூல்வழியாகப் போனதும் அவ்விடத்தில் ஆயிரங்கோடி இராக்ஷதர்களைச் சங்காரஞ் செய்ததும், பின் அக்கினிக்கோட்டையில் மச்சவல்லபனோடு போர் புரிந்து மச்சவல்லபனைத் தன்னுடைய பிள்ளையென்று பிறப்பின் தன்மையாலும் வளப்பாலும் அநுமாரறிந்ததும் பின்பு தெப்பக் குளக்கரையில் சேர்ந்து தூரதண்டியைக் கண்டு அவ்விடத்தில் சில சங்கதிகளை யறிந்ததும், துலாயந்திரக் கோட்டை வாயலில் நடந்த வரலாறும். உள்ளே நுழைந்து அக் காளிகோயிலைக் கண்டு சுவாமியை யெடுத்துக்

கொண்டு வந்ததும், மயில்ராவணனை அநேக மாய்கைகள் செய்து அவனைக் கொன்ற விபரமும், தூரதண்டி குமாரன் நீலமேகனுக்கு விவாகஞ் செய்வித்ததும், அப்பட்டணத்தின் சமாச்சாரங்களும், சுவாமியையெடுத்துக்கொண்டு வந்ததையும் ஆதியோடந்தமாகச் சொன்னார். இராமமூர்த்தியானவர் ஆனந்த சந்தோஷத்தை யடைந்து எழுந்திருந்து ஆஞ்சநேயரைத் தழுவிக்கொண்டு புன்சிரிப்பாகச் சிரித்துச் சொல்லுகிறார்: மகா வல்லமையுள்ள புண்ணியவான், யாவருக்குங் கண்ணியவான், உமக்கு நான் என்ன உபகாரம் செய்யப்போகிறேனென்று அநுமாருக்கு ஆசிகள்கூறி வேண்டுவனவற்றைத் தந்து அதிக சந்தோஷத்தை யடைந்திருந்தார்.

இக்கதையை யாரொருவர் படித்தாலும், பக்தி விநயத்தோடு முடித்தாலும், ஒருவர் படிக்கக் கேட்டாலும், படித்தவர்கள் மற்றொருவருக்குச் சொன்னாலும், அதை செவிகொடுத்து கேட்டவர்களை நவக்கிரகங்கள் குரூரஞ் செய்யமாட்டாது. கலிபுருஷனும் அணுகான். இதை தோத்திரம் பண்ணினவர்களும் துதி செய்துக் கொண்டவர்களும் நற்பதவி யடைவார்கள். அவாளவாள் செய்த பாபமொழிந்து பரமபதத்தைப் பெற்று நீடூழி வாழ்வார்கள்.

மயில்ராவணன் கதை

முற்றிற்று.

திருமகள்விலாச அச்சகம், சென்னை-1. 1966.

ஸ்ரீமத் கம்பராமாயண வசனம்

விலை ரூ. 15-00

ஷை உயர்ந்த கிளேஸ் கடிதம் விலை ரூ. 20-00

பெரியஎழுத்தில் டபிள் கிரவுன் 1+8 அளவில் 1600-பக்கங்கள் கொண்டது. கம்பராமாயணச் செய்யுளுக்கிணங்க எளியவசன நடையில் இயற்றியது. 7-காண்டங்கள்: 2-வால்யம். 18-ஆப் டோன் படங்களுடன் அழகாகவும் சுத்தப் பிரதியாகவும் அச்சிட்டு உயர்ந்த காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

"நாடிய பொருள்கைகூடும் ஞானமும் புகழுமுண்டாம்
வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்
நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழியவாகை
சூடிய சிலையிராமன் தோள்வலி கூறுவோர்க்கே"

—கம்பர் வாக்கு

ஸ்ரீ ராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்தஇராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இரிஜனப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடற்கதயனவாம்; இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடைவிக்கும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும், புத்திரபாக்கிய முண்டாகும்; பசு பால் தானியம் முதலியன விர்த்தியாகும்; பில்லி சூனியம் தீராத நோய் பூத பைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷ ஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும். துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்த முண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பலன்கள் உண்டாகி யிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:— **B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை—1.

ஸ்ரீ மஹா பக்தவிஜயம்

1-ம் பாகம் (6-தாஸர்கள் அடங்கியது) விலை ரூ. 7-00

2-ம் பாகம் (12-தாஸர்கள் அடங்கியது) விலை ரூ. 7-00

3-முதல் 6-பாகம் வரையில் (65-தாஸர்கள் அடங்கியது) விலை ரூ. 6-00

ஸ்ரீ பண்டரீபுர க்ஷேத்திரத்தில் கோயில்கொண் டெழுந்தருளி யிராநின்ற பக்தபராதீனனுன பாண்டுரங்கனை வழிபட்டு முக்தி யடைந்ததுளஸிதாசர், நாமதேவர், துக்காராம், பக்தகபீர், ஏகநாதர் கோராகும்பர், புண்டரீகர், சக்குபாய் முதலான 83-பக்தர்கள்சரித் திரங்களை ஸ்திரீ புருஷ பாலர் முதலாயினேர்களும் படித்து ஆனந் திக்குமாறு சுலபவசனநடையில் எழுதப்பட்டு ஆங்காங்குபொருத்த மாக அநேகபடங்கள் சேர்த்தும் வெளியிட்டிருக்கின்றோம். உயர்ந்த காலிகோ கட்டிடம் செய்துள்ளது. பக்திரசம் ததும்பும் சிறந்தநூல்

ஸ்ரீ விஷ்ணு புராண வசனம்

உயர்ந்த கிளேஸ் கடிதம் விலை ரூ. 7-00

இவ்வுலகத்திலுள்ள வைதீக சமயத்தோர் யாவருக்கும் புரு ஷார்த்தங்களைத் தெரிந்துகொள்ள சாதனமாயுள்ளது வேதம். அதன் பொருளை விளங்கும்படி தெரிவிக்கவே புராணங்க ளேற்பட் டிருக்கின்றன; அப்புராணங்களுள்ளும் இராசததாமத புராணங்களி லும் சாத்துவிக புராணங்களே உத்தமமானது; அவைகளிலும் ஸ்ரீ விஷ்ணு புராணமானது மிகச் சிறந்ததென்று வேதாந்திகள் யாவரும் ஒப்புக்கொண் டிருக்கின்றனர். ஏனெனில், ஜகத் காரண வஸ்து எதுவோ அதைபொதுவாய் அருளிச்செய்யவேண்டுமென்று வினவிய மைத்திரேய முனிவருக்கு தத்துவங்களெல்லாம் உண்மை யாய் விளங்கும்படி சகல சாஸ்திர பண்டிதராகிய பராசர முனிவர் உபதேசித்தருளினர். இச் சிறப்பைக் கருதியே இப்புராணம்சிறந்த தெனக் கூறப்பட்டது. மேலும், சித்து, அசித்து, ஈச்சுரன், அவற் றின்சுபாவம், போக மோக்ஷங்கள், அவற்றைப் பெறுமுபாயங்கள், ஆகியவற்றை யெல்லாம் உண்மையாய் அறிவிக்கின்ற கிரந்தமாகும். விஷ்ணு புராணத்தை வாசிப்பதனுல், தத்துவ விவேக முண்டாகும் என்று சங்கராச்சாரியரும் கூறியுள்ளனர். இவ்வருமையானபுராண ரத்தினத்தை தமிழ்ப் பண்டிதர் ஈச்சம்பாடி ஸ்ரீநிவாச ராகவாசாரி யாரால் கீர்வாண பாஷையிலிருந்து தெள்ளிய தமிழ் வசன ரூபமாக மொழி பெயர்க்கப்பட்டது. சுத்தப் பிரதியாக அச்சிட்டு உயர்ந்த காலிகோ கட்டிடம் செய்துள்ளது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 57, வெங்கட்டராமய்யர் தெரு, மிண்ட்போஸ்டு, சென்னை—1.

விநோதரசமஞ்சரி

கிளேஸ் கடிதம் காலிகோ பைண்டு விலை ரூ. 4-00

சென்னை துரைத்தன வித்தியாசாலையில் சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில் பிரதம தமிழ்ப் பண்டிதராயிருந்த **அஷ்டாவதானம் வீராசாமி செட்டியா**ரவர்கள், ஆடவரும் மகளிரும் அவசியமாக அறிய வேண்டிய நூற்களிலுள்ள கருத்துக்களை வகுப்பினுட்படுத்தி யெடுத்து விளக்கியும், அவற்றின் இடையிடையே சமயோசிதமும் சாதுரியமுமாகிய பற்பல பழமொழிகளைச் சேர்த்தும், வாசிப்பவர்களுடைய நாவிற்கு நயமும், செவிக்கின்பமும், மனதிற்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விருத்தியும், பொழுதுபோக்கற்கு உல்லாசமும் தரத்தக்க இனிய செந்தமிழ் வசன நடையில் அவ்விஷயங்களைத் தொகுத்து இயற்றியுள்ளார். அறிவை விருத்தி பண்ணக் கூடிய பல விஷயங்க ளடங்கிய சிறந்த நூலாகும். 440-பக்கங்கள் கொண்டது.

இதிலடங்கிய விஷயங்கள் :

1. தெய்வங்கொள்கை
2. கற்பு நிலைமை
3. சிதவாத்திய விநோதம்
4. கற்றுய்ந்தொழுகல்
5. பயனிலுழவு
6. மகா பண்டிதனைச் சிறு பிள்ளை வென்றது
7. காலபேத வியல்பு
8. நன்றி மறவாமை
9. கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி
10. கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது
11. ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடியது
12. ஒட்டக்கூத்தர் சோழனுக்கு பெண் பேசியது
13. புகழேந்திப் புலவர் நள வெண்பா பாடியது
14. காலமேகப்புலவர் சரித்திரம்
15. ஏகம்பவாணன் சரித்திரம்
16. ஔவையார் சரித்திரம்
17. அவிவேக பூரணகுரு கதை
18. சிறுகூனன் கதை
19. பதிவிரதை சரித்திரம்
20. காளிதாசப்புலவர் சரித்திரம்

கவனிப்பு:—எம்மிடம் கிடைக்கக்கூடிய இதர தமிழ் புஸ்தகங்கள் விவர மடங்கிய விலைப்பட்டி தேவை யுள்ளவர்கள் தங்கள் விலாசத்தைத் தெரிவித்தால் இலவசமாக அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:— **B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,**

57, வெங்கட்ராமய்யர் தெரு, மின்ட் போஸ்ட், சென்னை-1.

புத்தக விளம்பரம்

☞ இதேமாதிரி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட புஸ்தகங்கள் :—

		ரூ. பை
ஸ்ரீமத் கம்பராமாயண வசனம் படங்களுடன்		15-00
ஸ்ரீமத் கந்தபுராண வசனம் 2-வால்யம், 40-படங்களுடன்		15-00
ஆதிபர்வம்		7-00
ஸ்ரீமகா பக்தவிஜயம் 6-தாசர்கள் அடங்கியது		7-00
ஷை 2-ம் பாகம் 12-தாசர்கள் அடங்கியது		7-00
ஷை 3-முதல் 6-பாகம் வரையில் 65-தாசர்கள் அடங்கியது		6-00
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் படங்களுடன்		6-00
விக்கிரமாதித்தன் கதை	,,	5-00
விராடபர்வம்	,,	4-00
தருமர் அஸ்வமேதயாகம்	,,	2-50
பஞ்சபாண்டவர் வனவாசம்	,,	2-00
மதனகாமராஜன் கதை	,,	2-00
அபிமன்னன் சுந்தரிமாலை	,,	1-50
வைகுந்த அம்மானை	,,	1-50
காத்தவராயசுவாமி கதை	,,	1-50
புலந்திரன் தூது	,,	1-50
நளச்சக்கிரவர்த்தி கதை	,,	1-25
அல்லியரசாணிமாலை	,,	1-25
கிருஷ்ணன் தூது	,,	1-00
பவளக்கொடிமாலை	,,	1-00
ஆரவல்லி சூரவல்லி கதை	,,	1-00
புலந்திரன் களவு மாலை	,,	1-00
மரியாதைராமன் கதை	,,	1-00
கோவிலன் கதை	,,	1-00
சித்திராபுத்திரன் கதை	,,	1-00
மயிலிராவணன் கதை	,,	1-00
புரூரவச்சக்கிரவர்த்தி கதை	,,	1-00
கர்னமகாராஜன் சண்டை	,,	0-75
தேசிங்குராஜன் கதை	,,	0-75
பொன்னுருவிமசக்கை	,,	0-75

கிடைக்குமிடம்:— B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 57, வெங்கட்ராமய்யர் தெரு, மிண்ட்போஸ்டு, சென்னை—1.